# சமூக அறிவியல் I

## வகுப்பு X

பகுதி 2

SOCIAL SCIENCE I
Std. 10
Part - 2
Tamil Medium

கேரளஅரசு
கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2019

NT-645-1-SOC.SCI.-I-10-T-VOL.2

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா,
விந்திய ஹிமாசல யமுனா கங்கா,
உச்சல ஜலதி தரங்கா,
தவ சுப நாமே ஜாகே,
தவ சுப ஆசிஸ மாகே,
காகே தவ ஜய காதா
ஜனகண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா.
ஜய ஹே, ஜயஹே, ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு . இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தோர்.எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம்வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமை கொள்கிறேன். அதற் குத்தக நான் என்றும் நடந்து கொள்வேன்.என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.நான் எனது நாட்டினுடையவும், நாட்டு மக்க ளுடையவும் வளத்திற்காகவும், இன்பத்திற்காகவும் முயற்சி செய்வேன்.

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695 012, Kerala
*Website* : www.scertkerala.gov.in
*e-mail* : scertkerala@gmail.com
Phone : 0471 - 2341883, Fax : 0471 - 2341869
Typesetting and Layout : SCERT; Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of Education, Government of Kerala

அன்பு மாணவர்களே

சமூக அறிவியல் கற்றல் என்பது சமூகத்தைப் பற்றிய ஒருங்கிணைந்த கற்றலாகும். மனிதனின் மகத்தான முன்னேற்றமே இதில் விவாதிக்கப்படுகிறது. சமூக, அரசியல், பண்பாடு, சுற்றுச்சூழல் கண்ணோட்டத்தின் வழியாக உண்மைகளைப் பகுப்பாய்வு செய்வதும், மனிதனின் பன்முக வளர்ச்சியினுடைய உருவத்தைக் கொடுக்கும் நிலையிலும் சமூக அறிவியல் கற்றல் அமைய வேண்டும்.

நிகழ்காலத்திற்கும், இறந்தகாலத்திற்கும் இடையேயான நிரந்தரமான உரையாடலே வரலாறு. இறந்த காலத்தைப் பற்றியே கூறுவதாயினும் நிகழ்காலத்தை நோக்கியே ஒளிவீசுகிறது. எதிர்காலத்திற்கான வழியையும் காட்டுகிறது. அரசியல் அறிவியலும், சமூகவியலும், தற்கால வாழ்க்கையின் நேர்காட்சிகளாக புதிய அனுபவத் தளங்களை ஏற்படுத்துகின்றன. குடிமகனுணர்வு, சமூகக் கட்டுப்பாடு ஆகியவற்றை வளர்க்கவும் செய்கின்றன. வேறுபட்ட அறிவியல் பிரிவுகளே என்றாலும் வரலாறு, அரசியல் தந்திரங்கள், சமூகவியல் போன்றவை, பலவித ஒற்றுமைகளை உணர்த்துகின்றன.

மனித சகோதரத்துவம், மனிதவாழ்க்கையின் நோக்கம், மதச்சார்பற்ற குடியரசு உணர்வு போன்றவற்றை வளர்க்கவும், மதிப்பு அறிகின்ற ஒரு சமூகத்தை உருவாக்கவும், சமூக அறிவியலின் கற்றல் பொருத்தமானது என்ற கண்ணோட்டத்தில் இப்பாடப்புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. வரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல் போன்ற பாடப்பகுதிகளை உட்படுத்தி எளிமையாகவும் கவரும் வகையிலும் இப்பாடப்புத்தகம் உங்களிடம் வந்து சேர்கிறது.

சமகிர என்ற கல்விப் போர்ட்டலும், க்யு, ஆர் கோட் பதிவு செய்துள்ள பாடப்புத்தகங்களும் வகுப்பறைக் கற்றல் செயல்பாடுகளை எளிமைப் படுத்துவதுடன் இரசனை மிக்கதாகவும் ஆக்குகின்றன. தேசிய தொழில் திறன் வலைச் சட்டமும் (NSQF) சமகால முக்கியத்துவம் வாய்ந்த பேரிடர் மீட்பு பணிகளையும் ICT வாய்ப்புகளையும் மையமிட்டே இப்பாடப் புத்தகம் மேன்மைப் படுத்தப்பட்டுள்ளது.

உண்மைகளைப் படைக்க, விமர்சிக்க, மதிப்பிட சமூக அறிவியல் பாடப்புத்தகமும், கற்றல் செயல்பாடுகளும் துணைபுரியும். சமூக அறிவியல் கற்றல் சுவையான ஓர் அனுபவமாக மாற்றுவதற்கு இது உங்களுக் குத் தூண்டுதலாகும்; வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் அமையும்.

வாழ்த்துக்களுடன்

**முனைவர். ஜே. பிரசாத்**
இயக்குநர்
SCERT

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# உள்ளடக்கம்

07. சுதந்திரத்திற்குப் பின் இந்தியா 137 – 150

08. கேரளம் நவீன காலத்தை நோக்கி 151 – 170

09. அரசும் அரசியல் அறிவியலும் 171 – 182

10. குடிமகனுணர்வு 183 – 192

11. சமூகவியல் என்ன? எதற்காக? 193 – 202

## இந்தப் புத்தகத்தில் கற்றலை எளிமையாக்குவதற்குச் சில அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன


கூடுதல் வாசிப்பதற்கு- மதிப்பீடு செய்வதற்குச் சேர்க்க வேண்டாம்


கற்றல் மேம்பாட்டைத் தீர்மானிக்கும் வினாக்கள்


செயல்பாடுகள்


மதிப்பிடலாம்


தொடர்ச் செயல்பாடுகள்


ICT வாய்ப்புகள்

## பாடப்புத்தகத்தைப் பற்றி

பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடப்புத்தகத்தின் முதல் பகுதியில் வரலாறு, அரசியல் தந்திர அறிவியல், சமூகவியல் ஆகிய கருத்துகளை உள்ளடக்கி மொத்தம் பதினொன்று அலகுகள் உட்படுத்தப்பட்டுள்ளன. ஏழு அலகுகளிலாக வரலாற்றுப் பாடப்பகுதிகள் விளக்கப்பட்டுள்ளன. முதல் இரண்டு அலகுகளில் உலக வரலாற்றுடன் தொடர்புடையதும் தொடர்ந்து வரும் நான்கு அலகுகள் நவீனகால இந்தியாவின் வரலாற்றுடன் தொடர்புடையதுமாகும். ஓர் அலகு நவீன கேரள மாநிலத்தின் வரலாற்றை விவாதிக்கிறது. வரலாற்றுச் சான்றுகளை இயன்ற அளவு பயன்படுத்தி கருத்துகளை மையமாகக் கொண்ட வெளியீட்டிற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டு பாடப்பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஏழாம் வகுப்பு வரலாற்றுப் பாடங்களுடைய வளர்ச்சி பெற்ற அமைப்பே பத்தாம் வகுப்பில் உட்படுத்தப்பட்டுள்ளன. முன் வகுப்புகளிலுள்ள உள்ளடக்கப் பகுதிகளின் தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் உறுதிப்படுத்தும் நிலையில் பாடப்பகுதிகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன. ஏழாம் வகுப்பில் காலவரையறைக்குப் பொருத்தமாகத் தனி மனிதன், நிறுவனங்கள், பொருட்கள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்ற அணுகுமுறையே கையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் பத்தாம் வகுப்பில் வரலாற்றுப் பகுதிகளை விட கருத்துகளின் பகுப்பாய்விற்கு முக்கியத்துவம் அளித்து வரலாற்றுச் செயல்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு முயற்சிக்கப் பட்டுள்ளது.

நவீன மனிதனுடைய வாழ்க்கைக்குத் தேவையான கருத்துகள், சுதந்திரம், மக்களாட்சி, மதச் சார்பின்மை, தேசியம் போன்றவை உருவானது, பலவிதப் பெருங்கண்டங்களில் ஏற்பட்ட சுதந்திரப் போராட்டங்கள் வழியும் புரட்சிகள் வழியும் ஆகும். இவ்வாறான நவீன கருத்துகளையுடைய சீரான வளர்ச்சியும், பரவுதலும் அறிமுகப்படுத்துதல் என்னும் நோக்கில் பகுப்பாய்வு செய்வதையே உலகில் தாக்கம் செலுத்திய புரட்சிகள் என்ற அலகில் கலந்துரையாடப்படுகிறது. நிகழ்ச்சிகளை விவரிப்பதை விட தாக்கங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. மனித உள்ளத்தில்தான் அவற்றின் தடைகளை ஏற்படுத்த வேண்டும் என்ற கண்ணோட்டமே இந்த அலகினுடைய அடிப்படைக் கருத்து. தொடர்ந்து நவீன இந்தியாவினுடைய வரலாறு கலந்துரையாடப்படுகிறது.

ஆங்கிலேயே ஏகாதிபத்தியச் சுரண்டலும் அதற்கான எதிர்ப்பும் என்ற நிலையில் வளர்ந்து வந்த இந்திய தேசியமும் நவீன இந்தியாவினுடைய வரலாற்றை வடிவமைக்கிறது .

ஆங்கிலேயச் சுரண்டல் இந்தியாவில் வேறுபட்ட மக்கள் பிரிவினரை ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைக்கு -பொருளாதார தேசிய நிலைக்கு எவ்வாறு வழிவகுத்தது? என்பதை ஆங்கிலேயரின் சுரண்டலும், எதிர்த்து நிற்றல்களும் என்ற கலந்துரையாடல் விளக்குகிது.

தேசியம் இந்தியப் பண்பாட்டுப் பகுதியில் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தின என்பதைப் 'பண்பாடும் தேசியமும்' தெளிவுபடுத்துகிறது. இந்தியாவிலுள்ள கற்றோருக்கும், உயர்ந்த பிரிவினருக்குமிடையே மட்டும் நிலவிய தேசியம், சாதாரண மக்களிடையே எவ்வாறு பரவியது என்பதைப் 'போராட்டமும் சுதந்திரமும்' என்ற அலகு விளக்குகிறது.

சுதந்திரத்திற்குப் பின் இந்தியா எதிர்கொண்ட சவால்களும் முன்னேற்றப்பாதையில் இந்தியாவின் பயணமும் ' பற்றி சுதந்திரத்திற்குப் பின் இந்தியா' என்ற அலகு விளக்குகிறது.

'கேரளம் நவீனகாலத்தை நோக்கி' என்ற பாடப்பகுதி நவீனத்தை நோக்கிச் செல்லுகின்ற கேரளாவின் பயணத்தின் பலவித தன்மைகளை ஆய்வு செய்கிறது

அரசியல் அறிவியலின் பகுதியான ' பொதுவான ஆட்சி முறை' என்ற அலகில் இந்தியாவில் பொது ஆட்சி முறையின் அமைப்பையும் தேவையையும் அதன் சிறப்பம்சங்களையும் ஆட்சி சீர்திருத்த முறைகளையும் விளக்குகிறது.

நாட்டினுடைய தோற்றம் , தன்மை, காரணிகள், பொறுப்புகள், குடிமகனுக்கும் நாட்டிற்கும்- இடையேயுள்ள உறவு அரசியல் அறிவியல் கற்றலின் தேவை போன்றவற்றைத் தெளிவு படுத்துவது-அரசும் அரசியல் அறிவியலும் என்ற அலகு.

'குடிமகனுணர்வு' என்ற அலகில்-ஒரு மக்களாட்சி சமூகத்தின் குடிமகனுணர்வின் சிறப்பும் முக்கியத்துவமும் கலந்துரையாடப்படுகிறது.

'சமூகவியல் என்ன எதற்கு?' என்ற அலகு- சமூக அறிவியல் கற்றல் பகுதியினுடயை முக்கியத்துவத்தையும் சமூக அறிவியல் கற்றல் முறைகளையும் விளக்குகிறது.

அறிவு உருவாக்கச் செயல்முறைகளுக்குத் துணைபுரியும் விதத்தில் உள்ளடக்கப் பகுதி களும் ,கற்றல் செயல்பாடுகளும், பிரதிபலிப்பு வினாக்களும், சுயமதிப்பீட்டு வினாக்களும், தொடர்ச் செயல்பாடுகளும் எல்லா அலகுகளிலும் உட்படுத்தப்பட்டுள்ளன. பாடப்புத்தகத் தில் உள்ள வாய்ப்புகளை விரிவுபடுத்தி அறிவுஉருவாக்கலைக் கூடுதல் பயனுள்ளதாக வும், செயல்படுத்தவும் முயற்சி செய்வீர்களல்லவா?

அலகு

07




# சுதந்திரத்திற்குப் பின் இந்தியா

விதியின் சக்கரங்கள் ஒரு நாள் இந்தியாவை விட்டுப் போவதற்கு ஆங்கிலேயர்களைக் கட்டாயப்படுத்தும். ஆனால் எந்த நிலையிலுள்ள இந்தியாவை அவர்கள் விட்டுச் செல்வார்கள். நூற்றாண்டுகளுக்கு மேலான அவர்களின் ஆட்சியினுடைய அருவி இறுதியில் வற்றி வறண்டு போகும் போது விட்டுச் செல்வது சேற்றினுடையவும், அழுக்கினுடையவும் குவியலாக இருக்கும்

இரவீந்திரநாத தாகூர்



இரவீந்திரநாத தாகூர் 1941- ஆம் ஆண்டு நடத்திய ஆய்வே மேல் கூறப்பட்டுள்ளவை. இதன்மூலம் அவர் என்னென்ன கருத்துகளைக் குறிப்பிடுகின்றார்.

- இந்தியாவின் ஆட்சியை ஆங்கிலேயர் விட்டு விடவேண்டி வரும்
- மிகப் பின்தங்கிய நிலையிலுள்ள இந்தியாவைத் தான் ஆங்கிலேயர் விட்டுச்செல்வர்.

சுதந்திர இந்தியா எதிர்கொண்ட முக்கியச் சவால் இந்தியப் பிரிவினையும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அகதிகளின் வருகையுமாகும்.

## அகதிகளின் வருகை



மேலே கொடுக்கப்பட்டுள்ள படத்தைக் கவனிக்கவும். இது குடும்ப உறுப்பினர்களுடனும், உடமைகளுடனும் பயணம் செய்கின்ற அகதிகளாகிய மக்களின் படமாகும். இந்தியப் பிரிவினைக் காலத்திலுள்ள இந்தியாவின் சாதாரண காட்சியே இது.

NT-645-2-SOC.SCI.-I-10-T-VOL.2

அக்காலத்தில் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானிற்கும், பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கும் அகதிகள் வந்து சேர்ந்தனர். இத்துடன் நாட்டின் பல இடங்களிலும் இனக்கலவரங்கள் நடைபெற்றது. கல்கத்தா, பீகார், நவகாளி, தில்லி, பஞ்சாப், காஷ்மீர் என்ற இடங்களில் நடைபெற்ற கலகங்கள் இரத்தக் களரியை ஏற்படுத்தியது. ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படவும், பெண்கள் ஆக்கிரமிக்கப்படவும் செய்தனர். இதன் விளைவாக எல்லாவற்றையும் இழந்து குடியிறங்கிய பல பிரிவினர்கள் அகதிகளாக மாறினர். கால்நடையாகவும், மாட்டு வண்டியிலும், இரயில் மூலமாகவும் பத்து தச இலட்சம் பேர் அகதிகளாக வந்தனர். சுதந்திர இந்தியாவினுடை.ய அரசாங்கத்தின் தகுந்த தலையீட்டாலும், புனரமைப்பு நடவடிக்கைகளின் வழியாகவும் அகதிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடிந்தது.



**காந்திஜியின் உயிர்த்தியாகம்**

“ நம்முடைய வாழ்க்கையில் ஒளி மறைந்து போய்விட்டது. எங்கும் இருள் சூழ்ந்துள்ளது.” காந்திஜியின் மரணத்தைக் குறித்து நேரு கூறிய வார்த்தைகளாகும். இந்தியாவை ஆங்கில ஆட்சியிலிருந்து விடுவிப்பதற்கு தலைமை தாங்கிய காந்தியடிகள் 1948- ஆம் ஆண்டு ஜனவரி 30- ஆம் நாள் டில்லியில் ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் வைத்து நாதுராம் விநாயக கோட்சேயால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தியப் பிரிவினைக்குப் பின்னர் நடைபெற்ற வகுப்புவாதக் கலவரங்களின் விளைவே காந்திஜியின் உயிர்த் தியாகம்.

## நாட்டரசுகளின் இணைப்பு



**சுதந்திர இந்தியாவில் அகதிகள் கூட்டமாக வருவதற்குக் காரணமான சூழ்நிலைகளைக் கலந்துரையாடவும்.**

சுதந்திரத்திற்கு முன்பு இந்தியாவில் ஆங்கிலேயர்களின் நேரடி ஆட்சியிலிருந்த பகுதிகளும், அவற்றைத் தவிர பிரிட்டனின் கட்டுப்பாட்டிலிருந்த 600 -க்கும் அதிகமான நாட்டரசுகளும் இருந்தது. இந்நாட்டரசுகளுக்கு இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ சேருவதற்கோ அல்லது சுதந்திரமாகத் தனித்து நிற்பதற்கோ உரிய அதிகாரத்தை வழங்கி விட்டு பிரிட்டன் இந்தியாவிலிருந்து வெளியேறியது. ஆகையால் சுதந்திர இந்தியா எதிர்கொண்ட மற்றொரு முக்கிய பிரச்சினை நாட்டரசுகளை இந்திய யூனியனுடன் இணைப்பது என்பதாகும். இது சிக்கலான ஒரு கடமையாக இருந்தது. மத்திய அமைச்சரவையில் மாநிலங்களுடன் தொடர்புள்ள துறையின் பொறுப்பு சர்தார் வல்லபாய் பட்டேலிடம் இருந்தது. . மத்திய உள்துறைச் செயலாளராக வி. பி. மேனோன் என்னும் மலையாளியை அவர் நியமித்தார். .

நாட்டரசுகளை இந்திய யூனியனோடு இணைப்பதற்காக படேலும், வி. பி.மேனோனும் சேர்ந்து ஓர் இணைப்பு ஒப்பந்தத்தை (Instrument of Accession) தயாராக்கினர்.வெளிநாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு, தகவல் தொடர்பு ஆகிய மூன்று துறைகளும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும் என்பதே அவ்வொப்பந்தம். மக்களது எதிர்ப்பினாலும், இந்திய அரசின் தூண்டுதலினாலும் பெரும்பாலான நாட்டரசுகளும் இந்திய அரசோடு ஒரு இணைப்பு ஒப்பந்தத்தில்

கையொப்பமிட்டு இந்தியன் யூனியனோடு இணைந்தன. ஆனால் ஜுனாகட், ஹைதராபாத், காஷ்மீர் ஆகிய மூன்று நாட்டரசுகளும் இந்தியன் யூனியனில் இணைய மறுத்தது. பின்னர் சமாதானத்தின் மூலமும், இராணுவ நடவடிக்கையின் மூலமாகவும் இவை இந்திய யூனியனோடு சேர்க்கப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்னரும் பிரான்ஸ், போர்ச்சுகல் போன்ற ஐரோப்பிய நாடுகளின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகள் இந்தியாவில் இருந்து வந்தது. அப்பகுதிகளில் வலுவான மக்கட் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தன. இத்துடன் பிரான்ஸ் தன் அதிகாரத்திலிருந்த பகுதிகளை இந்தியாவிற்கு கைமாறியது. இராணுவநடவடிக்கைகளின் மூலம் போர்ச்சுகலின் அதிகாரத்திலிருந்த பகுதிகளும் இந்திய யூனியனோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது. தரப்பட்டுள்ள அட்டவணையில் இது விளக்கப்பட்டுள்ளது.

### பிரிவினை திரைப்படத்தி

பிரிவினைக் காலத்தின் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட ஏராளமான திரைப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. ரத்திக் கட்டக்கின் மேஹே தாக்கதாரா, எம். எஸ் . சத்யூவின் கரம் ஹவா, கோவிந்த் நிகலானியின், தமஸ், பமேலா ரூக்சின் டிரெயின் டு பாக்கிஸ்தான் போன்றவை பிரிவினைக் காலத்து பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் பட்ட முக்கியமான திரைப்படங்களாகும்.



*சர்தார் வல்லபாய் பட்டேல்*

### வி. பி. மேனோன்




1894–ஆம் ஆண்டு பாலக்காடு மாவட்டத்திலுள்ள ஒற்றப்பாலம் என்ற இடத்தில் பிறந்தார். பள்ளிப்படிப்புக்கு பின்னர் பலதுறைகளிலும் பணிபுந்து வந்துள்ளார். பின்னர் டில்லி தலைமைச் செயலகத்தில் குமஸ்தாவாக பணிபுரிந்தார். ஆங்கில மொழியில் சிறந்த புலமை பெற்றிருந்ததால் அவருக்கு ஏராளமானப் பொறுப்புகளை அரசாங்கம் அளித்தது. சர்தார் வல்லபாய் படேல், பண்டிட் ஜவஹர்லால் நேரு ஆகியவர்களுடன் சேர்ந்து நாட்டரசுகளின் இணைப்பில் விபி, மேனோன் முக்கியமான பங்கு வகித்துள்ளார். 1952– ஆம் ஆண்டு ஒரிஸா ஆளுநராக நியமிக்கப்பட்டார். “ த டிரான்ஸ்பர் ஆப் பவர் இன் இந்தியா, இன்டகிரேஷன் ஆப் இந்தியன் ஸ்டேட்ஸ் என்ற நூல்களின் ஆசிரியராவர்.

| நாடு | அதிகாரத்திலுள்ள பகுதிகள் | இந்தியாவுடன் இணைக்கப்பட்ட வருடம் |
|---|---|---|
| • பிரான்ஸ் | • பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, யானம் | • 1954 |
| • போர்ச்சுகல் | • கோவா, டாமன், டையு | • 1961 |



## அரசியல் அமைப்பு உருவாக்கமும் தேர்தலும்



டா. இராஜேந்திர பிரசாத்

இந்திய நாட்டு உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தது இந்திய அரசியல் அமைப்பாகும்.

காபினட் குழுவின் பரிந்துரையின்படி 1946– ஆம் ஆண்டு டாக்டர் இராஜேந்திர பிரசாத்தை தலைவராகக் கொண்ட அரசியலமைப்பு உருவாக்கச் சபை ஏற்படுத்தப்பட்டது. அரசியல் அமைப்பை எழுதி தயார் செய்வதற்காக பி. ஆர். அம்பேத்கார் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு டிராப்ட் கமிட்டி நியமிக்கப்பட்டது. பலமுறையாக நடைபெற்ற கலந்துரையாடல்கள் மூலமும், விவாதங்கள் மூலமும் அரசியல் அமைப்பிற்கு வடிவம் கொடுக்கப்பட்டது. இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் எழுந்த கொள்கைகளின் விளைவு தான் இந்தியஅரசியல் அமைப்பு. 1950– ஆம் ஆண்டு ஜனவரி 26 – ஆம் நாள் சுதந்திர இந்தியாவினுடைய அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வந்தவுடன் இந்தியா தன்னை ஒரு குடியரசு நாடாக அறிவித்தது.


டா. பி. ஆர். அம்பேத்கார்

சுதந்திர இந்தியா எதிர்கொண்ட இன்னொரு பிரச்சினை மக்களாட்சிக் கொள்கையின் உருவாக்கமாகும் இந்திய அரசியலமைப்பிற்கேற்றவாறு இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடந்தது 1951– 1952 காலகட்டத்திலாகும். சுதந்திரம், நேர்மையானதுமான முறையில் நடந்த முதல் தேர்தல் இந்திய மக்களாட்சியினுடைய வெற்றியாக இருந்தது. இந்திய சுதந்திரப் போராட்ட அமைப்பு எடுத்துரைத்த மக்களாட்சி மதிப்புகளின் சிறந்த பரம்பரைத் தன்மைகளைத் தான் நமது தேர்தல்களில் இன்றளவும் பின்பற்றப்படுகிறது. இந்தியாவுடன் சுதந்திரம் பெற்ற ஆசியா, ஆப்ரிக்கா போன்ற பெரும் பாலான நாடுகளும மக்களாட்சியிலிருந்து விலகிக் கொண்டிருக்கின்ற வேலையிலும் இந்தியாவின் கொள்கை இன்றளவிலும் உறுதியாக நிலைகொள்கிறது.



இந்திய அரசியலமைப்பு

அரசியலமைப்பு உருவாக்கத்தின் பல்வேறு நிலைகளையும் அதனுடன் தொடர்புள்ள நபர்களையும் உட்படுத்தி ஒரு பிரசன்டேசன் தயாரிக்கவும்.



**இந்தியாவின் மக்களாட்சியைப் பாதுகாப்பதில் அரசியல் அமைப்பு ஆற்றுகின்ற பங்கினைக் குறித்து கலந்துரையாடவும்.**


## மொழியின் அடிப்படையில் மாநிலங்களின் உருவாக்கம்

நாட்டரசுகளின் இணைப்பைக் குறித்து நாம் கலந்துரையாடினோம் அல்லவா. இந்த நாட்டரசு எதிர்கொண்ட முக்கிய பிரச்சினை மொழியுடன் தொடர்புடையதாக இருந்தது. ஒரே நாட்டரசில் வசிப்பவர்கள் வேறுபட்ட மொழிகளை பேசக்கூடியவர்களாக இருந்தனர். எனவே மொழியின் அடிப்படையிலேயே மாநிலங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்ற தேவை இந்தியாவின் பல பகுதிகளிலும் எழுந்தது.


போற்றி ஸ்ரீ ராமுலு

1920- ஆம் ஆண்டு நடைபெற்ற நாக்பூர் காங்கிரஸ் மாநாட்டிலேயே மொழிகள் அடிப்படையில் மாநில காங்கிரஸ் கமிட்டிகள் உருவாக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. சுதந்திரத்திற்கு பிறகு மொழியின் அடிப்படையில் மாநிலங்கள் உருவாக்க வேண்டுமென்ற கருத்துகளை வலியுறுத்திக் கொண்டு மக்கள் போராட்டங்கள் ஆரம்பமானது தெலுங்கு மொழி பேசுபவர்களுக்காக ஆந்திரமாநிலம் உருவாக்கப்பட வேண்டும் என்ற தேவையை வலியுறுத்திச் சுதந்திரப் போராட்ட வீரரான போற்றி ஸ்ரீராமுலு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். 58 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு உயிர்த்தியாகம் செய்தார். இது போராட்டத்தை தீவிரமாக்கியது. அதைத் தொடர்ந்து தெலுங்கு மொழி பேசுகின்றவர்களுக்காக ஆந்திரப்பிரதேசம் மாநிலம் 1953- ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மொழி அடிப்படையிலான மாநிலம் வேண்டுமென்ற வாதம் வலுப்பெற்றது. மொழியின் அடிப்படையில் மாநிலங்களைப் புனரமைக்கப்படுவதற்காக மாநில புனரமைப்பு ஆணையம் நிறுவப்பட்டது. ஃ பஸல் அலி இந்த ஆணையத்தின் தலைவராக இருந்தார். ஹெச். என். குண்ஸ்ரூ, மலையாளியான கே.எம் பணிக்கர் முதலான வர்கள் இதனுடைய பிற அங்கத்தினர்களாவர்.


ஹஸன் அலி


கெ. எம். பணிக்கர்


எச். என். குண்ஸ்ரூ

இந்த ஆணையத்தின் பரிந்துரையின் படி 1956- ஆம் ஆண்டு இந்திய மாநில புனரமைப்புச் சட்டத்தைப் பாராளுமன்றம் அங்கீகரித்தது. இதனடிப்படையில் பதினான்கு மாநிலங்களும், ஆறு மைய ஆட்சிப் பகுதிகளும் உருவாக்கப்பட்டன.

பின்னர் கட்டம் கட்டமாக புதிய மாநிலங்கள் நடைமுறைக்கு வந்தன. தற்பொழுது இந்தியாவில் இருபத்தி ஒன்பது மாநிலங்களும் ஏழு மைய ஆட்சிப் பகுதிகளும் உள்ளன.

இந்தியாவின் 29 மாநிலங்களையும் 6 மைய ஆட்சிப் பகுதிகளையும் உட்படுத்தி கற்றல் வளம் தடாரிக்கவும்.

சுதந்திர இந்தியா மாநில புனரமைப்பிற்கான நிபந்தனையாக மொழியை ஏற்றுக் கொண்டது ஏன்?



## பொருளாதாரத் துறையின் முன்னேற்றங்கள்

சுதந்திர இந்தியாவினுடைய பொருளாதார நிலமை மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்தது. உலக அளவில் அன்று காணப்பட்ட முதலாளித்துவ, சோஷலிச பொருளாதாரக் கொள்கைகளின் பொதுக்கருத்துகள் அடங்கிய கலப்பு பொருளாதாரக் கொள்கையை (Mixed Economy) இந்தியா ஏற்றுக்கொண்டது. இது பொதுத் துறைக்கே முக்கியத்துவம் கொடுத்தது.

### திட்டக் குழு


1950 மார்ச் 15 ஆம் நாள் திட்டக்குழு நடைமுறைக்கு வந்தது. பிரதம மந்திரியாக இருந்த ஜவஹர்லால் நேரு தலைவராகவும், குல்ஸாரிலால் நந்தா துணைத்தலைவராகவும் இருந்தனர். டி. டி. கிருஷ்ணமாச்சாரி , சி. டி. தேஷ்முக் போன்றவர்கள் உறுப்பினர்களாவர்.

சுதந்திரத்திற்குப் பின் ஜவஹர்லால் நேருவின் தலைமையிலுள்ள அரசாங்கம் பொருளாதார முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு ஏராளம் திட்டங்களை நிறைவேற்றியது. இத்திட்டங்களில் பெரும்பாலானவையும் சுதந்திரப் போராட்ட காலத்தில் நடைபெற்ற பல காங்கிரஸ் மாநாட்டிலும் விவாதிக்கப்பட்டவையாகும். அவற்றில் முக்கியமானது மையப்படுத்தப்பட்ட பொருளாதாரத் திட்டமாக இருந்தது. சோவியத் யூனியனிடமிருந்துதான் இந்தியா பொருளாதாரத் திட்டம் என்ற கருத்தைப் பெற்றுக் கொண்டது. இந்தியப் பொருளாதாரத்தின் வரலாற்றைக் குறித்து முன் வகுப்புகளில் கற்றுள்ளதை நினைவு கூர்வீர்களல்லவா?

சுதந்திரத்திற்குப் பின்னர் பொருளாதாரத் திட்டமிடல் நிகழ்ச்சிகளின் வலிமை கூடியது. 1950- ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேருவின் தலைமையில் திட்டக்குழு ஏராளமான திட்டங்களை முன்வைத்தது.


நேரு திட்டக்குழுக் கூட்டத்தில்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு திட்டக்குழு நடைமுறைப்படுத்திய திட்டங்களே ஐந்தாண்டுத் திட்டங்கள். 1951- ஆம் ஆண்டு ஆரம்பித்த ஐந்தாண்டுத் திட்டங்கள் வளர்ச்சி செயல்பாடுகளில் அதிகமாக முன்னேறுவதற்கு இந்தியாவிற்கு உதவியது. வேளாண் துறை- தொழில்துறை இவற்றை முன்னேற்றமடையச் செய்யவும், வறுமையை ஒழிப்பதற்கும் ஆற்றல் உற்பத்தி செய்வதற்கும், கல்வித்துறையின் வளர்ச்சிக்கும் இது உதவியாக இருந்தது.


பக்ராநங்கல் அணைக்கட்டு

பொருளாதார வளர்ச்சிக்காக வெளிநாடுகளின் உதவியும் இந்தியாவிற்கு கிடைத்தது. வெளிநாடுகளின் உதவியினால் இந்தியாவின் பல பகுதிகளிலும் இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

| இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள் | உதவி புரிந்த நாடுகள் |
|---|---|
| • பிலாய் | • சோவியத் யூனியன் |
| • பொக்காரோ | • சோவியத் யூனியன் |
| • ரூர்கேலா | • ஜெர்மனி |
| • துர்காபூர் | |


இந்தியாவின் பொருளாதாரத் துறையிலான, நவீனமயமாக்கலில் பெரிய அணைக் கட்டுகள் முக்கியமான பங்கு வகித்தது. வேளாண்மைக்குத் தேவையான நீர்பா சன வசதியும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின்சார வசதியும் இதிலி ருந்து கிடைத்தது. இந்தியாவிலேயே மிகப்பெரிய பல்நோக்கு திட்டமான பக்ரா நங்கல் அணைத்திட்டம் சுதந்திர இந்தியாவின் மிகப்பெரிய சாதனையாகும்.

நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கப் பெற்றதனால் இந்தியாவில் வேளாண் பொருள் உற்பத்தி பெரும்அளவு அதிகரித்தது. வீட்டு வசதி, கால்நடை கள் பராமரிப்பு, சுற்றுப்புறச்சூழ்நிலைகளின் வளர்ச்சி போன்ற குறிக்கோ ளுடன் தேசிய அளவில் ஐம்பத்தைந்து திட்டங்கள் 1952- அக்டோபர் 2 ஆம் நாள்( மகாத்மா காந்தியின் பிறந்த நாள்) தொடங்கப்பட்டது.

1990 -ஆம் ஆண்டளவில் இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையில் எடுத்துக் கூறும் நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டது. பொதுத்துறைக்கு பதி லாகத் தனியார் துறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

பொறியியல், வேளாண் ஆராய்ச்சி, சுற்றுலா திட்ட மிடல் ஆகியவற்றுடன் தொடர்புடைய வேலை வாய்ப்புகளைப் பகுப்பாய்வு செய்யவும்

**சுதந்திர இந்தியாவின் பொருளாதாரத்துறையிலுள்ள வளர்ச்சியைக் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடல் நடத்தவும்.**




சுதந்திர இந்தியா பொருளாதாரத்துறையில் கையாண்ட நடவடிக்கைகளின் சிறப்புத்தன்மைகள் எவையெல்லாம்?



## அறிவியல் - தொழில்நுட்ப சாதனைகள்

சுதந்திர இந்தியா அறிவியல் தொழில் நுட்பச் சாதனைகளில் குறிப்பிடத்தக்க முன் னேற்றத்தை அடைந்துள்ளது. இந்தியாவினுடைய வேளாண்மை வளர்ச்சியிலும், தொழில்மயமாக்கலிலும் தொழில்நுட்பக் கல்விக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக் கும் முக்கியமான பங்குண்டு. நவீன அறிவியலில் விருப்பமுடைய நேருவின் தலைமையில் அறிவியல் தொழில்நுட்பத்துறைகளில் இந்தியா வியக்கத்தக்க சாதனைகளை அடைந்துள்ளது. ஏராளம் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங் கள் ஆரம்பிக்கப்பட்டது . அவற்றுள் சில கீழே தரப்பட்டுள்ளது.



*ஹோமி ஜஹாங்கீர் பாபா*

- அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கழகம் (Council of Scientifc and Industrial Research)
- இந்திய வேளாண்மை ஆராய்சிக் கழகம் (Indian Council for Agricultural Research)
- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (Indian Council of Medical Research)

அறிவியல் தொழில்நுட்ப ஆராய்சிக் கழகத்தின் திட்டங்களுக்கு தலைமை தாங்கியது ஹோமி ஜஹாங்கீர் பாபாவும், எஸ். என். பட்னாகருமாவார். ஹோமி ஜஹாங்கீர் பாபா தலைமை தாங்கிய அறிவியல் நிறுவனம் டாட்டா இண்ஸ்டிடி யூட் ஆஃப் பண்டமென்டல் ரிசர்ச். இந்திய அணு சக்தி நிறுவனம் போன்ற வையாகும்.



*என். எஸ். பட்னாகர்*

உலகத்தரம் வாய்ந்த பொறியியல் கல்லூரிகள் ஏராளம் அக்காலத்தில் நிறுவப்பட்டன. ஐந்து இந்தியன் இன்ஸ்டிடியூட்ஆப் டெக்னாலஜிஸ்( IIT),1954-ற்கும் 1964-ற்கும் இடையில் நிறுவப்பட்டது. அறிவியல் கருவிகளையும் அறிவையும் பொறுத்தமட்டில் மேற்கத்திய நாடுகளைச் சார்ந்திருக்கும் தன்மையைக் குறைக்க வேண்டும் என்ற நேருவின் கண்ணோட்டமே இதற்கு அடிப்படையாக அமைந்தது. மேலும் மருத்துவக் கல்வி, பயோ மெடிக்கல் பொறியியல் கல்வி, மரபணு அறிவியல், உயிரியல், தொழில்நுட்பக் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, பெருங்கடல் ஆய்வு, தகவல் தொழில்நுட்பக் கல்வி, அணுசக்தி போன்ற துறைகளில் இந்தியா மிகுந்த சாதனைகளை அடைந்துள்ளது.



ஐ. எஸ். ஆர். ஓ. தலைமையிடம் பெங்களூரு

## இந்தியாவும் விண்வெளி ஆராய்ச்சியும்

சுதந்திரத்திற்கு பின் விண்வெளி ஆராய்ச்சி துறையில் இந்தியா ஏராளம் ஆராய்ச்சிகள் நடத்தியுள்ளது. 1962- ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேருவினுடையவும், அறிவியல் விஞ்ஞானியான விக்ரம் சாராபாயினுடையவும் முயற்சியின் பலனாக இந்திய தேசிய விண்வெளி ஆராய்சிக்கழகம் நிறுவப்பட்டது. பின்னர் 1969- ஆம் ஆண்டு இந்திய தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. பின்னர் இந்திய விண்வெளி ஆராயச்சியினுடைய தலைமைப் பொறுப்பு இந்நிலையத்தின் கீழ்வந்தது திருவனந்தபுரத்திற்கு அருகில் உள்ள தும்பா என்ற இடத்தில் முதல் ஏவுகணை செலுத்தும் நிலையம் நிறுவப்பட்டது.



வி.எஸ். எஸ். ஸி தும்பா

இந்திய விண்வெளி ஆராய்ச்சியாளர்களின் முயற்சியின் பலனாக 1975 ஆம் ஆண்டில் ஆரியபட்டா என்ற செயற்கைக்கோள் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது. செயற்கைக் கோளைத் தவிர அவற்றை விண்ணிற்கு அனுப்பும் வாகன உற்பத்தியிலும் இந்தியா முன்னேறியுள்ளது. செயற்கைகோளைத் தயாரிப்பதற்கும், விண்வெளியில் செலுத்துவதற்கும் திறமையுள்ள ஒரே ஒரு வளரும் நாடு என்ற பாராட்டைப் பெறுவதற்கு இந்தியாவுக்கு இயன்றது. நேருவினுடைய தொலைநோக்குப் பார்வையினால் மட்டுமே செயற்கைக் கோளைத் தயாரிப்பதில் அநேக முகமைகள் இன்று நாட்டில் உள்ளது. அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளவையாகும்.

C3YUND



ஆரியப்பட்டா

- தேசியத் தொலை நுண்ணுணர்வு முகமை.
- பௌதீக ஆராய்ச்சி ஆய்வுக்கூடம்.

ஏவுகணைத் தொழில்நுட்பக் கல்வியிலும் இந்தியா முன்னேற்றம் அடைந்துள்ளது. அக்னி, பிரித்வி போன்ற ஏவுகணைகள் இந்தியா உருவாக்கியவையாகும். டா. ராஜாராமண்ணா, டாக்டர்



டா. ராஜா ராமண்ணா

## விக்கிரம் சாராபாய்






அணுசக்தி துறையிலும், விண்வெளித்துறையிலும் ஒரே போன்று நன்கொடைகளை வழங்கிய அறிவியலாளரே விக்கிரம் சாராபாய். கேம்பிரிட்ஜில் உயர்கல்வி பெற்று இந்தியாவிற்கு வந்த அவர் அகமதாபாத்தில் பௌதீக ஆராய்ச்சி ஆய்வுக்கூடத்தில் பௌதீகவியல் பேராசிரியாராகவும், இயக்குநராகவும் பணிபுரிந்தார். தும்பா விண்வெளி ஆராய்ச்சி நிலையம், அகமதாபாத்திலுள்ள செயற்கைகோள் செய்தித் தொடர்பு நிலையம் போன்றவைகளின் சிற்பி விக்கிரம் சாராபாய் ஆவார். அவரின் நினைவிற்காக தும்பாவிலுள்ள விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு விக்கிரம் சாராபாய் ஸ்பேஸ் சென்டர் ( வி. எஸ். எஸ். ஸி) என்ற பெயர் வழங்கப்பட்டது.

## டா. எ. பி. ஜெ. அப்துல் கலாம்






இந்தியாவின் பதினொன்றாம் ஜனாதிபதியான டா. ஏ. பி.ஜெ. அப்துல்கலாம் அறிவியலாளரும், ஆராய்ச்சியாளருமாக இருந்தார். அவர் ஏவுகணைத் தொழில் நுட்பக் கல்வியை வளரச்செய்வதில் திறனுள்ளவராக இருந்தார். ஐ. எஸ். ஆர். ஒ. வின் பொறுப்பு வகித்திருந்த அவர் விண்வெளிக்கு செயற்கைக் கோளை செலுத்தும் வாகனங்களை (SLV3, PSLV) வளர்ச்சியடையச் செய்தார். இவர் மிசைல் மேன் ஆப் இந்தியா என்ற சிறப்பைப் பெற்றவர்.

அப்துல் கலாம் போன்றோர் அணுசக்தி துறையின் ஆராய்ச்சிகளுக்குத் தலைமை தாங்கியவர்களாவார்கள்.

சந்திரயான், மங்கல்யான் போன்ற விண்கலன் திட்டங்களுடன் இந்திய விண்வெளி ஆராய்ச்சிகளுடைய புதிய உலகத்திற்குள் நுழைந்தது. இந்தியாவின் முதல் சந்திர ஆராய்ச்சித் திட்டமான சந்திரயானிற்கு 2008 அக்டோபர் மாதம் ஆரம்பம் குறிக்கப்பட்டது. அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பியா விண்வெளி முகமை, சீனா, ஜப்பான் முதலிய நாடுகளுக்கு அடுத்து சந்திரனின் சுற்றுவட்டப் பாதையில் தங்களுடைய செயற்கைகோள் அனுப்பிய நாடாக இந்தியா மாறியது. இந்திய விண்வெளித்துறையின் செவ்வாய் கிரகத்தைச் சென்றடைவதற்காக அனுப்பப்பட்ட விண்கலத்தின் பெயர் மங்கல்யான் பூமியிலிருந்து மிக நீண்ட தூரத்தைச் சென்றடைந்த இந்தியாவின் விண்கலன் என்ற பெருமையும் இதற்குண்டு. இந்த நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு விண்வெளி ஆராய்சித் துறையில் புதிய ஆராய்ச்சிகளுக்கு இந்தியா தயாராகிக் கொண்டிருக்கிறது.

சுதந்திர இந்தியாவில் அறிவியல் தொழில் நுட்பத்துடனும் விண்வெளி ஆராய்ச்சியுடனும் தொடர்புடைய மேற்படிப்பு மண்டலங்களைப் புரிந்து கொள்ளவும்.

**விண்வெளி ஆராய்ச்சித்துறையில் இந்தியாவின் சாதனைகள் என்ற கருத்தை அடிப்படையாக்கி ஒரு பட ஆல்பம் தயார்செய்யவும்.**



அறிவியல் துறையில் அடைந்த சாதனைகள் இந்தியாவின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவியது?



NT-645-3-SOC.SCI.-I-10-T-VOL.2

## கல்வி

*"இந்தியாவின் எதிர்காலம் நிச்சயிக்கப்படுவது இந்தியாவின் வகுப்பறைகளிலாகும்"*

*டாக்டர் எஸ். கோத்தாரி*

நாட்டு முன்னேற்றத்திற்கு கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்ட தேசத் தலைவர்கள் சுதந்திரத்திற்குப் பின்னர் உள்நாட்டுக் கல்வி நிலையங்களைத் தொடங்குவதற்கு முயற்சித்தனர். இந்தியக் கல்வி நிலைகளைப் புரிந்து கொள்வ தற்காகவும், பரிந்துரைகளை அளிப்பதற்காகவும் அரசாங்கம் பல கட்டங்களில் பல ஆணையங்களை நியமித்தது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் மூலம் அவற்றைப் புரிந்து கொள்ளலாம்.

| ஆணையங்கள் | இலக்குகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| • டாக்டர், ராதாகிருஷ்ணன் ஆணையம் (1948) | பல்கலைக் கழகக் கல்வியைப் பற்றிக் கற்பதற்கு | • தொழில் அடிப்படையிலான கல்வி நிலையங்களை அமைத்தல்.<br>• பெண் கல்விக்கு முக்கியத் துவம் அளித்தல்.<br>• பல்கலைக்கழக மானியக் குழு உருவாக்கப்பட வேண்டும். |
| • டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் கமிஷன் (1952) | உயர்நிலைக் கல்வியைப் பற்றிக் கற்பதற்கு | • மும்மொழித்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு<br>• உயர்நிலைக் கல்விக்கு தனியாக ஆணையத்தை நிறுவ வேண்டும்.<br>• பல்நோக்கு கல்வி நிலையங் களை நிறுவ வேண்டும்<br>• ஆசிரியப் பயிற்சி நிறுவனம் அமைக்கப்பட வேண்டும். |
| • டாக்டர் கோத்தாரி கமிஷன் (1964) | கல்வியின் தேசிய அமைப்பை பற்றிய அறிவுரைகளை வழங்குவதற்கு | • 10+2+3 மாதிரியில் கல்வியை நடைமுறைப்படுத்த வேண்டும்.<br>• உயர்நிலைக் கல்வி தொழில் அடிப்படையிலான கல்வியாக இருக்கவேண்டும்.<br>• தார்மீகக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குதல். |

1968 ஆம் ஆண்டிலும் 1986 ஆம் ஆண்டிலும் புதிய கல்விக்கொள்கை (New Education Policy) நடைமுறைப்படுத்தப்பட்டது. புதிய நூற்றாண்டிற்கு இந்தியாவை கொண்டு செல்ல வேண்டுமென்ற நோக்கத்துடன் இது நடைமுறைப்படுத்தப்பட் டது. 1986 ஆம் ஆண்டின் புதிய பொருளாதாரக் கொள்கையின் முக்கியமான பரிந்துரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- தொடக்கக் கல்விக்கும், தொடர் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
- தொடக்கக் கல்வி அனைவருக்கும் கிடைக்கச் செய்ய கல்வி நிலையங்களின் அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கு கரும்பலகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் நவோதயா கல்வி நிலையங்கள் துவங்கப்பட வேண்டும்.
- பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்க வேண்டும்.



**மௌலான அபுல்கலாம் ஆசாத்**

சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராக இருந்தவர் மௌலான அபுல்கலாம் ஆசாத். சுதந்திர இந்தியாவின் கல்விக் கொள்கையை உருவாக்குவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார். அவருடைய பிற ந்த நாளான நவம்பர் மாதம் 11 ஆம் நாள் தேசியக் கல்வி தினமாகக் கொண்டாடப் படுகின்றது. இந்தியா வின்ஸ் பிரிடம் என்ற சிறந்த நூல் அவரால் எழுதப்பட்டதாகும்

புதிய கல்விக் கொள்கையினால் கல்வித்திட்டத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டு வரமுடிந்தது. கல்வியை அடிப்படை உரிமையாக அங்கீகரித்த சட்டத்தை இந்திய அரசாங்கம் 2009–ஆம் ஆண்டு நிறைவேற்றியது.

மத்திய அரசுதொடங்கிய அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA), ராஷ்டிரிய மாத்யமிக் சிக்ஷா அபியான் போன்ற இத்திட்டங்களை ஒருங்கிணைத்து 2018 முதல் சமகிர சிக்க்ஷா அபியான் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

சுதந்திரத்திற்குப் பின் இந்தியா கல்வித்துறையில் அடைந்த முன்னேற்றங்களை பகுப்பாய்வு செய்க



## பண்பாட்டுச் சாதனைகள்

சுதந்திர இந்தியா பண்பாட்டுத்துறையிலும் மிக வளர்ச்சியடைந்துள்ளது, இந்தியாவிற்கென்றே தனிப்பட்ட முறையில் பண்பாட்டுப் பரம்பரை உண்டு என்று முன் வகுப்புகளில் படித்துள்ளோம் அல்லவா? இந்தியாவிற்கு உள்ளேயும் வெளியேயும் பண்பாட்டு முன்னேற்றத்தை ஊக்குவிப்பது என்ற குறிக்கோளுடன் சுதந்திரத்திற்குப் பின்னர் ஏராளம் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது



**ஆசிரியர்களுக்காகப் பண்பாட்டு பரிமாற்றம்**

கல்வியைப் பண்பாட்டுடன் தொடர்புபடுத்துவது என்ற நோக்கத்துடன் மத்திய பண்பாட்டுத்துறை 1979 ஆம் ஆண்டில் அமைத்த நிறுவனமே சென்டர் பார் கல்சுரல் ரிசோர்ஸ் அன்ட் டிரெயினிங்ன்(Centre for Cultural Resource and Training). இதன் தலைமையிடம் புதுடில்லியாகும். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பண்பாட்டு பரிமாற்றத்திற்கான பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துதல் என்பதே இதன் நோக்கம்.



| நிறுவனம் | செயல்பாடுகள் | தலைமையிடம் |
|---|---|---|
| • சங்கீத நாடக அகாடமி | • தி நாஷனல் அகாடமி ஆப் டான்ஸ். டிராம அண்ட் மியூசிக் என்று முன்பு அறியப்பட்டிருந்தது. இசையையும் நாடகத்தையும் ஊக்கு விப்பதே இதன் நோக்கம் | • புதுடில்லி |
| • லலிதகலா அகடாமி<br>இதன் நோக்கம். | • இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியிலும் இந்தியக் கலையை பரப்புவதே | • புதுடில்லி |
| • சாகித்ய அகாடமி | • இந்திய மொழி, இலக்கியம் இவற்றின் வளர்ச்சியே இதன் நோக்கம். | • புதுடில்லி |
| • நேஷனல் ஸ்கூல் ஆப் டிராமா | • சங்கீத நாடக அகாடமியின் கீழ் நிறுவப்பட்டது ஸ்கூல் ஆப் டிராமா எல்லா வருடமும் நாடகவிழாவை நடத்துகிறது. | • புதுடில்லி |
| • நேஷனல் புக்டிரஸ்ட் ஆப் இந்தியா | • குறைந்த செலவில் புத்தகங்களை வெளியிடுதல் வாசிக்கும் பழக்கத்தை வளர்த்தல் இந்தியப் புத்தகங்களை உள்நாட்டிலும் வெளிநாடு களிலும் ஊக்குவிப்பது | • புதுடில்லி |

## அயல்நாட்டுக்கொள்கை

*"உலகில் எல்லா இனத்தவரின் நலனையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துகின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டு அனைவரோடும் நல்லுறவுடன் கூடிய ஒத்துழைப்பே நம்முடைய குறிக்கோள், யாருடனும் பிரச்சினைகளை உருவாக்க நாங்கள் தயாரல்ல என்பதே , நாங்கள் உலக நாடுகளுக்கு உணர்த்த வேண்டியுள்ளது."*

**ஜவஹர்லால் நேருவின் சொற்பொழிவு (1947)**

அயல் நாடுகளுடன் இந்தியாவினுடைய தொடர்பை வெளிப்படுத்துவதே நேருவினுடைய இவ் வார்த்தைகள் சுதந்திரப் போராட்டக் காலத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கிய அயல் நாட்டுக் கொள்கையையே சுதந்திர இந்தியாவும் ஏற்றுக்கொண்டது. இந்திய அயல்நாட்டுக் கொள்கையின் முக்கிய சிற்பி ஜவஹர்லால் நேரு ஆவார்.

இந்தியாவினுடைய அயல்நாட்டுக் கொள்கையின் முக்கிய கருத்துகளே கீழே தரப்பட்டுள்ளவை:

- ஏகாதிபத்தியத்தோடும் காலனி ஆட்சியோடும் உள்ள எதிர்ப்பு.
- இனக்கொள்கையோடுள்ள எதிர்ப்பு.
- ஐக்கிய நாட்டு சபையின் மீதுள்ள நம்பிக்கை
- சமாதான முறையிலுள்ள ஒத்துழைப்பு.
- பஞ்சசீலத் தத்துவங்கள்.
- தேவையான அயல்நாட்டு உதவியின் முக்கியத்துவம்
- அணிசேராமை



சுதந்திர இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் தேசிய அமைப்பினுடைய மதிப்புகள் எவ்வளவு தூரம் பிரதிபலிக்கப்பட்டது? ஆய்வு செய்க.

## பஞ்சசீலக் கொள்கைகள்

1954- இல் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே எல்லைப் பிரச்சினை தோன்றிய போது கையெழுத்திட்ட ஒப்பந்தமே பஞ்சசீலக் கொள்கைகள். ஜவஹர்லால் நேருவும், சீனப் பிரதமாரான சௌ- என்- லாயும் ஒன்று சேர்ந்து இக்கொள்கையில் கையெழுத்திட்டனர். சீனாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தமே பஞ்சீலகொள்கை என்றாலும் எல்லா நாடுகளுடனும் இந்தியா இக்கொள்கையையே கடைபிடித்திருந்தது. அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- நாடுகளின் பொது எல்லைகளையும் இறையாண்மையையும் ஒன்றுக்கொன்று மதித்துப் போற்றுதல்.
- ஒருவர் மீது ஒருவர் போர் உணர்வு கொள்ளாமலிருத்தல்.
- உள்நாட்டுக் விவகாரங்களில் ஒருவருக்கொருவர் தலையிடாதிருத்தல்.
- சமத்துவமும் ஒருவருக்கொருவர் உதவும் நிலையும்.
- அமைதியான ஒத்துழைப்பு.

C48QQ1

*சுதந்திர இந்தியா பல்வேறு துறைகளில் அடைந்த சாதனைகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு படக்காட்சி (Visual Presentation) தயாரிக்கவும்.*

இரண்டாம் உலகப்போருக்கு பின் உருவாக்கப்பட்ட அணிசேரா அமைப்பைக் குறித்து முன்பகுதியில் கற்றவற்றை நினைவு கூறுவீர்களல்லவா? அணிசேரக் கொள்கையை உருவாக்கியவர்களில் ஒருவர் இந்தியப் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு ஆவார். சர்வதேசப் பிரச்சினைகளிலுள்ள சரி தவறை உணர்ந்து செயல்படுதல் என்ற கொள்கையையே இந்தியா கடைபிடித்து வந்தது.

இந்தியாவின் இன்றைய வெளிநாட்டுக் கொள்கையை பரிசோதித்து அதன் அடிப்படைக் கொள்கைகளில் ஏதாவது மாற்றம் உள்ளதா என்பதை கலந்துரையாடவும்.

**சுதந்திரத்திற்குப் பின் இந்தியா**

| | |
|---|---|
| அகதிகளின் கூட்டமும் நாட்டரசுகளின் இணைப்பும் | இணைப்பு ஒப்பந்தம், சர்தார் வல்லபாய் படேல். |
| அரசியலமைப்பும் பொதுத்தேர்தலும் | 1950 -ஜனவரி 26 ராஜேந்திரப் பிரசாத். டாக்டர் பிஆர். அம்பேத்கார் |
| மொழி அடிப்படையிலான மாநிலப் புனரமைப் | மாநிலப் புனரமைப்பு ஆணையம் |
| பொருளாதாரக் கொள்கை | திட்டக் குழு, ஐந்தாண்டுத் திட்டங்கள் |
| அறிவியல் வளர்ச்சியும் கல்வியும் | ஆராய்ச்சி நிறுவனங்கள், விண்வெளித்துறை, ராதாகிருஷ்ணன் கமிஷன், முதலியார் கமிஷன், கோத்தாரி கமிஷன், தேசியக் கல்விக் கொள்கை |
| பண்பாடு | சங்கீத நாடக அகாடமி, லலித கலா அகாடமி, சாகித்ய அகாடமி |
| அயல் நாட்டுக் கொள்கை | அணிசேராக் கொள்கை, பஞ்சசீலக் கொள்கை |

## மதிப்பிடலாம்

- சுதந்திரம் கிடைத்தவுடன் இந்தியா எதிர்கொள்ள வேண்டி வந்த முக்கிய பிரச்சினைகள் எவை?
- நாட்டரசுகளின் இணைப்பைக் குறித்து சிறுகுறிப்பு தயாராக்கவும்.
- மொழி அடிப்படையிலான மாநில உருவாக்கத்திற்கு வழிவகுத்த சூழ்நிலைகளைப் பகுப்பாய்வு செய்க.
- இந்திய அரசியலமைப்பு உருவாக்கத்தைக் குறித்து குறிப்பு தயார் செய்க
- சுதந்திர இந்தியா அறிவியல்-தொழில்நுட்பத்துறைகளில் குறிப்பிடத் தக்க வளர்ச்சியை அடைந்தது. இக்கூற்றை நிரூபிக்கவும்.
- சுதந்திரத்திற்குப் பின்னர் விண்வெளித்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியைப் பகுப்பாய்வு செய்யவும்.
- 1986 ஆம் ஆண்டின் தேசியக் கல்விக் கொள்கையின் சிறப்புத் தன்மை களைப் பகுப்பாய்வு செய்க.
- சுதந்திர இந்தியாவின் முக்கிய பண்பாட்டு நிறுவனங்கள் எவையெல்லாம்? அட்டவணைப்படுத்தவும்.
- இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய தத்துவங்களை அட்டவணைப்படுத்தவும்.

## தொடர் செயல்பாடுகள்

- உலகநாடுகளுடன் இந்தியா கொண்டுள்ள தொடர்பை அடிப்படையா கக் கொண்டு ஒரு கட்டுரை தயாரிக்கவும்.
- இந்திய மாநிலங்களின் பெயர் , தலைநகரம் உருவான வருடம் என்பன வற்றை சேர்த்து ஒரு அட்டவணை தயாரிக்கவும்.
- சுதந்திர பாரதம் பல்வேறு துறைகளில் அடைந்த வளர்ச்சியை அடிப்ப டையாகக் கொண்டு ஒரு ஆன்லைன் வினாடிவினா தயாரிக்கவும்.



அலகு

# 08

# கேரளம் நவீன காலத்தை நோக்கி

**1498**
**மேய்**
**20 ஞாயிறு**

*'அருகாமையில் அழகான மலைத் தொடர்கள் இருந்தது. எங்களுடைய வழிகாட்டிக்கு இடம் வேகமாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. கரைப்பகுதி நெருங்கிய போது அவர் கூறினார். நாம் கலைக்குற்றிற்கு வடக்கு திசையில் என்றும் இதுவே நமது குறிக்கோள் என்றும். அன்று இரவு கலைக்குற்று பட்டணத்திற்கு இருகாதம் தூரம் நாங்கள் நங்கூரமிட்டோம். காப்பா (காப்பாடு) என்ற இப்பட்டணத்தை எங்களது வழிகாட்டி கலைக்குற்று என்று தவறாகப் புரிந்து கொண்டதால் இவ்வாறு செய்தார். கொஞ்சம் அகலத்தில் பந்தரினி (பந்தலாயினி) என்ற பட்டணம் உண்டு. நான்கு படகுகள் வாயிலாகப் பயணம் செய்து சிலர் எங்கள் அருகில் வந்தனர். அவர்களுக்குத் தெரிய வேண்டியது நாங்கள் எந்த நாட்டைச் சார்ந்தவர்கள் என்பதாகும். கலைக்குற்றுக்குச் செல்லும் பாதையை அவர்கள் சுட்டிக்காட்டித் தந்தனர்.*

வாஸ்கோடகாமவுடன் கேரளாவிற்கு வந்த போர்ச்சுக்கீசிய மாலுமி அவ்வாரோ வென்ஹோவின் நாளேடு(டயரிக் குறிப்புகள்)

மேல் கொடுக்கப்பட்டுள்ள டயரிக்குறிப்பு எதைக் குறிப்பிடுகிறது? பதினைந்தாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் ஐரோப்பியர்கள் ஏராளமாகக் கேரளக் கடற்கரையில் வந்து சேர்ந்தனர். அவர்களுக்கு முன்னால் கேரளாவுடன் வியாபாரத் தொடர்புடையவர்களில் முக்கியமானவர்கள் அரேபியர்களும் சீனர்களும் ஆவர். அவர்களின் வியாபாரக் குத்தகையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே போர்ச்சுக்கீசியர்களின் நோக்கம். கோழிக்கோடு ஆட்சியாளராகிய சாமூதிரியிடம் அரேபியர்களை வெளியேற்றவேண்டு மென்று போர்ச்சுக்கீசியர்கள் வேண்டிக்கொண்டனர். ஆனால் இவ்வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள சாமூதிரி தயாராகாமல் இருந்தது போர்ச்சுக்கீசியர்களைக் கோபத்திற்குள்ளாக்கியது.

கோழிக்கோடினுடைய பகைமை நாடாகிய கொச்சியில் தங்கி கேரளாவில் ஆதிக்கத்தை

ஏற்படுத்துவதற்காக அவர்கள் முயற்சி செய்தனர். குஞ்ஞாலி மரைக்காரின் தலைமையிலான சாமூதிரியின் கப்பற்படை போர்ச்சுக்கீசியர்களுக்கு எதிராக அரபிக்கடலில் வலிமையாக எதிர்த்து நின்ற போதிலும் வெற்றிபெறவில்லை.

போர்ச்சுக்கீசியர்களைத் தவிர டச்சுக்காரர்கள் ஆங்கிலேயர்கள் பிரஞ்சுக்காரர்களும் வியாபாரக் குத்தகை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஒருவருக்கொருவர் போராடினார்கள். நல்ல மிளகிற்காக இந்தப் போராட்டங்கள் அனைத்தும் நடத்தப்பட்டது. 1663-இல் டச்சுக்காரர்கள் போர்ச்சுக்கீசியர்களைக் கேரளாவிலிருந்து துரத்தினர். ஆனால் ஆங்கிலேயர்களின் உதவியுடன் திருவிதாம்கூரின் ஆட்சியாளராகிய மார்த்தாண்ட வர்மா 1741-இல் குளச்சல் போரில் டச்சுக்காரர்களைத் தோற்கடித்ததுடன் அவர்களுக்குக் கேரளம் விட்டுப் போகவேண்டியிருந்தது. ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையில் நடைபெற்ற கர்நாடகப் போரில் ஆங்கிலேயர்கள் வெற்றிபெற்றதுடன் தென்இந்தியாவின் வியாபாரக்குத்தகை ஆங்கிலேயர்கள் கையில் வந்துவிட்டது.



மார்த்தாண்டவர்மா

### குஞ்ஞாலி மரைக்கார்மார்கள்



குஞ்ஞாலி மரைக்கார் நினைவுச்சின்னம்- வடகரை

கோழிக்கோட்டை ஆட்சி புரிந்த சாமூதிரி மார்களுடைய கப்பற்படை தலைவர்களாயிருந்தவர்கள் குஞ்ஞாலி மரைக்கார்கள். கோழிக்கோடு மாவட்டத்தின் வடகரைக்கு அருகில் அமைந்துள்ள புதுப்பணத்து மரக்கார் கோட்டையாகும் இவர்களுடைய தலைமை அமைவிடம். இவர்கள் நான்கு பேர்கள் காணப்பட்டனர். போர்ச்சுக்கீசியர்கள் கையிலிருந்து சாலியம் கோட்டையைத் திருப்பிப்பிடிப்பதற்குச் சாமூதிரிக்கு உதவி செய்தவர் மூன்றாம் குஞ்ஞாலி ஆவார். சாலியம் கோட்டையில் வெற்றியைப் பாராட்டி பதினாறாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அரேபிய காவியமாகும். 'பத்ஹுல் மூபீன்' (தெளிவான வெற்றி)

*இஸ்லாமிய மதத்திற்கும்*
*இந்து மதத்திற்கும் வேண்டி ஒன்றுபோல்*
*போராடிடும் இந்துவான அரசனைக்*
*கண்டுபிடியுங்கள் சுல்தான் மார்களே*

என்ற வரிகள் அக்கால சமூக ஒற்றுமையை சுட்டிக் காட்டுகிறது.

**கேரளாவில் ஐரோப்பியர்களின் வருகையையும் அவர்களுடைய நோக்கங்களையும் பற்றி கலந்துரையாடல்.**

### குளச்சல் போர்

'குளச்சல் போர் டச்சுக்காரர்களை பொறுத்தவரை மிகப் பெரிய நாசமாக இருந்தது. பிளாசிப் போரைப் போன்று இது ஒரு மிகப்பெரிய போராக இருக்கவில்லை. ஆனால் கேரளம் (மலபார்) பிடித்தடக்காலம் என்ற டச்சுக்காரர்களின் நோக்கம் அத்துடன் முடிவடைந்தது. டச்சுக்காரர்களுடைய ஆயுத சக்திக்கு எதிராகக்கிடைத்த பெரிய சக்திவாய்ந்த தாக்குதலாக் காணப்பட்டது குளச்சல் போர். அதன் தாக்கத்திலிருந்து மீள்வதற்கு அவர்களால் இயலவில்லை இது தான் இப்போரின் விளைவாக ஏற்பட்ட பயன்

**சர்தார். கெ. எம். பணிக்கர்**
**ஹிஸ்டிரி ஆப் கேரளா**

## ஆங்கிலக்கிழக்கிந்தியக் கம்பெனி கேரளாவில்

ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் பிரதிநிதியாக 1615-இல் கேரளாவில் வந்த கேப்டன் வில்லியம் கீலீங் சாமூதிரியைப் பார்த்து வியாபார ஒப்பந்ததத்தில் கையொப்பமிட்டார். பின்னர் விழிஞ்ஞத்திலும், அஞ்சு தெங்கிலும் பண்டக சாலைகள் (கிடங்குகள்) ஆரம்பிப்பதற்குரிய அனுமதி கம்பெனி பெற்றுக்கொண்டது. தொடர்ந்து ஆற்றிங்கல் அரசியிடமிருந்து அஞ்சு தெங்கில் கோட்டை கட்டுவதற்கான அனுமதியைப்பெற்றுக் கொண்டது. பிற்காலத்தில் மேற்குக் கடற்கரை ஆங்கிலேயர்களுடைய முக்

கியமான படைத்தளமாக அஞ்சுதெங்கு மாறியது. அஞ்சு தெங்கை ஆங்கிலேயர் படைத் தளமாக மாற்றியதினால் நாட்டுமக்களிடம் எதிர்ப்பு ஏற்பட்டது. 1721-இல் ஆற்றிங்கல் அரசிக்குப் பரிசுகளுமாகப் போன நூற்றி ஐம்பது பேருள்ள ஆங்கிலேய சங்கத்தை நாட்டு மக்கள் கொலை செய்தனர். இது ஆற்றிங்கல் கலகம் என அழைக்கப்பட்டது. ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கேரளாவில் நடைபெற்ற முதல் ஒன்றிணைந்த கலக மாக ஆற்றிங்கல் கலகத்தைக் கணக்கிட்டனர்.

மைசூர் ஆட்சியாளர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே 1792 இல் கையொப் பமிடப்பட்ட ஸ்ரீரங்கபட்டணம் உடன்படிக்கையின் படி ஆங்கிலேயர்களுக்கு மலபார் கிடைத்தது. 1792 இல் கொச்சி அரசர் ஆங்கில மேலாதிக்கத்தை ஒத்துக்கொண்டு வரி கொடுப்பதற்கு கட்டாயப்படுத்தப்பட்டார். 1795 -இல் உடன்படிக்கையின் படி திருவி தாங்கூர் ஆங்கிலேய ஆதிக்கத்தை அங்கீகரித்தது பதிலாக எதிரிகளிடமிருந்து பாது காப்பு அளிக்கலாம் என்று ஆங்கிலேயர்கள் உறுதி அளித்தனர். அவ்வாறு மலபாரில் நேரடியாகவும் கொச்சியிலும் திருவிதாம் கூரிலும் இணை அரசர்கள் மூலமாகவும் ஆங் கிலேயர்கள் ஆட்சி நடத்தினர். சுருங்கக்கூறின் பதினெட்டாம் நூற்றாண்டுடன் கேர ளம் முழுமையாக ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழானது.

**மலபார், திருவிதாங்கூர், கொச்சி போன்ற பகுதிகள் ஆங்கிலேய ஆதிக் கத்தில் வந்தது எவ்வாறு? குறிப்பு தயார் செய்க.**



## ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைபெற்றஆரம்ப கால எதிர்த்து நிற்றல்கள்

**வேலுத்தம்பியின் குண்டறை விளம்பரத்திலிருந்து...**

*"பிற நாடுகளை வஞ்சனையால் கைப்பற்றுவது அவர்களுடைய வம்ச பரம்பரையாகும். அவர்களுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவ தற்கு அவர்களது படை அங்குள்ள அரண்மனையையும் கோட்டை யையும் தங்களுடைய பாதுகாப்பில் கொண்டுவரும். அரசருடையவும் ஆளும் வர்க்கத்தினுடையவும் பரம்பரையான தகுதியும் பதவியும் ஆசா ரங்களும் அனைத்தும் அத்துடன் முடிவடையும். உப்பு உட்பட எல்லா வியாபாரங்களும் அவர்களுடைய குத்தகையாகும். பொருட்களும் வீடும் வயலும் தாவரங்களும் அவர்களுடையதாகும். மிகச் சிறிய குற் றங்களுக்கும் கூட அவர்களுடைய இரக்கமற்ற ஜென்மங்களான அடி யாட்கள் கடின தண்டனை வழங்குவர்."*

**ஆதாரம் : கிருஷ்ண சைதன்யா கேரளம், பக்கம் -51**

அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள், அரசர்களுடையவும் நாடுவாழிகளுடையவும் அதிகாரத்தில் தலையிடத் தொடங்கினர். நூற்றாண்டுக ளாக அனுபிவித்துக்கொண்டிருந்த சுதந்திரத்தினுடையவும் உரிமைகளின் மேலுள்ள கையடக்கல்களையும் அவர்கள் விரும்பவில்லை. அதற்கெதிராக மல பாரிலும், கொச்சியிலும், திருவிதாம்கூரிலும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராட்டங்கள் வளர்ந்து வந்தது.

NT-645-4-SOC.SCI.-I-10-T-VOL.2

### கேரளச்சிங்கம்

கேரளச்சிங்கம் என்ற பேரில் அறியப்பட்ட பழசி ராஜாவை பிரிட்டீஷ் குறிப்புகளில் 'பைச்சிராஜா' என்றும் கொட்டியோட்டு ராஜா என்றும் கூறப்பட்டுள்ளது. பழசிராஜாவின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு சர்தார் கெ. எம் பணிக்கர் 'கேரளச் சிங்கம்' என்ற தலைப்பில் ஒரு வரலாற்று நூல் எழுதி உள்ளார். ஆங்கிலேயர்களின் கையில் சிக்கமால் தனது வைர மோதிரத்தை விழுங்கி பழசிராஜா தற்கொலை செய்துகொண்டார் என இந்நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.


பழசி நினைவுச்சின் னம்- மானந்தவாடி

## பழசிக்கலகங்கள்


ஆங்கிலேயர்களுக்கு எதிராக மலபாரில் நடைபெற்ற சக்திவாய்ந்த போராட்டங்களுக்கு தலைமை வகித்தவர் மலபாரில் கோட்டயம் அரச குடும்பத்தில் உள்ள கேரளவர்மா பழசிராஜா ஆவார். மைசூரின் ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆங்கிலேயர்களுக்கு உதவிசெய்வதற்குப் பதிலாக கோட்டயம் பகுதியில் வரி வசூலிப்பதற்கான உரிமை ஆங்கிலேயர்கள் பழசிராஜாவிற்கு உறுதி அளித்தனர். ஆனால் வெற்றி பெற்ற பிறகு வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு ஆங்கிலேயர்கள் தயாராக வில்லை. மட்டுமின்றி வயநாட்டின் மேல் ஆங்கிலேயர்கள் உரிமை கூறவும் செய்தனர். இந்த அநீதிக்கு எதிராகப் பழசிராஜா மக்களை ஒன்று படுத்தி ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடினார். செம்பன்போக்கர், கைத்தேரி அப்புநாயர், எடச்சேன குங்கன் நாயர். வயநாட்டில் குறிச்சியத்தலைவரான தலக்கல் சந்து என்பவர்களின் உதவியுடன் பழசி திறமையான ஒளிப்போர் நடத்தினார். போராட்டத்திற்கிடையில் 1805-ஆம் ஆண்டு நவம்பர் 30-ஆம் நாள் பழசிராஜா கொல்லப்பட்டார்.

## வேலுத்தம்பியும் பாலியத்தச்சனும்


மண்ணடியில் வேலுத்தம்பி தளவாயின் சிலையும் நினைவுச் சின்னமும்

திருவிதாங்கூரினுடையவும் கொச்சியினுடையவும் உள்துறைச்செயல்களில் ஆங்கிலேயர்கள் தடையின்றி செயல்படுவதை திவான்களான வேலுத்தம்பியும் பாலியத்தச்சனும் எதிர்த்தனர். 1809-ஆம் ஆண்டு ஜனவரி 11-இல் வெளியிடப்பட்ட குன்டறை விளம்பரத்தின் வாயிலாக வேலுத்தம்பி ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடுவதற்கு மக்களைத் தூண்டினார். திருவிதாங்கூரினுடையவும் கொச்சியினுடையவும் ஒன்று சேர்ந்த படை பிரிட்டீஷ் ரசிடன்ட் மெக்காலேயினுடைய அலுவலக குடியிருப்பை ஆக்கிரமித்தது. ஆனால் ஆங்கிலேய படைகளுக்கு முன்னால் எதிர்த்து நிற்பதற்கு இவர்களுக்கு இயலவில்லை. ஆங்கிலேயரால் கைது செய்யப்படுவது உறுதியானபொழுது வேலுத்தம்பி தளவாய் மண்ணடியில் கோவிலில் வைத்து தற்கொலை செய்தார். கோபம் தீராத ஆங்கிலேயர்கள்

வேலுத்தம்பி தளவாயின் இறந்த உடலை திருவனந்தபுரத்தில் கண்ணம் மூலையில் கயிற்றில் கட்டித்தொங்கவிட்டனர். பாலியத்தச்சனை சென்னைக்கு நாடுகடத்தினர்.


*பாலியத்தச்சன்*

பழசிராஜா, வேலுத்தம்பி, பாலியத்தச்சன் என்பவர்களின் தோல்வியைத்தொடர்ந்து ஆங்கிலேயர்களுடன் நாடுவாழிகளின் எதிர்ப்பு முடிவுற்றது. ஆனால் மக்களின் எதிர்த்து நிற்றல்கள் தொடர்ந்தது.



- **ஆங்கிலேயர்களுக்கு எதிராக கேரளாவில் நடைபெற்ற முதல் எதிர்த்து நிற்றல்கள், அவை நடைபெற்ற பகுதிகள் காரணங்கள் என்பவை உட்படுத்தி அட்டவணை தயார் செய்க.**

## கேரளம் உலகச்சந்தையின் பகுதியாகிறது.

ஆட்சிக்கட்டுபாடுகளைக் கைப்பற்றியதுடன் ஆங்கிலேயர்கள் இங்குள்ள உற்பத்திப் பொருட்களைக் குறைந்த விலைக்கு வாங்கியும் அவர்களுடைய நாட்டில் உற்பத்தி செய்கின்ற உற்பத்திப்பொருள்களைக் கூடிய விலைக்கு விற்கவும் செய்தனர். இத்துடன் தன்னிறைவு பெற்றிருந்த நமது கிராமப்புறப் பொருளாதார முறை சீர்குலைந்தது. இவ்வாறு ஆங்கில ஆதிக்கத்தின் கீழ் வெளி நாட்டு வியபாராம் பெருமளவில் வலிமை அடைந்தது. கேரளம் உலக வியாபாரச் சந்தையின் பகுதியாக மாறியது.

| ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|
| • தேங்காய் | • துணிவகைகள் |
| • வெல்லம் | • மண்ணெண்ணெய் |
| • முந்திரிப்பருப்பு | • புகையில் |
| • நல்லமிளகு | • சீனி |
| • பாக்கு | • உலோக உற்பத்தி |
| • இரும்புத்தாது | |

**மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை ஆராய்ந்து கேரளாவின் வெளிநாட்டு வியபாரத்தைப் பற்றி என்னென்ன முடிவுக்கு வரமுடியும்.**



-
-
-
-

வியாபாரம் எளிமைப்படுத்துவதற்கு மலபாரிலும் கொச்சியிலும் திருவிதாங்கூரிலும் நிலவியிருந்த வியாபாரச் சட்டங்களைத் தங்களுக்கு அனுகூலமான முறையில் ஆங்கிலேயர்கள் மாற்றி அமைத்தனர். ஒன்றுபட்ட நாணயக்



**ரயில் பாதை**

கேரளாவில் முதன் முதலில் ரயில் பாதையை உருவாக்கியவர் ஆங்கிலேயர்களாவர். பேப்பூர் முதல் திரூர் வரை நீண்டு கிடக்கின்ற இந்த ரயில் பாதை 1861-இல் உருவாக்கப்பட்டது. கச்சாப் பொருட்கள் கொண்டு செல்வதற்கும் விவசாய உற்பத்திப்பொருட்கள் தொலைவிலுள்ள கிராமங்களுக்குக் கொண்டு செல்வதற்கும் ரயில் பாதையை ஆங்கிலேயர்கள் பயன்படுத்தினர்.

கொள்கைகளும் அளவு தூக்க முறைகளையும் நடைமுறைப்படுத்தினர். வியாபாரத்திற்காகப் போக்குவரத்து வசதிகள் மேம்படுத்துவதற்காக சாலைகள், பாலங்கள், ரயில் தண்டவாளங்கள் போன்றவற்றை உருவாக்கினர். சரக்குப் போக்குவரத்தை எளிமைப்படுத்த கொச்சி, கோழிக்கோடு, ஆலப்புழை துறைமுகங்களை விரிவுபடுத்தினர்.



வியாபாரத்தை மேம்படுத்துவதற்காக ஆங்கலேயர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவுகளைக் குறிப்பிக.

## நிலஉரிமையில் ஏற்பட்ட மாற்றங்கள்

ஆங்கிலேயர்களின் ஆட்சி பூமியின் மேல் பல்வேறு மக்களுக்கு இருந்த உரிமைகளில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. பிரதேச நாடுவாழிகளையும் ஜமீந்தார்களையும் நில உரிமையாளர்களாகக் கணக்கிட்டு அவர்கள் ஆங்கிலேயர்களுக்கு கொடுக்க வேண்டிய வரியை முன்னரே நிச்சயிக்கவும் செய்தனர். ஜமீந்தார்களும் நாடுவாழிகளும் குடியான்களின் மேல் வரிச்சுமையைக் கட்டாயப்படுத்தவும் விவசாயிகளைக் குடியிறக்கவும் செய்தனர். மலபாரில் விவசாயிகளின் நிலை கூடுதல் பரிதாபகமாக மாறியது. இதற்கு எதிராக நடைபெற்ற கலகத்தைப்பற்றி முன் பாடப்பகுதியில் கூறப்பட்டுள்ளதை நினைவுக் கொள்ளவும். மாப்பிளைக் கலகத்தைப் பற்றி தெரிந்துகொள்ள நியமித்த லோகன் கமிஷனின் கோரிக்கையின் அடிப்படையில் 1920-இல் மலபார் குடியான்சட்டம் நடைமுறைப்படுத்திய போது விவசாயிகளுக்கு நிலத்தின் மேல் சிறிதளவு உரிமை கிடைத்தது.

திருவிதாங்கூரில் மார்த்தாண்ட வர்மாவின் காலம் முதல் நில உடமைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. மாடம்பிமார்களின் நிலம் பண்டாரவகை (அரசின்) நிலமாக மாறியது. இப்பண்டாரவகை நிலத்தின் குடியான்களுக்கு அவர்கள் வேளாண்மை செய்கின்ற நிலம் சொந்தமாக வழங்கிக் கொண்டு உள்ள முக்கியமான விளம்பரம் 1865-இல் திருவிதாங்கூர் அரசு வெளியிட்டது. இது பண்டாரப் பாட்ட விளம்பரமென்று அழைக்கப்படுகிறது. 1896-இல் நிறைவேற்றிய ஜன்மி-குடியான் சட்டப்படி திருவிதாங்கூரில் குடியான்களுக்கு நிலத்தின் மேலுள்ள உடமை உரிமை கிடைத்தது. அவ்வாறு பெரும்பான்மை குடியான்கள் திருவிதாங்கூரில் குறைந்த அளவில் நில உடமைகளாக மாறினர். இதற்குப் பதிலாக அவர்கள் அரசுக்கு அதிக வரி செலுத்த வேண்டியிருந்தது. சுருங்கக்கூறின் திருவிதாங்கூரின் விவசாயிகளும் வரிச்சுமையால் கஷ்டப்பட்டனர். 1914-இல் கொச்சியில் குடியான் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

| | | |
|---|---|---|
| • திருவிதாங்கூர் | 1865 | • பண்டாரப் பாட்ட விளம்பரம் |
| • கொச்சி | 1914 | • குடியாய்மைச் சட்டம் |
| • மலபார் | 1929 | • மலபார் குடியாய்மைச் சட்டம் |

## வேளாண் துறையின் வணிகமயமாக்கல்

ஆங்கிலேயரின் ஆதிக்கம் கேரள விவசாய முறையில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. கேரளாவின் உற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாட்டுச் சந்தைகளில் நல்ல வரவேற்பு இருந்தது. மலையோரப் பகுதிகளில் காப்பி, தேயிலை, ஏலம், ரப்பர் போன்றவை பெரிய தோட்டங்களில் பயிர் செய்யப்பட்டன. பிற விளைபொருட்களைப் பயிர் செய்ய ஆரம்பித்ததுடன் நெல் உற்பத்தி குறைந்து பல பகுதிகளிலும் உணவு பற்றாக்குறை ஏற்பட்டது. இதற்குத் தீர்வு காண்பதற்காக மரச்சீனி(கிழங்கு) விவசாயம் கேரளாவில் பெரும் அளவில் தொடங்கப்பட்டது. இக்காலகட்டத்தில் தான் ஆங்கிலேயரான கோனோலி பிரபுவின் தலைமையில் நிலம்பூரில் தேக்குத்தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்தோட்டங்களில் பெரும்பான்மையும் ஆங்கிலேயர்களின் உடைமையில் இருந்தது. வனபூமி ஏராளமாக ஆங்கிலேயர்களுக்குப் பதித்துக் கொடுத்தும் தோட்டங்களில் போக்குவரத்து வசதி ஏற்படுத்தியும் திருவிதாங்கூர், கொச்சி ஆட்சி அதிகாரிகள் தோட்டப்பயிர்களை ஊக்குவித்தனர். அவ்வாறு கேரளம் விற்பனைப் பயிர்கள் விவசாயம் செய்கின்ற பகுதியாக மாறியது.



*நிலம்பூரின் தேக்குத்தோட்டம்*



**கோனோலி ப்ளாட்**

வியாபாரத் தேவைகளுக்கான கப்பல்களை உருவாக்குவதற்குப் பெரிய அளவு தேக்கு மரங்கள் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிகளுக்குத் தேவைப்பட்டது. தேக்கு உற்பத்திக்கு தகுந்த மலபாரிலுள்ள செழிப்புடைய மண்ணில் தேக்கு மரங்கள் நடுவதற்கு மாவட்ட ஆட்சியாளரான ஹென்றி வாலன்டைன் கோனோலியிடம் கம்பெனி பொறுப்பை ஒப்படைத்தது. நிலம்பூர் பகுதியின் 1500 ஏக்கரிலும் கோனோலி (1823 - 38) தேக்கு நட்டார். இது பின்னர் கோனோலி ப்ளாட் என அறியப்பட்டது.



வாணிபமயமாக்கல் கேரளாவில் வேளாண் துறையில் ஏற்படுத்திய மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்யவும்

## தோட்டத்தொழிலினுடையவும் பரம்பரைத் தொழிலினுடையவும் வளர்ச்சி

தோட்டப்பயிர்கள் சேகரிப்பதற்கும் ஏற்றுமதி செய்வதற்குமாக ஆங்கிலேய மூலதனத்துடன் கேரளாவில் தோட்டத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. தேயிலைத் தொழிற்சாலைகள், ரப்பர் தொழிற்சாலைகள் என்பன தோட்டப்பயிர்களை மையப்படுத்தப்பட்டு தோன்றியவையாகும். இத்துடன் தேங்காய், கயிறு, முந்திரிப்பருப்பு, நெசவுத்தொழில், பீடி போன்றவைகளுடன் தொடர்புடைய பரம்பரைத் தொழில்களும் வளர்ந்து வந்தன. எண்ணெய் மில்லுகள் கேரளாவில் பரவலாயின. ஆலப்புழை தேங்காய் எண்ணெய் விவசாயத்தின் மையமாகக் காணப்பட்டது. 1859 - இல் ஆலப்புழையில் முதல் கயர் தொழிற்சாலை நிறுவப்பட்டது. முந்திரிப் பருப்பு


பரோக்கிலுள்ள ஓட்டுக்கம்பெனி


ஆலப்புழையிலுள்ள கயிறு தொழிற்சாலை

தொழிற்சாலைகள் கொல்லத்தை மையமாகக் கொண்டு வளர்ந்தது வந்தன. பரோக், கொல்லம், ஒல்லூர் ஆகிய பகுதிகளில் ஓட்டுக் கம்பனிகளும் கண்ணூரிலும் கோழிக்கோட்டிலும் நெசவுத்தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப் பட்டன. பீடிக்கம்பெனிகள் கண்ணூரை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்தன.



**ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் கேரளாவில் தோட்ட விவசாயத்திலும் பரம்பரை விவசாயங்களிலும் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி குறிப்பு தயாரிக்கவும்.**

கேரளாவின் தோட்டப் பகுதிகளிலும் பாரம்பரிய தொழில் துறையிலும் உங்கள் பகுதியில் உள்ள தொழில்களோடு தொடர்பு கொண்ட தொழிலாளர்களுக்கு காணப்படவேண்டிய திறன்கள் யாவை

## நவீனத் தொழில்களின் தோற்றம்


பள்ளிவாசல் மின்சார நிலையம்

இருபதாம் நூற்றாண்டின் பாதியளவில் நவீனத்தொழிற் சாலைகள் தொடங்கப்பட்டன. அதில் பெரும்பாலும் திருவிதாங்கூரிலும் கொச்சியிலும் நிறுவப்பட்டன. திருவிதாங்கூரின் ஆட்சியாளர்கள் நவீன தொழில்களுக்கு ஊக்கமளிக்கின்ற வழிகளைப் பயன்படுத்தியிருந்தனர். ஆங்கிலேயர்கள் தொழில்களுக்குத் தேவையான அறிவியல் -பொருளாதார உதவிகளை அளித்தனர். பள்ளிவாசல் மின்சார நிலையம் நிறுவப்பட்டது நவீன தொழில்களின் வளர்ச்சியை வேகப்படுத்தியது. அக்காலத்தில் நிறுவப்பட்ட மற்று தொழிற்சாலைகள் கீழ்க்கொடுக்கப்பட்டுள்ளது.


*ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் கேரளாவில் வளர்ச்சியடைந்த தொழிற் சாலைகளைப் பற்றி டிஜிட்டல் பிரசன்டேஷன் தயாரிக்கவும்*



- புனலூர் காகிதமில் - கொல்லம்
- களமசேரி பாக்ட் (FACT) - எர்ணாகுளம்
- குண்டறை ஸிறாமிக்ஸ் - கொல்லம்
- ரப்பர் போர்ட் - திருவனந்தபுரம்
- டாட்டா ஆயில் மில்ஸ் - கொச்சி
- அளகப்பா துணிமில் - கொச்சி

திருவிதாங்கூரிலும் கொச்சியிலும் செல்வந்தர்களின் ஒன்றிணைப்பில் விவசாய அமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டது. மூலதனம் சேகரிப்பதற்கான பணம் பரிமாற்றம் செய்யும் நிலையங்களாக வங்கிகள் இக்காலத்தில் கேரளாவில் வளர்ந்து வந்தது. முதன் முதலாக உருவாக்கப்பட்டத் தனியார்துறைவங்கி நெடுங்காடி வங்கி ஆகும்.

**ஆங்கிலேயர் காலத்தில் கேரளாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியைக் குறிப்பிடுகின்ற நழுவுபடம் தயார் செய்க.**



தொடர்ந்து இம்பீரியல் வங்கி, இந்தியன் நேஷனல் வங்கி சார்ட்டேர்ட் வங்கி என்பன நடைமுறைக்கு வந்தன.



ஹெர்மன் குண்டர்ட்

## கலாச்சாரத்துறையில் ஆங்கிலேய ஆதிக்கம்.

ஐரோப்பியர்களின் வருகையால் கேரளாவில் அச்சடி ஆரம்பமானது. மலையாளத்தில் இலக்கண நூல்களும் அகராதியும் தயாரிப்பதில் கூடுதல் ஆர்வம் காட்டியிருந்தது ஜெஸ்யூட் மிஷனரிமார்களாகும். டாக்டர் ஆஞ்சலோஸ் பிரான்சிஸ் என்பவரே மலையாள மொழியில் முதல் இலக்கண நூலைத் தயாரித்தவர் ஆவார். மலையாள மொழியில் முதல் அகராதியை உருவாக்கியவர் அர்ணோஸ் பாதிரி ஆவார். மலையாள மொழியில் அச்சிட்ட முதல் பூர்ண நூல் 'ஸம்ஷபவேதார்தம்' மிஷனரியான பெஞ்சமின் பெய்லி ஆங்கில-மலையாள அகராதியையும் டாக்டர் ஹெர்மன்குண்டர்ட் மலையாளம்-ஆங்கில அகராதியும் வெளியிட்டனர்.

| மிஷனரிச் சங்கம் | செயல்பாட்டு மண்டலம் |
|---|---|
| லண்டன் மிஷனரி சொஸைட்டி( எல்.எம்.எஸ்.) | திருவிதாங்கூர் |
| சர்ச் மிஷன் சொஸைட்டி (ஸி.எம்.எஸ்) | கொச்சி, திருவிதாங்கூர் |
| பாசல் இவாஞ்சலிக்கல் மிஷன் (பி.இ.எம்.) | மலபார் |




கௌரி பார்வதி பாய்

டாக்டர் ஹெர்மண்குண்டர்ட் தலைசேரியிலிருந்து வெளியிட்ட ராஜ்யசமாச்சாரம், பச்சிமோதயம் என்பவை மலையாள மொழியிலுள்ள முதல் செய்தித்தாள்களாகும், சாதி மத வேற்றுமையின்றி அனைவருக்கும் கல்வி என்ற கருத்துக்கு கேரளாவில் தொடக்கம் குறிக்கப்பட்டது மிஷனரிமார்களின் கல்விச்செயல்பாடுகள் மூலமாகும். கல்வி நிலையங்கள் ஆரம்பிப்பதற்கு திருவிதாங்கூரிலும் கொச்சியிலுமுள்ள ஆட்சி அதிகாரிகள் மிஷனரி சங்கங்களுக்குப் பூமி தானமாக அளித்தனர்.

தொடர்ந்து திருவிதாங்கூரிலும் கொச்சயிலுமுள்ள நாட்டு அரசர்களும் கல்விச் செயல்பாடுகளில் ஈடுபடவும் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் நிறுவவும் செய்தனர். திருவிதாங்கூரின் ஆட்சியாளராகயிருந்த கௌரி பார்வதி பாய் 1817-இல் ஆரம்பக் கல்வியை இலவசமாக்கி வெளியிட்ட விளம்பரம் கவனத்திற்குரியது.

**கேரளக் கல்வித் துறையில் ஆரம்பகால மிஷனரிகளின் பங்கைத் தெளிவுபடுத்தவும்.**



ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன் கேரளாவில் நடைமுறையிலிருந்த தண்டனைமுறைகளைப் பற்றி முன் வகுப்பில் கலந்துரையாடினீர்கள் அல்லவா. அக்காலத்தில் குற்றம் சாட்டப்பட்டவனின் சாதியை அடிப்படையாகக்கொண்டு தண்டனையும் வழங்கப்பட்டது. இந்த நீதி நியாய முறையை ஆங்கிலேயர்கள் மாற்றி அமைத்தனர். குற்றவாளியின் வாதம் கேட்டபிறகு குற்றத்தின் தன்மைக்கேற்ப தகுந்த தண்டனை விதிகள் நடைமுறைப்படுத்த தொடங்கினர். இத்துடன் சாதியைக் கடந்து சட்டத்தின் முன் அனைவரும் சமமாயினர். வழக்குகளின் விசாரணைக்காகப் பல்வேறு இடங்களில் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.

ஆங்கில ஆட்சியால் கேரளாவில் பரம்பரை ஆயுர்வேத சிகிச்சைக்குப் பதில் அலோபதி சிகிச்சை முறைக்கு முக்கியத்துவம் கிடைத்தது. அம்மை நோய் தடுப்பதற்கான தடுப்பு ஊசி முதன் முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது மலாபாரிலாகும். இக்காலத்தில் திருவிதாங்கூருக்கு இங்கிலாந்திலிருந்து மருந்தைக் கொண்டுவருவதற்கு ஒரு கம்பெனியை அரசர் நியமித்தார். மலபார், திருவிதாங்கூர், கொச்சி ஆகிய இடங்களில் அரசு மருத்தவமனைகள் தொடங்கப்பட்டன.

கேரளாவில் சில சமுதாயங்களில் காணப்பட்ட வாரிசு முறை தாய்வழியிலான மருமக்கத்தாய முறையாக இருந்தது. ஆங்கிலக் கல்வியைப் பெற்ற இளைஞர்கள் இதற்கு எதிராக வலிமையுடன் எதிர்க்கவும் நீதிமன்றங்களில் விவகாரங்கள் பதிவு செய்யவும் தொடங்கினர். அவ்வாறு திருதாங்கூரிலும், மலபாரிலும், கொச்சியிலும் மருமக்கத்தாயமுறைக்கு எதிராக சட்டங்கள் நடைமுறைக்கு வந்தது. மக்கத்தாய முறைக்கு இச்சட்டங்கள் முக்கியத்துவம் கொடுத்தது. இதன்படி குடும்ப வீட்டிலுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் சொத்தின் மீது உரிமை கிடைத்தது. இது குடும்ப வீடு, கூட்டு குடும்பம் என்பவற்றின் வீழ்ச்சிக்குக் காரணமானது.

கேரளாவில் செல்வங்களைச் சுரண்டிவருவதற்கும் ஆட்சியை எளிமையாக்குவதற்குமான நடவடிக்கைகளின் பகுதியாக இச்சீர்திருத்தங்கள் அமைந்தது. எனினும் கேரளச் சமூகத்தின் மறுமலர்ச்சிக்கு இது உதவியது.



**ஆங்கிலேர்களின் வருகையால் கேரளாவின் சட்டத்துறையிலும் ஆரோக்கியத்துறையிலும் ஏற்பட்ட மாற்றங்களைக் கலந்துரையாடுங்கள்.**

## சீர்திருத்த இயக்கங்களும் சமூக மாற்றங்களும்



### கேரளம் பைத்தியங்களின் நாடு

*“மலபாரில் (கேரளம்) நான் பார்த்ததை விட மேலான ஒரு மூடத்தனம் இதற்கு முன்பு எங்குமே பார்த்ததில்லை. உயர்ந்தோர் நடக்கின்ற பாதையில் தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக்கூடாது. இந்த மலபார்காரர்கள் எல்லாம் பைத்தியக்காரர்கள்.... அவர்களுடைய வீடுகள் அனைத்தும் பைத்தியக்கார ஆலயம்....*

*(சுவாமி விவேகானந்தன் – 1897, மதிராசி)*

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கேரளாவின் சமூக நிலையைத் தெளிவாக்குகின்ற சுவாமி விவேகானந்தனின் விமரிசனத்தைக் கவனித்தீர்களல்லவா? சாதிக்கொடுமை அக்காலத்தில் கேரளாவில் சக்கிவாய்ந்ததாக இருந்தது. தாழ்த்தப்பட்டவர்களைத் தீண்டக்கூடாதவர்களாகக் கருதினர். ஒரு நபரின் பதவியைத் தீர்மானிப்பது பிறந்த சாதியின் அடிப்படையிலாக இருந்தது. ஒவ்வொரு சாதியிலும் ஏராளம் மூடநம்பிக்கைகளும், தீய பழக்க வழக்கங்களும் நிலவியிருந்தது. நவீனக்கல்வியின் பரவலாலும் மேற்கத்திய கருத்துக்களின் தாக்கத்தாலும் சாதிவேற்றுமையினுடையவும், மூடநம்பிக்கையினுடையவும் கொடுமைகளை அழித்தனர். சமூகத்தின் தீய பழக்கவழக்கங்களையும் மூடநம்பிக்கைகளையும் இல்லாமல் ஆக்குவதற்காக மறுமலர்ச்சி இயக்கங்கள் உருவாயின.

*கேரளத்தின் சமூக சீர்திருத்த வாதிகளின் படங்களையும் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளையும் உட்படுத்தி டிஜிட்டல் இதழ் தயாரிக்கவும்.*



C4HLRN

**கேரளாவின் சமூக சீர்திருத்தவாதிகளின் கருத்துகள் தற்காலக் கேரளச் சமூகத்தில் எந்த அளவு முக்கியத்துவம் பெறுகிறது? கலந்துரையாடவும்.**




| சமூக சீர்திருத்தவாதிகள் | அமைப்புகள்/ செயல்பாடுகள் |
|---|---|
| • வைகுண்ட சுவாமிகள் | • சமத்துவ சமாஜம் |
| • சட்டம்பி சுவாமிகள் | • கூட்டுக்குடும்ப முறை, சம்பந்தம் (திருமணம்) மருமக்கத்தாயம், என்வற்றிற்கு எதிராகப் போராடினார்கள். |
| • ஸ்ரீ நாராயண குரு | • ஸ்ரீ நாராயணதர்மபரிபாலனயோகம் |
| • குரியாகோஸ் ஏலியாஸ் சாவற | • அனாதாலயங்களும், கல்வி நிலையங்களும் நிறுவினர். |
| • ஐயங்காளி | • சாது ஜனப்பரிபாலன சங்கம் |
| • வக்கம் அப்துல் காதர் மௌலவி | • திருவிதாங்கூர் முஸ்லீம் மஹாஜன சபை |
| • வாக்படானந்தன் | • ஆத்ம வித்தியா சங்கம் |
| • சகோதரன் ஐயப்பன் | • சகோதர பிரஸ்தானம் |
| • பண்டிட் கெ.பி. கருப்பன் | • அரய சமாஜம் |
| • மன்னத்து பத்மநாபன் | • நாயர் சர்விஸ் சொசைட்டி |
| • வி.டி பட்டதரிப்பாடு | • யோகக்ஷேமசபை |
| • குமார குருதேவன் | • பிரத்தியக்ஷ ரக்ஷாதெய்வ சபா |

NT-645-5-SOC.SCI.-I-10-T-VOL.2




### தெய்வதசகவும் ஆத்மோபதேசசதகவும்




ஆழமேகும் நின் மகஸா மாழியில்
ஞங்ஙளாகவே ஆழணம் வாழ
ணம் நித்யம் வாழணம் வாழணம்
சுகம். (ஸ்ரீநாராயணகுரு நூறு
ஆண்டுகளுக்கு முன்னர் படைத்த
பிரார்த்தனைப் பாடலாகிய தெய்
வதசகத்தில் இருந்து எடுக்கப்பட்ட
வரிகள்)

அவனிவன் எந்து அறியுந்ந தொக்கே ஓர்த்தால
வனியிலா திமமாயொராத்மரூபம் அவனாவனாத்
மசுகத்தினா சரிக்குந்நவய பரந்ந சுகத்தினாய் வரணம்.
(ஆத்மோபதேசதகம் 24 ஆம் ஸ்லோகம்)

சமூகச் சீர்திருத்த அமைப்புகள் சமூகமாற்றத்திற்கான போராட்டங்களுக்கு ஊக்கமளித்தது. மேலாடை அணிவதற்கான உரிமைக்காக தென்திருவிதாங்கூரில் சாணார் பெண்கள் போராட்டம் நடத்தினர். இதைத் தொடர்ந்து 1859-இல் ஜாக்கட்டும் மேலாடையும் அணிவதற்கான உரிமை சாணார் பெண்களுக்கு அனுமதிக்குமாறு உத்திரம் திருநாள் மகாராஜா கட்டாயப்படுத்தப்பட்டார். 1888-இல் ஸ்ரீ நாராயணகுரு அருவிப்புறத்தில் நடத்திய சிவ பிரதிஷ்டை சமூகத் துறையில் புத்துணர்வை ஏற்படுத்தியது. கோயில் கர்மங்களும் பூசைகளும் செய்வதற்கான உரிமை தாழ்த்தப்பட்ட சமூதாயத்தில் உட்பட்டவர்களுக்கும் கிடைப்பதற்கும் இதனால் இயன்றது. " சாதிவேற்றுமை மத வேற்றுமை ஏதுமின்றி" அனைவரும் சகோதரத்துவத்துடன் வாழ்கின்ற மாதிரி இடமே இது. என்று அருவிப்புறத்தில் கோவிலுக்கு முன்னர் ஸ்ரீ நாராயணகுரு எழுதிவைத்தார். விஞ்ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த குரு கோயில்களோடு சேர்ந்து பாடசாலைகளையும், நூல் நிலையங்களையும் நிறுவினார். கல்வியால் சிறந்தவர்களாகவும் சங்கங்களால் வலிமை உள்ளவர்களாகவும் அவர் ஊக்குவித்தார். வாதிக்கவும் வெற்றி பெறுவதற்கும் அல்ல அறிவதற்கும் அறிவிப்பதற்கும் ஆகும்" என்ற கருத்துடன் ஆலுவாயில் சர்வமத கூட்டத்தை ஏற்படுத்தினார். அளவில்லாத மனித அன்பிலும் அனைத்து மதசகோதரத்திலும் விருப்பம் கொண்டதாக இருந்தது. ஸ்ரீ நாராயண குருவின் கூற்றுக்களும் செயல்பாடுகளும்.





டி. கெ.மாதவன் மந்நத்து பத்மனாபன்





கெ. கேளப்பன் ஏ.கெ. கோபாலன்

சுதந்திரமாக நடப்பதற்கு கேரளாவில் நடந்த போராட்டங்களில் முக்கியமானது வைக்கம் சத்தியாகிரகம் (1924) ஆகும். டிகெ. மாதவனின் தலைமையில் நடைபெற்ற இப்போராட்டத்திற்கு உறுதுணையாக மன்னத்து பத்மனாபனின் தலைமையில் உயர்ந்தோர்கள் ஒன்று கூடி ஊர்வலம் ஏற்படுத்தினர். இப்போராட்டங்களைத் தொடர்ந்து வைக்கம், ஆலயத்திற்கு சுற்றுமுள்ள பொதுப்பாதையில் பயணம் செய்ய தாழ்த்தப்பட்டவர்களுக்கு அனுமதி கிடைத்தது. குருவாயூர் ஆலயத்தில் அனைத்து சாதியைச்சார்ந்த இந்துக்களுக்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று கெ. கேளப்பன் தலைமையில் குருவாயூர் சத்தியாகிரகம் நடந்தது. (1931) எ.கெ. கோபாலன் சத்தியாகிரகத்தின் தன்னார்வ ஊழியத்தலைவர் ஆக்கப்பட்டார். இச்சத்தியாகிரகத்தில் பி. கிருஷ்ணபிள்ளை கொடூரமாகத் தாக்கப்பட்டார். இந்த மக்கள் போராட்டங்களின் விளைவாக 1936 ஆம் ஆண்டு நவம்பர் 12-ஆம் நாள் திருவிதாங்கூரில் ஆலய பிரவேசன விளம்பரம் வெளியிடப்பட்டது. தொடர்ந்து மதிராசி ஆலயப் பிரவேசன விளம்பரம் வாயிலாக மலபாரிலும் கொச்சி ராஜாவின் விளம்பரப்படி கொச்சியிலும் அனைத்து பிரிவினர்களுக்கும் ஆராதனை சுதந்திரம் கிடைத்தது.



பி. கிருஷ்ண பிள்ளை



கேரளாவின் சமூக மாற்றத்திற்குச் சாணார்கலகம் வைக்கம் சத்தியாகிரகம், குருவாயூர் சத்தியாகிரகம் என்பவை வகித்த பங்கை மதிப்பிடுக.

# தேசிய இயக்கம் கேரளத்தில்



கெ.பி.கேசவ மேனோன்


ஆட்சி முறைப்படி ஒன்று படுத்தப்படாததால் கேரளாவின் தேசிய இயக்கங்களுக்கு ஒன்று படுத்தப்பட்ட வடிவம் அளிக்கப்படவில்லை. மலபாரில் ஆங்கிலேயர்கள் நேரடியாக ஆட்சி நடத்தியபோது கொச்சியிலும் திருவிதாங்கூரிலும் ரசிடண்ட வாயிலாக மறைமுகமான ஆட்சி நடைபெற்றது. அதனால் மலபாரில் நடந்தது போன்று அரசியல் போராட்டங்கள் கொச்சியிலும் திருவிதாங்கூரிலும் வலிமை பெறவில்லை.

## மலபார்



இ. மொய்து மௌலவி

முதல் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் மலபார் பகுதியில் அரசியல் செயல்பாடுகள் வலுவடைந்தது. மலபார் மாவட்ட காங்கிரலின் முதல் மாவட்ட மாநாடு 1926-இல் அன்னிபெசன்டின் தலைமையில் பாலக்காட்டில் நடைபெற்றது. கெ. பி. கேசவமேனோன், கெ.பி. ராமன்மேனோன், இ. மொய்து மௌலவி, எம்.பி நாராயண மேனோன் என்பவர்கள் இக்காலகட்டத்தில் காங்கிரஸ் செயல்பாடுகளுக்கு மலபாரில் தலைமை வகித்தனர். 1920-இல் மஞ்சேரியில் நடைபெற்ற கடைசி மலபார் அரசியல் மாநாடுகளில் ஆட்சி சீர்த்திருத்தங்கள், குடியான் பிரச்சினை கிலாபத் போன்ற விஷயங்களைப் பற்றி விவாதித்தினர்.




1920 -இல் காந்திஜியும் சௌக்கத்தலியும் கோழிக்கோட்டிற்கு வந்து கிலாபத் இயக்கத்திற்கு ஆதரவு அளித்தனர். இருந்தனர். கட்டிலசேரி முகமது மௌலவி தலைவராகவும் முகமது அப்து ரகுமான் சாகிப் செயலாளராகவும் கிலாபத் குழு உருவானது. கிலாபத் இயக்கம் மலபாரில் வலுவானது. அதைத்தொடர்ந்து மலபாரின் பல பகுதிகளிலும் ஆங்கிலேயர்களுமாக நேரடியான மோதல்கள் ஏற்பட்டது. ஏறநாடு, வள்ளுவநாடு, பொன்னானி தாலுகாக்களில் மலபாரின் விவசாயிகளான மாப்பிளைமார்கள் சக்திவாய்ந்த போராட்டங்களுக்குத் தலைமை தாங்கினார். இப்போராட்டங்களைப் பொதுவாக மலாபர் கலகம் (1921) என்று அழைத்தனர்.



முகம்மது அப்து ரகுமான்

1930 -களில் சட்டமறுப்பு இயக்கங்கள் பலபாரில் சக்தி வாய்ந்தது. கெ. கேளப்பனின் தலைமையில் பையன்னூரிலும் முகமது அப்துல் ரகுமானின் தலைமையில் கோழிக்கோடும் உப்புச்சட்டத்தை எதிர்த்து உப்பு தயாரித்தனர். உப்புச்சட்டத்தை எதிர்த்த சத்தியாகிரகிகளை ஆங்கிலேயப்படை கடுமையாகத் தண்டிக்கவும் தலைவர்களைக் கைதிகளாக்

கவும் செய்தது. வெளிநாட்டுப்பொருட்கள் மறுப்பும் மதுக்கடை மறியல்களும், கைத்தறி பிரச்சாரமும் சட்டமறுப்பின் பகுதியாக நடந்தது. 1934-இல் காந்திஜி சட்டமறுப்பு இயக்கம் பின்வாங்கியதை எதிர்த்து கேரளாவின் காங்கிரஸ் செயலாளர்களில் ஒரு பிரிவு சோசியலிஸ்ட் கட்சிக்காரர்களாக மாறினர், 1939-இல் காங்கிரஸ் சோசியலிஸ்ட் கட்சியாக மாறியது. இ.எம்.எஸ், எ.கே.கோபாலன், பி. கிருஷ்ணபிள்ளை என்பவர்கள் முக்கிய கம்யூனிஸ்ட் தலைவர்களாக இருந்தனர். விவசாயிகளையும் தொழிலாளர்களையும் ஒன்றிணைத்து ஜமீந்தார் முறைக்கும் ஆங்கிலேய ஆட்சிக்கும் எதிராக போராட்டங்களை நடத்தினார். கய்யூர், மொறாழ, கரிவெள்ளூர் ஆகிய இடங்களில் வேளாண்மை சங்கங்களின் தலைமையில் கலவரங்கள் நடந்தது. வெள்ளையனே வெளியேறு இயக்க காலங்களில் அரசு கட்டிடங்களை அழித்தல் பாலங்களைத் தகர்த்தல்.தந்திக் கம்பிகள முறித்தல் போன்ற செயல் மலபாரில் ஏற்பட்டது. இதில் முக்கியமானது கீழாரியூர் குண்டு வழக்கு ஆகும். பரோக்பாலம் உடைப்பதற்கு கெ.பி. மேனோன் குஞ்ஞிராமகிடாவு என்பவர்களின் தலைமையில் கலந்தாலோசனை நடைபெற்றது என்று குற்றம்சாட்டி 27 நபர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்தனர்.



### பூக்கோட்டூர் போர்

ஒத்துழையாமையும் கிலாபத்தும் சக்திவாந்த மலபாரில் 1921-இல் மலபார் கலகத்தின் பகுதியாக நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சியே பூக்கோட்டூர் போர். பூங்கோட்டூரில் கிலாபத்து குழுவின் செயலாளரான வடக்கே வீட்டில் முகமதை திருட்டுக் குற்றம் சுமத்தி கைது செய்ய ஆங்கிலேயக் காவலர்கள் முயற்சி செத்ததால் கலகம் ஆரம்பமானது. மூவாயிரத்திற்கு மேலா னவர்கள் பங்கெடுத்த கலகத்தை ஒடுக்குவதற்காக ஆங்கிலேய அரசு அதிக கஷ்டத்திற்குள்ளானது. போரில் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.



### சேற்றூர் சங்கரன் நாயர்

இந்தியன் தேசிய காங்கிரசின் தலைவராக இருந்த ஒரே ஒரு மலையாளி பாலக்காட்டுக் காரரான சேற்றூர் சங்கரன் நாயர். 1897-இல் அமராவதி மாநாட்டில் அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜாலியன் வாலா பாக் படுகொலையை எதிர்க்க அவர் வைசிராயின் எக்ஸிகூட்டீவ் கவுண்சில் அங்கத்துவத்தை ராஜினாமா செய்தார். காந்திஜியின் போராட்ட முறைகளோடு கடுமையான எதிர்ப்பையுடைய அவர் 'காந்திஜியும் கொடுங்கோண்மையும்' (Gandhi and Anarchy) என்ற நூலை எழுதினார்.



### மலபார் கலகங்களைக் குறித்த படப்பாட்டு

"அன்று இருபத்திஒன்றில் நாம் இம்மலையாளத்தில்
ஒன்று சேர்ந்து வெள்ளையோடு எதிர்த்து நல்லமட்டில்
ஏறநாட்டில் தீரமக்கள் இரத்தம் சிந்திய நாடிதில்
சீறிடும் பீரங்கிகளுக்கு மார்பு காட்டிய நாடிதில்
வாரியன் குந்நத்து வீர குஞ்ஞுகமது காஜியும்
வாசிமூத்து மூப்பருடெ கூட கூட்டமாக
* * * *
நாமுண்டாக்கும் நெல் ஜமீன்தார்களை ஊட்டுவதற்கு
சம்மதிக்க மாட்டோம் என்று போராடுவோம்
நமது காசுவாங்கி இங்கிலாந்திற்கு அனுப்பவதற்கு
சம்மதிக்கக மாட்டோம் என்று போராடுவோம்
* * * *
நமது ஆட்களையோ சுபர் கொண்றது
மஞ்சேரியில் நின்று ஐந்தாறு மைல் தூரமே மோங்காத்தில்
பயணம் செய்பவர்களுக்குக் கணமுடியுமோ வழியில்
இறந்து போன கிச் கோக் ஸாஹிபினுடைய
நினைவுச்சின்னம் சாத்தானைக் குடிவெச்சது போல்
ஆ பலாலின் நினைவுச்சின்னம்
* * * *
மிகுந்த நாட்டுப்பற்று கொண்ட வீரர் உண்டு நாட்டில்
உயிர் தப்ப வேணுமென்றால் போக வேண்டும் இங்கிலலாந்தில்."

(மலபார் கலகத்தை அடித்து ஒடுக்கிய மாவட்டக் காவலாளர்கள் தலைவர் கிச்கோச்சினை கலகக்காரர்கள் கொலை செய்தனர். ஆங்கில அரசாங்கம் அவருக்கு ஒரு நினைவுச்சின்னம் கட்டியது. இதை இடித்து மாற்ற வேண்டும் என்று வேண்டிக்கொண்டு கலகத்தில் பங்கேற்ற கும்பளத்து கோவிந்தன் நாயர் எழுதிய பாட்டு)

## திருவிதாங்கூர்

1891-இல் மலையாளி மெம்மோறியல் வழியாக திருவிதாங்கூரில் அரசியல் போராட்டத்திற்கு ஆரம்பம் குறிக்கப்பட்டது. அரசு வேலைகளில் திருவிதாங்கூர் மக்களுக்கு போதிய முக்கியத்துவம் கேட்டு பாரிஸ்டர் ஜி. பி. பிள்ளையின் தலைமையில் பதினாயிரத்திற்கு மோலானவர்கள் கையெழுத்து போட்ட விண்ணப்பம் மகாராஜவுக்குச் சமர்ப்பித்தனர். இது மலையாளி மெம்மோறியல் என்று அறியப்படுகிறது.

### புன்னப்புற- வயலார்

“திருவிதாங்கூர் மக்கள் சுதந்திரம் பெறுவதற்குரிய கலகம் தோன்றி அதிக காலமானது. புன்னப்புறையிலும் வயலாரிலும் தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் மக்கள் சுதந்திரத்திற்கும் ஜனநாயக ஆட்சிக்குமாகும். 1938-இல் கடைக்கலும் பாங்ஙோடும் ஆலப்புழையிலும் கொல்லத்திலும் நடந்த போராட்டங்கள் சுதந்திர போராட்டத்திற்கு உதவி செய்தது போல் புன்னப்புறையிலும் வயலாரிலும் நடந்த படுகொலைகளும் சுதந்திரத்தின் வேகத்தைக் கூட்டியது .”

**சி. கேசவன்**

**(ஆதாரம் : சி. கேசவனின் சொற்பொழிவு)**

1896-இல் டாக்டர் பல்பு ஈழவர் நேரிடுகின்ற துன்பங்களை எடுத்துக்காட்டி ஈழவ மெம்மோரியலும் மகாராஜவுக்கு சமர்ப்பித்தார். திருவிதாங்கூர் திவானை விமர்சித்ததின் காரணமாக தேசாபிமானி” செய்தித்தாள் ஆசிரியரான ராமகிருஷ்ண பிள்ளை நாடு கடத்தப்பட்டது பெரிய அரசியல் குழப்பங்களுக்குக் காரணமாயின. திருவிதாங்கூர் மொத்தமாக மாணவர்கள் போராட்டங்கள் வளர்ந்து வந்தன. அரசு வேலைகளிலும் சட்டசபைகளிலும் மக்கள் தொகையின் அடிப்படையில் இட ஒதுக்கீடு வேண்டுமென்று கிறிஸ்தவ-இஸ்லாமிய-ஈழவ சமுதாயங்கள் 1932-இல் நிவர்த்தனா கலகத்தை ஆரம்பித்தனர். என்.வி. ஜோசப், பி.கெ. குஞ்னு, சி.கேசவன் ஆகியவர்களின் தலைமையில் பொறுப்புடைய ஆட்சிக்குரிய ஒரு போராட்டம் நடந்தது. 1938-இல் பட்டம் தாணு பிள்ளை தலைவராக திருவிதாங்கூரில் ஸ்டேட் காங்கிரஸ் உருவானதோடு திருவிதாங்கூரில் அரசியல் செயல்பாடுகள் சிறப்பாக நடைபெறத்தொடங்கியது. திவான் சா்.சி.பி. ராமசுவாமி ஐயரின் ஆட்சி சீர்திருத்தங்களுக்கு எதிராக 1946-இல் நடந்த புன்னப்புற-வயலார் போராட்டத்தோடு தொழிலாளர்களும் அரசியலில் ஈடுபடத் தொடங்கினர்.



*பட்டம். வி. தாணுபிள்ளை*


எனது கடவுள் கல்லும் மரவுமல்லோ;
எனது அரசன் அழிமதிக் காராய ராஜசேவகன்மாருமல்லோ.
என்னை நாடு கடத்துகின்ற ராஜ சேவகர்களின் பேரில்
பக்தி இல்லை என்ற குற்றத்தினால் என்றால் அந்த தண்டனைச் சட்டம்
அந்த சேவகர்களின் மனோ ராஜ்யத்தில்
நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வகையாக இருக்கலாம்;
திருவிதாங்கூர் நாட்டின் தண்டனை சட்டப் படி இருக்காது.
இல்லையென்றால் தான், நாடு கடத்தல், சிறைவாசம் முதலான
தண்டனைகளைப் பயப்பட வேண்டிய தேவை எனக்கில்லை
நான் எனது நாட்டின் சட்டத்தை மீறவில்லை.
அந்த தண்டனைகளை பயப்பட வேண்டியவர் அரண்மனைகளில்
கொலை செய்தும், ஏழை மக்களின்
செல்வங்களைக் கவர்ந்தும் எஜமான்களை துரோகித்தும்
கடவுள் கற்பனைக்கு எதிராகவும் துரோகங்களைச்
செய்தும் பாவக் குழியில் வீழ்ந்திருப்பவராவர்



K. Ramakrishna Pillai

கெ. இராமகிருஷ்ண பிள்ளை

## கொச்சி



*இ. இக்கண்ட வாரியார்*

திவானான ஷண்முகம் செட்டி மின்சாரம் விநியோகத்தைத் தனியார் கம்பெனியிடம் ஒப்படைத்ததற்கு எதிராக நடைபெற்ற மின்சாரப் போராட்டம் (1936) கொச்சியில் பொறுப்புடைய ஆட்சிக்கான போராட்டங்களை ஆரம்பித்தன. ஆனால் திருவிதாங்கூரைப் போன்று கொச்சியில் போராட்டங்கள் சக்தி அடையவில்லை. 1941-இல் கொச்சி ராஜ்ய பிரஜா மண்டலம் தோன்றிய பிறகு அரசியல் போராட்டங்கள் வலிமை பெற்றன. இ. இக்கண்ட வாரியர், பனம்பள்ளி கோவிந்த மேனோன், கெ ஐயப்பன் போன்றவர்கள் கொச்சி ராஜ்ய பிரஜாமண்டலத்தின் செயல்களுக்குத் தலைமை தாங்கினர்.



**மலபார், திருவிதாங்கூர், கொச்சி ஆகிய இடங்களில் நடைபெற்ற முக்கிய அரசியல் புரட்சிகளை உட்படுத்தி நழுவுபடம் தயார் செய்யவும்.**

*நமது நாட்டின் பொருளாதாரக் கொள்கை மிகவும் அதிருப்திகரமான ஒன்றாகும், ஒரு பக்கத்தில் செல்வந்தர்கள் செழிப்பாகவும் மறுபகுதியில் 80 % மக்களும் துயரத்துடனும் வாழ்கின்றனர். பட்டினியும் பசியுமாக மக்கள் வாழ்கின்ற இத்தகைய பொருளாதாரக் கொள்கைகளுக்கு மாற்றம் வராமல் திருவிதாங்கூரில் ஓர் ஆட்சிக்கூடத்திற்கு நிலை நிற்பது கடினமானதாகும். ஒரு மாறுபட்ட அமைப்பினால் மட்டுமே பொருளாதார அமைப்பு மாறுபடும். வருங்கால திருவிதாங்கூர் ஒரு சோஷியலிஸ்ட் திருவிதாங்கூர் ஆனால் மட்டுமே திரிவிதாங்கூரின் நிலைபேற்றிற்கு வாய்ப்புள்ளது. அது மாறுபடுவதற்கு ஓர் இரத்தச் சிந்தலால் மட்டுமே முடியும் என்று நான் நம்பவில்லை எந்தப் பொருளாதாரா நீதியும் சமாதான மாக இருக்க வேண்டும்.*

ஆதாரம் : வர்கலை ஆலய மைதானத்தில் சேர்ந்த மாநில காங்கிரஸ் கூட்டத்தில் திருமதி ஆனிமஸ்கிரீன் நடத்திய சொற்பொழிவு (சுதந்திரப் போராட்ட வீரர்களின் தேர்தெடுக்கப்பட்ட சொற்பொழிவுகள், மாநில புராதானச்சான்று)

## தேசிய இயக்கமும் பெண்களும்



*எ.வி. குட்டிமாளு அம்மா*

மேல் கொடுக்கப்பட்டுள்ள சொற்பொழிவின் பகுதியைக் கவனித்தீர்களா? பெண்களும் கேரள அரசியல் புரட்சிகளில் திறமையுடன் பங்குபெறவும் அவர்களின் அரசியல் சிந்தனைகளை வெளிப்படுத்தவும் செய்தனர். வெளிநாட்டுப் பொருட்களைப் புறக்கணித்தல், தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றம், கதர் பிரச்சாரம் என்பவை பெண்கள் பங்களிப்பின் மூலம் கவனத்திற்குள்ளானது. 1931-இல் காங்கிரஸின் வடகரை மாநாட்டின் பகுதியாகப் பெண்கள் கூட்டங்கள் சேர்ந்தன. அது கேரளத்தின் பெண்களின் முதல் கூட்டமாக அறியப்படுகிறது, மலபா



*அக்கம்ம செறியான்*



*ஆனி மஸ்கிரீன்*

ரில் ஏ. வி குட்டி மாளு அம்மாவும் திருவிதாம்கூரில் அக்கம்ம செறியான் ஆனி மஸ்கிரீன் போன்றவர்களும் தேசியப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கிய வர்களாவர்.



### கௌமுதியைப் பற்றி காந்திஜி



"தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக நான் வடகரையில் பேசும் போது அணிகலங்களை நன்கொடையாகப் பெண்களிடம் கேட்டுக்கொண்டேன். சொற்பொழிவு முடிந்த உடனே பதினாறு வயதுள்ள கௌமுதி என்ற பெண் மேடைக்கு வந்தாள். அவள் தனது கைகளிலிருந்து வளையல்களைக் கழற்றி தந்துவிட்டு என்னிடம் ஆட்டோகிராப் கேட்டுக்கொண்டார். நான் அதைக் கொடுக்கத்தயாரானேன். அப்போது அவள் தனது மீதி வளையல்களைக் கழற்றித் தந்தாள், அப்போது நான் கூறினேன் நீ உனது இரண்டு வளையல்களையும் எனக்குத் தரவேண்டியதில்லை. அப்பொழுது தங்க நெக்லஸை எனக்குக் கொடுத்துக்கொண்டு அவள் அதற்குப் பதில் அளித்தாள். அவள் ஆட்களின் ஆரவார மகிழ்ச்சிக்கிடையில் தனது கம்மல்களைக் கூடத் தந்தாள், இந்த நகைகளுக்குப் பதிலாக நகைகள் வாங்கி அணிய வேண்டியது இல்லை என்று நான் கௌமுதியிடம் கூறினேன். உனது தியாகம் நீ அணிந்த அணிகலங்களை விட உண்மையான அணிகலன்களாகும்."

## ஐக்கிய கேரளத்திற்கு



*இ.எம்.எஸ் நம்பூரிதிப்பாடு*

ஒரே மொழியைப் பேசியிருந்தவர்களானாலும் மலையாளிகள் மூன்று வித்தியாசமான ஆட்சிப் பிரிவுகளாகப் பிரிந்து காணப்பட்டனர். 1920 -இல் நாக்பூரில் சேர்ந்த காங்கிரஸ் மாநாட்டில் மொழி அடிப்படையிலான மாநில காங்கிரஸ் குழுக்கள் உருவாக்க தீர்மானித்தனர். இதன் அடிப்படையில் 1921 ஏப்ரல் 23 முதல் 26 வரை ஒற்றப்பாலத்தில் வைத்து முதல் கேரள மாநில காங்கிரஸ் அரசியல் மாநாடு கூடியது. ஆந்திர கேசரி என்று குறிப்பிடுகின்ற பாரிஸிடர் டி. பிரகாசன் இம் மாநாட்டில் தலைமை தாங்கினார். தொடர்ந்து திருவிதாங்கூர், கொச்சி, மலபார் பிரதேசங்களை உட்படுத்தி கேரள பிரதேஸ் காங்கிரஸ் குழு நடைமுறைக்கு வந்தது.

ஜவஹர்லால் நேருவின் தலைமையில் சேர்ந்த பையன்னூர் காங்கிரஸ் கூட்டத்தில் சுதந்திரம் பெற்றபின் கேரளாவை ஒரு தனிமாநிலமாக மாற்றி அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையைக் கொண்டு வந்தனர். 1947-இல் கேளப்பனின் தலைமையில் திருச்சூரில் சேர்ந்த ஐக்கிய கேரள மாநாட்டிலும் இக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து 1949-ஜூலை ஒன்று திருவிதாங்கூரையும் கொச்சியையும் ஒன்றுபடுத்தி திரு-கொச்சி மாநிலம் உருவாக்கப்பட்டது. மலையாளம் பேசுகின்ற பகுதிகளை உட்படுத்தி கேரளம் உருவாக்கவேண்டுமென்று இ.எம். எஸ் நம்பூரிதிப்பாடு 'ஒன்றே கால் கோடி மலையாளிகள்' என்ற நூலில் குறிப்பிட்




டுள்ளார். மொழி அடிப்படையிலான மாநிலங்கள் உருவாக்குவதற்காக போராட்டங்கள் வலுவடைந்ததைத்த தொடர்ந்து மத்திய அரசாங்கம் மாநில புனரமைப்புக் குழுவை உருவாக்கியது. குழுவின்

சிபாரிசின் படி மலபார், திருவிதாங்கூர், கொச்சி பகுதிகள் உட்படுத்தி 1956 நவம்பர் 2-ஆம் நாள் கேரள மாநிலம் உருவாயிற்று.

திருவிதாங்கூரின் பகுதியாகக் காணப்பட்ட தோவாளை அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவன் கோடு ஆகிய தாலுகாக்கள் மதிராசி மாநிலத்திற்கு விட்டு கொடுக்கப்பட்டது. தென் கர்ணாடகாவின் பகுதியாகக் காணப்பட்ட காசர்கோடு, ஹோஸ்துர்க தாலுகாக்கள் கோரளத்துடன் சேர்க்கப்பட்டது.

### ஐக்கிய கேரளம் உறுதிமொழி

மூன்றாய் முறிந்து கிடக்கும் இக் கேரளம்
ஒன்றாக்குவோம் என்று உறுதிமொழி செய்கிறோம்
நாம் நூற்றி இருபத்தி ஐந்து இலட்சம் உள்ளங்கள்
ஒண்றினைந்து துடிப்பது இந்த சத்திய எழுத்துக்களாம்
இரண்டரைக்கோடி வலிமைவாய்ந்த கரங்கள்
சங்கரத்திங்கள் உண்டு ஆயுதம் ஏந்துவான்
தைரியமிருந்தால் எதிர்த்து நிற்க
தெய்வ அதிகாரமும் உடன்படி பழைமையயும்!
சக்தி இருந்தால் எதிர்த்து நிற்கட்டும்
கர்வ கபட சக்திக்கள்!
ஏகாதிபத்தியத்தை அழித்து, பொதுமக்கள்-
அமைதியாய் வாழ நடைமுறைப்படுத்துவோம். இங்குநாம்
ஒரு மக்கள் சபை. ஒரு நீதி முறை
ஓர் அரசாங்கம் இக்கேரள பூமியில்!

***என். வி. கிருஷ்ண வாரியர்***

*மாநில உருவாக்கத்திற்கு வழிவகுத்த பல்வேறு நிகழ்ச்சிகளை உட்படுத்தி ஒரு டிஜிட்டல் ஒப்ப டைப்பு தயார் செய்க*

ஐக்கிய கேரளம் உருவாக்கத்திற்கு வழி வகுத்த வாய்ப்புகளை ஆராய்ச்சி செய்யவும்

நிலச் சீர்திருத்தம், பொதுமக்கள் சுகாதாரம், கல்வி, பங்கீட்டுத் திட்டமிடல் போன்ற மண்டலங்களில் கேரளம் இன்று வரை அடைந்த சாதனைகளை பல்வேறு உறைவிடங்களின் உதவியுடன் கண்டுபிடித்து பதிப்பு தயாரிக்கவும்.

**கேரளம் நவீன காலத்தை நோக்கி**

- ஐரோப்பியர்களின் வருகை
  - போர்ச்சுக்கீசியர்கள். டச்சுக்காரார்கள். ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரார்கள்
- ஆரம்பகால எதிர்த்து நிற்றல்கள்
  - பழசிராஜா, வேலுத்தம்பி, பாலியத்தச்சன்
- பொருளாதார மாற்றங்கள்
  - உலகச்சந்தையின் பகுதியானது, புவிக்கண்டங்களில் மாற்றங்கள், வேளாண்மையின் வியாபாரக்கொள்கைகள், தொழில்களின் வளர்ச்சி.
- கலாச்சார சமூகத் துறைகளில் மாற்றங்கள்
  - கல்விச்சட்டம். ஆரேக்கியம், சமூகசீர்திருத்த இயக்கங்கள், வைக்கம் குருவாயூர் சத்தியாகிரகம், ஆலயப் பிரவேசன விளம்பரம்
- தேசிய இயக்கம்
  - ஒத்துழையாமைப் போராட்டம், சட்டமறுப்பு போராட்டம், வெள்ளையனே வெளியேறு போராட்டம் ஐக்கிய கேரளம்

## மதிப்பிடலாம்

- பட்டியல் A யில் கொடுத்திருப்பதற்கு பொருத்தமானவற்றை B யில் இருந்து கண்டுபிடித்து எழுதுக.

| A | B |
|---|---|
| • போர்ச்சுக்கீஸ் | • ஆற்றிங்கல் கலகம் |
| • டச்சு | • கர்நாடகப் போர் |
| • பிரெஞ்சு | • குளச்சல் போர் |
| • பிரிட்டன் | • குஞ்ஞாலி மரைக்கார்களின் போராட்டங்கள் |

- ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி கேரளாவில் ஆதிக்கம் நிறுவியது எவ்வாறு?
- ஆங்கில ஆட்சியில் கேரளாவில் வியபார, விவசாய மாற்றங்களை மதிப்பீடு செய்க.
- கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய நபர்களை அடைப்புக்குறியிலிருந்து கண்டுபிடித்து பட்டியல் தயார் செய்க.

NT-645-6-SOC.SCI.-I-10-T-VOL.2

- குண்டறை விளம்பரம் ......................................
- வைக்கம் சத்தியாகிரகம் ......................................
- குருவாயூர் சத்தியாகிரகம் ......................................
- கீழாரியூர் குண்டுவெடிப்பு வழக்கு ......................................
- மலையாளி மெம்மோரியல் ......................................

(டாக்டர் பல்பு, ஜி.கே பிள்ளை, பழசிராஜா, கெ, கேளப்பன், கே.பி மேனோன், ஸ்ரீ நாரயணகுரு, வேலுத்தம்பி தளவாய், டி.கெ. மாதவன்)


- கேரளாவில் நிலவி இருந்த சமூகச் சமத்துவமின்மை மூட பழக்கவழக்கங்கள் போன்றவற்றிற்கு முடிவுகட்ட வளர்ந்துவந்த சீர்திருத்த இயக்கங்களும் போராட்டங்கள் எவை? அட்டவணைப்படுத்தவும்,
- கேரளாவில் தேசிய அமைப்புகளுக்கு ஒருங்கிணைந்த தன்மை காணப்படவில்லை அதற்கான காரணங்கள் யாவை?
- ஐக்கிய கேரளத்திற்கு வழிவகுத்த நிகழ்ச்சிகளை விளக்குக.

## தொடர் செயல்பாடுகள்

- கேரளத்தில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைபெற்ற ஆரம்பகால எதிர்த்து நிற்றல்களான ஆற்றிங்கல் கலகம், பழசிக்கலகங்கள், வேலுத்தம்பி, பாலியத்தச்சனுடையவும் போராட்டங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாடகம் தயார் செய்து வகுப்பில் நடத்துக.
- கேரளாவின் நாகரீகத் துறையில் ஆங்கிலேய ஆட்சிகாலத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்க.
  உட்படுத்த வேண்டுய குறிப்புகள் :-
  - அச்சுக்கூடமும் கல்வியும்
  - ஆரோக்கியம்
  - சட்டமும் நீதி நியாயமும்
  - வாரிசு முறை
- கேரளத்தில் ஏற்பட்ட சமூகச்சீர்திருத்த இயக்கங்கள் பற்றியும் சமூக மாற்றங்களுக்காக நடைபெற்ற போராட்டங்கள் பற்றியும் ஐ.சி.டி உதவியுடன் விவரங்கள் சேகரித்து டிஜிட்டல் ஆல்பம் தயார் செய்க.

அலகு

09



# அரசும் அரசியல் அறிவியலும்

இது எங்களுடைய இரண்டாவது பிறப்பாகும். உயிருடன் நாட்டிற்கு திரும்பி வருவோம் என்ற ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமலிருந்தது. எங்களை மீட்பதற்காகச் செயல்பட்ட இந்திய அரசாங்கத் துடனும், மற்ற அனைவருடனும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தியக் குடிமகன் என்பதில் பெருமிதம் கொள்கின்ற நிமிடமாகும் இது.

சிரியாவில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில் அகப்பட்டு நாட்டிற்கு திரும்பி வர முடியாமல் இருந்த இந்தியச் செவிலியர்களை நாடுமுழுவதும் ஒன்றாகச் சேர்ந்து செயல்பட்டு அவர்கள் மீட்கப்பட்டு நாட்டிற்குத் திரும்பி வந்த பொழுது கூறிய மறுமொழிதான் மேலே கொடுக்கப்பட்டுள்ளது. இதைப் போன்ற நிகழ்ச் சிகளைக் குறித்து உங்களுக்குத் தெரியுமல்லவா. எக்காலத்திலும் மக்களின் உயிருக்கும் , உடமைக்கும் பாதுகாப்பு அளிக்கவும், மக்கள் நல செயல்பாடு களை நடைமுறைப்படுத்துவதற்கும், மேலே குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்ற சிக்கலான சூழ்நிலைகளில் மிகப் பயனுள்ள முறையில் செயல்படக்கூடிய ஒரே ஒரு நிறுவனம் நாடாகும். ஆகையால் நாம் உருவாக்கியிருக்கின்ற சமூக, அர சியல் நிறுவனங்களில் மிகவும் முக்கியமானது நாடாகும்.



*நிக்கோளா மாக்யவல்லி*

உலகளாவியதும் வலிமையுள்ளதும் தவிர்க்க முடியாததுமான ஒரு நிறுவனமாகும் அரசு. மனிதன் நிலையாக ஓரிடத்தில் வாழத்தொடங்கியதன் காரணமாகத் தான் நாடு உருவானது. வெவ்வேறு வடிவிலும், அமைப்பிலும் அமைந்திருந்தது என்றாலும் அரசு எக்காலத்திலும் நிலவியிருந்ததாக வரலாற்றின் மூலம் புரிந்துகொள்ளலாம். நாடு என்ற வார்த்தையை முதன்முதலில் பயன்படுத்தியது மேற்கத்திய சிந்தனையாளரான நிக்கோளா மாக்யவல்லியாகும்.

C4RHTB

## நாடு என்றால் என்ன

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நிலையாகத் தங்கி வாழ்கின்றவர்களும், இறையாண்மை யுள்ள அரசாங்கத்தையும் கொண்டுள்ள மக்கள் கூட்டமே நாடு எனப்படுகிறது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள வரையறையிலிருந்து ஒரு அரசிற்கு இருக்க வேண்டிய அடிப்படைக் காரணிகள் எவையென்று கண்டுபிடிக்க முயற்சிக்கவும்

- மக்கள்
-
-
-

## மக்கள் (Population)

தரப்பட்டுள்ள செய்திகளை ஆய்வு செய்யவும். வெவ்வேறு நாடுகளின் மக்கள்தொகை யுடன் தொடர்புடைய கருத்துகளே செய்திகளில் அடங்கியுள்ளது. நாடு உருவாக்கத்திற்கு இன்றியமையாத ஒரு காரணிதான் மக்கள். பரஸ்பரத் தொடர்பு, பரஸ்பரக் கருத்து பொது மக்கள் விருப்பம் என்பவைகளை அடிப்படையாகக் கொண்டு, மக்கள் ஒற்றுமையாக செயல்பட வேண்டுமென்பது நாட்டினுடைய நிலை நிற்பிற்கு மிகவும் இன்றியமையாத தாகும். மக்கள் இல்லாமல் நாடு இல்லை. ஆனால் ஒரு நாட்டில் இருக்க வேண்டிய குறைந்த மக்கள் தொகை எவ்வளவு என்றோ, கூடுதல் எவ்வளவு மக்கள் இருக்க வேண் டுமென்றோ குறிப்பிடப்பட வில்லை. அதிகமக்கள் தொகையும், குறைந்த மக்கள் தொகை யும் நாட்டிற்கு ஏற்றதல்லஇது நாட்டினுடைய வளர்ச்சியைப் பாதிக்கும். மக்கள்தொகை குறைவாக உள்ள கனடா நாடு குடியேற்றத்தை ஊக்குவிக்கின்றது. சிறப்பான மனித சக் தியின் பற்றாக்குறை தான் இதற்குக் காரணம் ஆனால் அதிகமக்கள் தொகை வேலை யில்லாத் திண்டாட்டத்திற்கும் வறுமைக்கும் காரணமாகிறது.



**அதிகமக்கள் தொகையும், குறைந்த மக்கள்தொகையும் எந்த வகை யில் நாட்டிற்குத் தடையாக அமைகிறது என்று மதிப்பிடுக**

ஒரு நாட்டில் வசிக்கும் மக்கள் ஒரே மதத்தைப் பின்பற்றுகிறவர்களாகவோ, ஒரே மொழியையோ, பண்பாட்டையோ கடைபிடிப்பவர்களாகவோ இருக்க வேண்டு மென்பதில்லை. ஆனால் பொதுவான தேசிய உணர்வை அடிப்படையாகக் கொண்டு ஒற்றுமையுணர்வுடன் வாழக்கூடியவர்களாக இருக்க வேண்டும். தேசிய உணர்வு( தேசிய ஒருமைப்பாடு) என்றால் என்னவென்றும், அது எந்தெந்த முறை களில் நாட்டின் மீது தாக்கம் செலுத்துகின்றது என்பதையும் முன் பாடப்பகுதிக ளில் படித்துள்ளோம் அல்லவா?.

## நிலப்பகுதி (Territory)

தரப்பட்டுள்ள இந்தியாவின் நிலப்படத்தையும், கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களையும் ஆய்வு செய்யவும். இந்தியாவின் நிலப்பகுதி, எல்லைகள் என்பவைகள் பற்றிய விளக்கங்களே நிலப்படத்துடன் தரப்பட்டுள்ளது. நாடு உருவாக்கத்திற்குத் தேவையான ஒரு முக்கிய காரணி நிலப்பகுதியாகும்.

வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்ட ஒரு நிலப்பகுதி நாட்டிற்குத் தேவையாகும். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் மககள் நிலையாகத் தங்கி வாழும் போது தான் நாடு உருவாக்கப்படுகிறது. நிலப்பகுதியின் மீது நாட்டிற்கு முழுமையான கட்டுப்பாடு இருக்க வேண்டும்.

நிலப்பகுதி என்று கூறும்போது கரைப்பகுதி என்ற அர்த்தம் மட்டுமல்ல. எல்லைப் பகுதிக்குள் உட்படுகின்ற கரைப்பகுதியும், நீர்ப்பகுதியும் வாயுமண்டலப்பகுதியும், கடற்கரைப் பிரதேசமும் நிலப்பகுதியினுடைய பகுதியாகும்.




உலக நாடுகளின் பரப்பளவில் இந்தியா ஏழாவது இடத்தை வகிக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? உலக அரசியல் வரைபடத்தை உற்றுநோக்கவும். மிகப்பெரிய நாடுகளான ரஷ்யா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளையும் மிகச்சி



**எல்லை நீர்நிலை**

பெருங்கடலை ஒத்த நாடுகளுடைய கடலோரப் பகுதியிலிருந்து 12 நாட்டிக்கல் மைல்( 22 கிலோமீட்டர்) வரையுள்ள கடல்பகுதியும், நிலப்பகுதியினுடைய பாகமாகக் கணக்காககப்படும் இப்பகுதி டெரிட்டோரியல் வாட்டர்ஸ் என்றழைக்கப்படுகிறது. அனுமதியில்லாமல் இப்பகுதிக்குள் நுழைகின்ற கப்பல்களும் படகுகளும் கடலோர எல்லைப்படையால் பிடிக்கப்படுவதுண்டு.

றிய நாடுகளான ஸான்மெரீனோ, வத்திக்கான்சிட்டி என்ற நாடுகளையும் நீங்கள் பார்க்கலாம். நிலப்பகுதியின் பரப்பளவு மட்டும் நாட்டு உருவாக்கத்தில் தடையாக அமைவது இல்லை எல்லைகளையுடைய நிலப்பகுதி இருந்தால் போதும்.

## அரசாங்கம்

இந்திய அரசாங்கத்தைக் குறித்தும் அரசாங்கத்தினுடைய காரணிகளைக் குறித்தும் நீங்கள் முன்வகுப்பில் கற்றுள்ளீர்கள் அல்லவா? ஒரு நாட்டிற்கு மிகவும் தேவையான ஒரு காரணியாகும் அரசாங்கம். நாட்டிற்கு வேண்டி சட்டம் இயற்றுவதும், நடைமுறைப்படுத்துவதும், நீதியை நிலைநாட்டுவதும் அரசாங்கமாகும். மக்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும், பலவகைப்பட்ட சேவைகள் கிடைக்கச் செய்வதும் அரசாங்கமாகும். நாட்டிற்காக அரசாங்கம் நிறைவேற்றுகின்ற சில கடமைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. கூடுதலாக எழுதி அட்டவணையை விரிவுபடுத்தவும்.

- சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுதல்
- வேலைவாய்ப்புகளை அதிகரித்தல்.
- விரிவாக்கப் பணிகளை நடைமுறைப்படுத்துதல்.
- 
- 

அரசாங்கங்கள் நிறைவேற்றுகின்ற இத்தகைய கடமைகளின் மூலமே நாடு மக்களிடையே செல்கின்றது. வெவ்வேறு நாடுகளில் பலவித்தியாசமான அரசாங்கங்களே நிலைநிற்கிறது.

மன்னராட்சி, இராணுவ ஆட்சி, மக்களாட்சி போன்ற பலவகைப்பட்ட அரசாங்கங்களைக் குறித்து கற்றுள்ளீர்கள் அல்லவா? எந்த வகையான அரசாங்கங்களாக இருந்தாலும் எல்லா நாடுகளிலும் அரசாங்கம் இருக்க வேண்டும். அரசாங்கங்கள் காலத்திற்கேற்றவாறு மாற்றங்களுக்கு உட்பட வேண்டும். ஆனால் நாடு நிலையான ஒன்றாகும்.

## இறையாண்மை (Sovereignty)



**கேரளம் ஒரு நாடில்லை**

சரியான நிலஅமைப்பும் மக்களும் அரசும் கேரளாவில் உள்ளன. ஆனால் உள்நாட்டு வெளிநாட்டு காரியங்களில் முடிவெடுக்கும் அதிகாரம் இல்லை. அதனால் தான் கேரளத்தை ஒரு நாடாகக் கருத முடிவதில்லை

மேலே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புச் செய்திகளை கவனியுங்கள். தேசிய அளவிலான பிரச்சினைகளிலும் இந்திய அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானங்களும் கொள்கைகளுமே இங்கு வெளியிடப்பட்டிருக்கின்றது. வெளிநாடுகளின் கட்டுப்பாடின்றி உள்நாட்டுக் விவகாரங்களில் தீர்மானம் மேற்கொள்வதற்கும், சர்வதேச பிரச்சினைகளில் தங்களுடைய கொள்கைகளைப் பின்பற்றுவதற்குமுள்ள முழுமையான அதிகாராம் நாட்டிற்கு உள்ளது. நாட்டினு




டைய இத்தகைய அதிகாரம் இறையாண்மை எனப்படுகிறது. நாட்டினை மற்று நிறுவனங்களிலிருந்து வேறுபடுத்தி காட்டுவது இறையாண்மையாகும்.

மக்கள் , நிலப்பகுதி, அரசாங்கம் இவையெல்லாம் இருந்தாலும் நாட்டை உருவாக்க முடியாது. இறையாண்மை இருந்தால் மட்டுமே நாடு நடைமுறைக்கு வரமுடியும. இறையாண்மை என்பது நாட்டினுடைய முழுமையானதும், தாராளமானதும் பிரிக்கமுடியாதது மான அதிகாரமாகும். இறையாண்மைக்கு இரண்டு முக்கிய பிரிவுகள் உண்டு. அவை எவையெல்லாமென்று ஆராய்க.



**தென்சூடான்**

2011 ஆம் ஆண்டு சூடான் பிரிக்கப்பட்டு உருவான நாடுதான் தென்சூடான். ஒரு நாட்டினுடைய இறையாண்மைப் பிரிவினை புதிய நாடு உருவாகுவதற்குக் காரணமாகிறது என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டாகும் ஐக்கிய நாட்டு சபையின் 193- ஆவது உறுப்பினர் நாடான தென்சூடான்

**இறையாண்மை**

**உள்நாட்டு அளவில்** : நிலப்பகுதியின் எல்லைக்குள் எல்லாப் பிரச்சினைகளிலும் தீர்மானம் மேற்கொள்வதற்கான அதிகாரம்

**வெளிநாட்டு அளவில்**: சர்வதேச பிரச்சினைகளில் தங்களுடைய தீர்மானங்களை மேற்கொள்வதற்கான அதிகாரம்

நாடு உருவாக்கத்திற்குத் தேவையான காரணிகளை உட்படுத்தி ஒரு கருத்தரங்கம் நடத்தவும்



## நாட்டின் கடமைகள்

ஒரு நாட்டினுடைய கடமைகள் பொறுப்புகள் குறித்து புகழ்பெற்ற மேற்கத்திய சிந்தனையாளரான ஜெர்மி பெந்தாமினுடைய கண்ணோட்டமே மேலே கொடுக்கப்பட்டுள்ளது. பொதுநலன் அதாவது மக்கள் நலன் எல்லாநாடுகளுடையவும் கடமையாகும். கிரேக்க தத்துவ சிந்தனையாளர்களான அரிஸ்ட்டாட்டிலும், பிளாட்டோவும் நாட்டினுடைய முக்கிய கடமையாகக் கணக்கிடுவது ஒரு குடிமகனுக்கு மிகச் சிறப்பான வாழ்வளிக்க வேண்டும் என்பதாகும்.

நவீன காலத்தில் மிகப் பெரிய அளவிலான கடமைகள் நாட்டிற்கு உண்டு.

***நாட்டின் இலட்சியம் மிக அதிக ஆட்களுக்கு அதிக அளவு நன்மை செய்தலாகும்***

**ஜெர்மி பந்தாம்**

நலமான நாடு என்ற கருத்து நடைமுறைக்கு வந்தவுடன் கடமைகளும் அதிக மாகி விட்டது. நாட்டின் கடமைகளைக் குறிப்பிடக்கூடிய படத்தை உற்றுநோக்க வும்.




படத்திலிருந்து நாட்டினுடைய சில கடமை கள் கட்டாயமானதென்றும் வேறு சில கட மைகள் தேவையான கடமைகள் என்றும் புரிந்து கொள்ளலாம். நாடு எல்லாக் காலத் திலும் கட்டாயமாக ஆற்ற வேண்டிய கட மைகளே கட்டாயக் கடமைகள். கட்டாயக் கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து நாடு களுக்கு விலகி நிற்க முடியாது. இக்கடமை கள் நிறைவேற்றப்படாமல் இருக்கும் போது மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பாது காப்பு கிடைக்காது.



**கட்டாயக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனங்கள் யாவை? கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்.**

*நாட்டின் வேறுபட்ட கடமைகளுடன் தொடர்புடைய செய்திகளையும் படங்களையும் சேகரித்து குறும்படம், தயாரிக்கவும்.*



கட்டாயக் கடமையிலிருந்து மிகத்தேவை யான கடமைகளுக்குள்ள வித்தியாசமென்ன? நாட்டினுடைய பொருளாதார நிலைக் கேற்றவாறு ஆற்ற வேண்டிய கடமைகளே மிகத் தேவையான கடமைகள், கல்வி உடல்நலப் பாதுகாப்பு போன்ற இத்தகைய கடமைகளை நிறைவேற்றுதல் மக்களுக்கு மிகச்சிறந்த வாழ்க்கைக்கு வழிவகுக்கும். இத்தகைய வளர்ச்சி சம்பந்தமான செயல் பாடுகளை நடைமுறைப்படுத்துகின்ற நாட்டை நலமான நாடு என்று அழைக்கிறோம். நாட்டினுடைய மிகத் தேவையான கடமைகளின் எல்லையக் குறிப்பிட முடியாது. நவீன நுட்பங்களின் வளர்ச்சியும் மனிதனின் தேவைகளில் ஏற்படுகின்ற உயர்வும் இத்துறையை விரிவாக்குகிறது.



**நாடு நிறைவேற்றுகின்ற கட்டாயமானதும் மிகத்தேவையானதுமான கடமைகளின் முக்கியத்துவத்தை விமர்சன நோக்கத்துடன் கலந்துரையாடுக.**

## நாடு உருவாக்கக் கோட்பாடுகள்

நாடு எப்படி நடைமுறையில் வந்தது என்று விளக்குகின்ற ஒரு சில கோட்பாடுகளைக் கவனிக்கவும்.

### நாடு உருவாக்கக் கோட்பாடுகள்

**தெய்வீகக் கோட்பாடு**
நாடு தெய்வத்தால் உருவாக்கப்பட்டது அரசன் கடவுளின் பிரதிநிதியாவார். அரசன் கடவுளிடம் மட்டுமே கடமைப் பட்டுள்ளான்.

**பரிணாமக் கோட்பாடு**
நாடு வரலாற்றின் அடிப் படையாகும். சமூக வளர்ச்சி செயல்களின் பலனாக உருவானது

**சமூக ஒப்பந்தக் கோட்பாடு**
மக்கள் செய்து கொண்ட ஒரு ஒப் பந்தத்தின் அடிப்படையில் நாடு உரு வானது.
மனிதர்களின் தேவையை நிறை வேற்றுவதற்காக அவர்கள் நாட்டிற்கு வடிவம் கொடுத்தனர்

**சக்திகோட்பாடு**
வலிமை வாய்ந்தவர்கள் பலவீனமானவர்களின் மீது ஆதிக்கம் செலுத்தியதன் மூலம் நாடு உருவானது.

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் கோட்பாடுகளில் பரிணாமக் கோட்பாடு மிகவும் உகந்ததாகும். பல்வேறு சூழல்களின் தாக்கத்தின் விளைவாக நாடு உருவாகி பல்வேறு வளர்ச்சிப் பரிணாமங்கள் வாயிலாக இன்றைய வடிவத்தை அடைந்தது என இக்கோட்பாடு தெளிவுபடுத்துகிறது. கோத்திரம், கோத்திரங்களின் ஆட்சி போன்றவற்றில் தொடங்கி நகர அரசு. பேரரசு நாடுகள், நிலமானிய நாடு என வேறுபாடான வடிவங்களில் நாடு காணப்பட்டது. தற்போது நாடுகள் பொதுவாக தேச நாடுகள் என அறியப்பட்டது. பொதுவான தேசியக் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உருவானதால் இவை தேச நாடுகள் என அழைக்கப்படுகிறது.

## நாடும் குடிமகனும்

நாடு உருவாக்கத்திற்கு மக்கள் இன்றியமையாதவர்கள் என்பதை நாம் முன்பு கற்றுள்ளோம் அல்லவா. ஒரு இந்தியக் குடிமகனுக்கு நாட்டைவிட்டு வெளியே பயணம் செய்வதற்குத் தேவையான பாஸ்போர்ட்டின் படம் கொடுக்கப்பட்டுள்ளது. பாஸ்போர்ட், பிறப்புச் சான்றிதழ் போன்றவற்றில் தேசம் குறிப்பிடப்படுகிறது. ஒரு மனிதனின் குடியுரிமை எது என்பதை இது தெளிவாக்குகிறது..





NT-645-7-SOC.SCI.-I-10-T-VOL.2

## குடியுரிமை

> ஒரு நாட்டினுடைய சட்டம் இயற்றும் செயல்களிலும் நீதியை நடை முறைப்படுத்துவதிலும் பங்குபெற அதிகாரமுடைய எந்த ஒரு நபரையும் அந்த நாட்டின் குடிமகன் என்று அழைக்கலாம்
>
> அரிஸ்டாட்டில்

கிரேக்க தத்துவசிந்தனையாளரான அரிஸ்டாட்டிலினுடைய குடிமகனைப் பற்றிய கண்ணோட்டமே மேலே தரப்பட்டுள்ளது. நாட்டிற்கும் குடிமகனுக்கும் இடையே உள்ள தொடர்பு இதன் மூலம் தெளிவாகிறது.




ஒரு நாட்டினுடைய முழுமையானதும் சமத்துவமானதுமான உறுப்பினர் தன்மை. குடியுரிமை எனப்படும்.குடியுரிமை ஒரு மனிதனுக்கு அரசியல் உரிமைகளையும் குடிமகன் உரிமைகளையும் அனுபவிப்பதற்கு தகுதிவழங்குகிறது. நாட்டிற்கும் குடிமகனுக்கும் இடையே பரஸ்பரத் தொடர்பை விளக்குகின்ற படத்தை ஆய்வு செய்யலாம்

நாடு குடிமகனுக்கு உரிய உரிமைகளை உறுதிப் படுத்தும் போதே, குடிமகன் நாட்டிற்கு செய்ய வேண்டிய கடமைகளையும் விளக்குகின்றது. மக்களாட்சி முறை நடைமுறைக்கு வந்த பின்பு தான் குடியுரிமை என்ற கருத்திற்கு முக்கியத்துவம் கிடைத்தது, மக்களாட்சி முறையிலான ஆட்சி அமைப்பதில் ஒரு குடிமகனின் பங்குபெறல் அரசியல் உரிமைகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. குடிமகனுக்கு மட்டும்தான் அரசியல் உரிமைகள் அளிக்கப்படும்.

ஒரு நாட்டில் வாழ்கின்ற எல்லா மக்களும், அந்நாட்டினுடைய குமக்களாவார்களா? குடிமக்களைத் தவிர வெளிநாட்டினரும் ஒரு நாட்டில் வசிப்பார்கள். ஏராளம் இந்தியக் குடிமக்கள் வெளி நாடுகளில் வேலை செய்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா. ஒரு குடிமகனுக்கு கிடைக்கப்பெறும் அனைத்து உரிமைகளும் வெளிநாட்டினருக்கு கிடைக்காது. இந்தியக் குடிமகனுக்கு மட்டும் கிடைக்கக் கூடிய சில உரிமைகள் தரப்பட்டுள்ளது. கூடுதல் உரிமைகளை எழுதி அட்டவணையை விரிவாக்கவும்.



**அரசியல் உரிமைகள்**

வாக்களிப்பதற்கான உரிமை, தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமை அரசாங்கத்தை விமர்சனம் செய்வதற்கான உரிமை, முறைப்படியான பதவிகளை வகிப்பதற்கான உரிமைகள் போன்றவைகள் அரசியல் உரிமைகளாகும்.



**லாரி பேக்கர்**

1917ஆம் ஆண்டு பிரிட்டனில் உள்ள பர்மிங் ஹாமில் பிறந்தார். 1945 ஆம் ஆண்டு லெப்ரசி மிஷனின் சார்பில் இந்தியாவிற்கு வந்தார். காந்திஜியின் கருத்துக்கள் அவரை மிகவும் கவர்ந்தது. கேரளத்தில் குறைந்த செலவில் வீடுகள் அமைக்கும் முறையை வெளியிட்டார். வாஸ்துக் கல்வித்துறையில் காந்திஜி என்றறியப்படுகிறார். 1989- ஆம் ஆண்டு இந்தியக் குடியுரிமையைப் பெற்றுக்கொண்ட லாரி பேக்கர் 2007 ஆண்டு மரணமடைந்தார். கிடைக்கப்பெற்ற குடியுரிமையின் மூலம் பேகர் இந்தியக் குடிமகன் ஆனார்.

- தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமை
- 
- 

ஒரு நாட்டிலுள்ள அனைவருடையவும் குடியுரிமை ஒரே முறையில் கிடைக்கின்றவை தானா? பொதுவாக குடியுரிமை இரண்டு வகையுண்டு. படத்தை ஆய்வு செய்யவும்.





பிறக்கும் போது கிடைக்கும் குடியுரிமையே இயற்கை குடியுரிமை. ஒரு நாட்டில் நடைமுறையிலுள்ள சட்ட ஒழுங்கு முறைகளை மேற்கொண்டு ஒருவருக்கு கிடைக்கின்ற குடியுரிமை கிடைக்கப்பெற்ற குடியுரிமை. குடியுரிமைச் சட்டங்கள் முன்மொழிகின்ற தகுதிகள் இருந்தால் மட்டுமே குடியுரிமையைப் பெறமுடியும்.

## அரசியல் அறிவியல்

நாட்டுடன் தொடர்புடைய பல்வேறு கருத்துகளைத்தான் நாம் இதுவரை கலந்துரையாடினோம். நாடு, அரசாங்கம் என்பவைகளைக் குறித்துள்ள கல்வி புராதன காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது மனிதனின் அன்றாட வாழ்கைகையுடன் தொடர்பு கொண்டுள்ளமையால் அரசியல் கருத்துகளை அதிகமான ஆராய்சிக்கும், கற்றலிற்கும் உட்படுத்த வேண்டும். நாட்டுடன் தொடர்பு கொண்ட ஒரு கல்வித்துறை என்ற நிலையில் தான் அரசியல் அறிவியல் நடைமுறைக்கு வந்தது. புராதன கிரேக்க தத்துவ சிந்தனையாளரான அரிஸ்டாட்டில் அரசியல் அறிவியலுக்கு வழங்கியிருக்கின்ற வரையறைகளை ஆராய்க.

> நாட்டைக் குறித்தும், அரசாங்கத்தைக் குறித்துமுள்ள கல்வியே அரசியல் அறிவியல்
>
> அரிஸ்டாட்டில்

அரிஸ்டாட்டிலினுடைய வரையறையின் படி நாடு அரசாங்கம் முதலிய நிறுவனங்களைப் பற்றியக் கல்வியே அரசியல் அறிவியல். அரசியல் கருத்துகளை விவாதிக்கின்ற தனது நூலுக்கு அரிஸ்டாட்டில் பொளிடிக்ஸ் என்ற பெயரை வழங்கினார். இது நாட்டினைக் குறித்து முழுமையான ஆய்வு நடத்திய முதல் நூலாகும். அதனால் தான் அரிஸ்ட்டாட்டில் அரசியல் அறிவியலின் தந்தை என்றறியப்படுகிறார். சாக்கரட்டீஸ், பிளேட்டோ போன்றவர்களின் நன்கொடைகளும் அரசியல் அறிவியலினுடைய உருவாக்கத்திற்கு உதவியது. நகர நாடு என்று அர்த்




தம் வரக்கூடிய கிரேக்கச் சொல்லான போளிஸ் என்ற வார்த்தையிலிருந்து தான் பொளிட்டிக்ஸ் என்ற வார்த்தை உருவானது.

அரசியல் அறிவியல் ஆரம்பத்தில் நாடு, அரசாங்கம் முதலிய நிறுவனங்களைப் பற்றியும் அவைகளின் செயல்பாடுகளைப் பற்றியுமே ஆய்வு நடத்தியது. மக்களாட்சி நடைமுறைக்கு வந்ததோடு அரசியல் பங்கீடு என்ற கருத்திற்கும் முக்கியத்துவம் கிடைத்தது. இதன் விளைவாக அரசியல் நிறுவனங்களைப் பற்றியுள்ள கல்வியுடன் அரசியல் செயல்பாடுகளும் அரசியல் அறிவியலினுடைய பகுதியாக மாறியது. அரசியல் அறிவியலினுடைய ஆராய்ச்சி தொடர்ந்து விரிவாக்கப்படுகின்றது. அரசியல் அறிவியலின் முக்கிய பகுதிகளைப் படத்தில் காணவும்.

அரசியல் அறிவியலின் முக்கியப் பகுதிகளை அறிந்து கொண்டீர்கள் அல்லவா. இந்த நான்கு பகுதிகளை தவிர அரசியல் தந்திர செயல்பாடுகளுடன் தொடர்புடைய எல்லாக் கருத்துகளும் அரசியல் அறிவியலினுடைய பகுதியாகக் கருதப்படுகிறது.


## எதற்காக அரசியல் அறிவியல் கல்வி?

அரசியல் அறிவியல் கல்வியும், அரசியலும் தனித்தனியாக செயல்படக்கூடியதா? அரசியலில் நாம் முழுமையாகப் பங்கு பெற வேண்டியுள்ளதா? இதனைப் பற்றி பிளேட்டோவின் கருத்தைக் கவனிக்கவும்.

> *நீங்கள் அரசியலில் முழுமையாக பங்கு பெறாமல் இருக்கும் போது உங்களைவிட மோசமானவர்கள் உங்களை ஆட்சி செய்வர்*
>
> பிளாட்டோ

*நாட்டின் சிந்தனையாளர்களின் படங்களையும் நன் கொடைகளையும் உட் படுத்தி பவர்பாயிண்ட் பிரசண்டேஷன் தயாரித்து வெளியிடவும்.*

ஒரு மக்களாட்சி சமூகத்தில் பிளேட்டோவினுடைய இக் கருத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. நாம் வாசிக்கும் சமூகத்தினுடைய சிறப்பும் நன்மையும் நாம் எவ்வாறு அச்சமூகத்தினுடைய அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடுகிறோம் என்பதை அடிப்படையாக் கொண்டு அமைகிறது. பொதுவான எந்தக் காரியமாக இருந்தாலும் அறிவுப்பூர்வமான முறையில் ஆய்வு செய்யவும். ஈடுபடவும் வேண்டும். இதற்கு அரசியல் அறிவியல் உங்களுக்குத் உதவிபுரியும்.




## மதிப்பிடலாம்

- நாடு என்றால் என்ன? நாட்டிற்குத் தேவையான காரணிகள் எவை?
- இறையாண்மையுடைய உள்நாட்டு, வெளிநாட்டு துறைகளை விளக்குக
- நாட்டிற்கு கட்டாயமானதும், மிகத்தேவையானதுமான கடமைகள் உண்டு அவை எவை?
- நாட்டு உருவாக்கத்துடன் தொடர்புடைய பல்வேறு கோட்பாடுகள் எவை?
- குடியுரிமை என்றால் என்ன? ஒரு நாட்டின் குடிமகனுக்கும், வெளிநாட்டைச் சேர்ந்தவனுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக்கவும்.
- கிடைக்கப் பெற்ற குடியுரிமையையும், இயற்கை குடியுரிமையையும் விளக்குக.
- அரசியல் அறிவியல் என்றால் என்ன?
- கீழே கொடுக்கப்பட்டுள்ள நபர்களில் அரசியல் அறிவியலின் தந்தை என்றறியப்படுபவர் யார்?

A) அரிஸ்டாட்டில் B) பிளேட்டோ

C) சாக்ரட்டீஸ் D) கௌடில்யன்

## தொடர் செயல்பாடுகள்

- முக்கியமான அரசியல் சிந்தனையாளர்களின்படங்களைச் சேகரித்து சிறு குறிப்புகளுடன் ஆல்பம் தயார்செய்யவும்
- புகழ்பெற்ற சிந்தனையாளர்களின் நூல்களையும் அவர்கள் வெளியிட்ட சிந்தனைகளையும் பகுப்பாய்வு செய்து குறிப்பு தயாராக்கவும்
- இந்திய அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்ற மக்கள் நலத்திட்டங்களை அட்டவணைப்படுத்தி அவற்றின் முக்கியத்துவத்தை விளக்குகிற குறிப்பு தயார் செய்யவும்.



அலகு

10

# குடிமகனுணர்வு





### ஹஜ்ஜப்பா

மங்கலாபுரத்திற்கு அருகிலுள்ள நியூபதப்பா கிராமத்தில் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடம் ஆரம்பித்து ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வி வழங்கப்படுகிறது. சாலையோரத்தில் ஆரஞ்சு வியாபாரம் நடத்தும் எழுத்தறிவு இல்லாத நபரே இவர். தமக்குக் கிடைக்காத கல்வி சமூகத்தில் அனைவருக்கும் கிடைப்பதற்கு வாய்ப்பு வழங்கிய தனித்தன்மை வாய்ந்தவரே அவர்.

### கல்லேன் பொக்குடன்

கண்ணூர் மாவட்டத்தின் பழயங்காடி கிராமத்தில் பிறந்த கல்லேன் பொக்குடன் பிரபல சுற்றுச்சூழல் பாதுகாவலர் ஆக இருந்தார். இரண்டாம் வகுப்பு வரை மட்டுமே கல்வி கற்ற பொக்குடன் கண்டல் காடுகளின் பாதுகாப்பிற்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆயிரக்கணக்கான கண்டல் செடிகளை நட்டு வளர்த்திய கல்லேன் பொக்குடன் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார்.

ஹஜ்ஜப்பாவும், கல்லேன் பொக்குடனும் சமூக நன்மைக்காக அவர்களே தேர்ந்தெடுத்துத் துறைகளில் மிகப்பெரிய நன்கொடைகளை வழங்கியவர்களாவர்.

இவர்களைப் பற்றி மேலும் தகவல்களைச் சேகரித்து நண்பர்களுடன் கலந்துரையாட முயற்சிக்கவும்.

சாதாரண மக்களுக்குக் கூட மிகவும் வலுவான செயல்பாடுகளைச் செய்து முடிக்க இயலும் என்ற தகவலைத் தெரிவிப்பதே இவர்களது வாழ்க்கை. வித்தியாசமான சிந்தனையும் தன்னலமற்ற செயல்பாடும் சமூகம் மற்றும் சமூகத்தில் வாழும் பிற மக்களின் பிரச்சினைகளைப் பற்றிய உணர்வும் சேவை மனப்பான்மையுமே இவர்களை முன்னோக்கிச் செல்ல வைக்கிறது.



**சமூகத்தின் பொது நன்மைக்காகச் செயல்படுகின்ற நபர்களைப் பற்றித் தகவல் சேகரித்து அவர்களது செயல்பாடுகளில் காணப்படும் சிறப்பம்சங்களை அட்டவணைப்படுத்தவும்.**

உன்னதமான சமூக உருவாக்கத்திற்கு எல்லாரிடமும் இதுபோன்ற மனநிலைகளும் மதிப்பு உணர்வுகளும் உருவாக வேண்டும் என்பது அவசியமாகும். நவீன சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் குடிமகன் என அறியப்படுகிறார். ஒவ்வொரு குடிமகனும் சமூகத்திற்காக உள்ளவர் எனவும் சமூகத்தின் நலனே குடிமகனின் நலன் எனப் புரிந்து கொள்வதுமே குடிமகன் என்ற உணர்வு ஆகும். இந்த உணர்வு உள்ளவர்கள் சமூக நன்மைக்காகச் செயல்படத் தயாராக இருப்பர்.

## குடிமகனுணர்வின் முக்கியத்துவம்

சமூகம் மற்றும் நாட்டின் முன்னேற்றத்தில் குடிமகனுணர்வு அதிகத் தாக்கம் செலுத்துகிறது. குடிமகனுணர்வு இல்லையென்றால் மனிதன் சுயநலமுடையவனாக மாறி அனைத்து செயல்பாடுகளுக்கும் தனக்கு மட்டும் நன்மை விளைவிக்கின்றதாகச் செயல்படுவான். இது சமூக வாழ்க்கையை எதிர்மறையாக பாதிக்கும் இது போன்ற ஒரு சமூகத்தில் அமைதியும் பாதுகாப்பும் இருக்காது .

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புச் செய்திகளைக் கவனிக்கவும். நமது பொதுச்சமூகம் எதிர்கொள்கின்ற சில பிரச்சினைகள் தான் இங்குகூறப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசங்கத்தால் மட்டுமாக இயலுமா? மக்களின் கூட்டான முயற்சிகளும் செயல்பாடுகளும் இதற்குத் தேவையாகும். பொதுச்சமூகம் எதிர்கொள்கின்ற சில பிரச்சினைகளும் அவற்றிற்குத் தீர்வுகாணும் சில வழிமுறைகளும் கொடுக்கப்பட்டுள்ளது. அதிக வழிமுறைகளை எழுதி அட்டவணையை விரிவுபடுத்தவும்.



| பிரச்சினைகள் | நம்மால் என்ன செய்ய இயலும்? |
|---|---|
| • நீர்த்தட்டுப்பாடு | • முன்னெச்சரிக்கையுடனான பயன்பாடு<br>•<br>• |
| • சுற்றுப்புறம் மாசடைதல் | • அந்தந்த இடங்களிலேயே மாசுக்களை அழித்தல்<br>•<br>• |
| • வெள்ளப் பெருக்கு | • பாதுகாப்பான இடங்களில், மாறி வசிக்க வேண்டும்<br>•<br>• |
| • ஊழல் | • ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வு<br>•<br>• |

பொதுச்சமூகம் எதிர்கொள்கின்ற சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் குடிம கனுனர்வு துணைபுரிகிறது என இதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

நலம் மிக்க ஒரு நாட்டை உருவாக்குவதில் குடிமகன் என்ற உணர்வு முக்கிய பங்கு வகிக்கிறது. இக்கட்டான சூழல்களில் சமூகத்தின் புனரமைப்பிற்கும் பாதுகாப்பற்ற நிலையிலிருந்து மீளவும் இது சமூகத்திற்கு தணைபுரிகிறது. 2018 ஆகஸ்டு மாதம் கேரள மக்களை துயரத்தில் ஆழ்த்திய பெருவெள்ளப் பெருக்கைத் தாக்குப்பிடிக்க இயன்றதற்குக் காரணம் வேறுபட்ட மக்களினம் ஒன்றுபட்டு நடத்திய பேரிடர் மீட்புப் பணிகளால் ஆகும். குடிமகனுணர்வின் சிறந்த எடுத்துக்காட்டாக இதைக் குறிப்பிடலாம்.

*சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வு என்ற துறைகளை உட்படுத்தி குறும்படம் தயாரித்து வெளியிடவும்.*



ஒவ்வொருவருடையவும் செயல்பாடுகள் சமூக நன்மையை இலக்காகக் கொள்ளும் போது சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலும் என்ற அறிவு குடிமகனுணர்வின் அடிப்படையாகும்.

## குடிமகனுணர்வை நிர்ணயிக்கும் காரணிகள்

வாழ்க்கைச் சூழல்களும் அனுபவங்களும் குடிமகனுணர்வு உருவாக்குவதில் தாக் கம் செலுத்துகிறது. ஒவ்வொரு தனிமனிதனுக்கும் வாழ்க்கைச் சூழல்கள் வித்தியாச மான அனுபவங்கள் அளிப்பதில் குடிமகனுணர்விலும் வேறுபாடுகள் காணப்படும். குடிமகனுணர்வு உருவாக்கும் சில முக்கிய காரணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- குடும்பம்
- கல்வி
- சமூகநிலை
- அமைப்புகள்
- அரசியல் நிலை

NT-645-8-SOC.SCI.-I-10-T-VOL.2

மேலே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு காரணியும் மனிதனின் தனித்தன்மை உருவாக்குவதில் தாக்கம் செலுத்துகிறது. இவை மனிதனின் சிந்தனையையும் செயல்பாட்டையும் தோற்றுவிக்கிறது. சாதகமான சூழ்நிலைகள் மட்டுமல்லாது எதிர்மறையானதும் சவால் விடுவதுமான சூழல்களும் ஒரு தனிமனிதனுக்கு வலுவான குடிமகனுணர்வு ஏற்படுவதற்கு காரணமாகும்.



**வேறுபாடான வாழ்கைச் சூழல்கள் குடிமகனுணர்வு உருவாவதற்கு எவ்வாறு காரணமாகிறது என்பதைக் கலந்துரையாடவும். சாதகமானதும், எதிர்மறையானதுமான சூழல்களின் தாக்கத்தால் குடிமகனுணர்வு தோன்றிய தனிநபர்களைக் கண்டுபிடித்து பட்டியல்படுத்தவும்.**

## குடிமகனுணர்வை வளர்ப்பது எங்ஙனம்?

குடிமகனுணர்வை வளர்ப்பதும் நிலைநிறுத்துவதும் இன்றியமையாததாகும். இதற்கு அறிவுசார்ந்த முயற்சிகள் தேவையாகும். எல்லா சமூகமும் குடிமகனுணர்வை வளர்ப்பதற்கு உகந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதுண்டு.

சமூக நன்மையை முற்றிலுமாக உட்கொண்டு நடத்துகின்ற தலையிடல் மூலமாகவே அனைவராலும் குடிமகனுணர்வை வளர்த்தி எடுக்க இயலும். சில வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## குடும்பம்

மூத்தோர்களை மதிப்பதற்கும் சமூக சேவையில் ஈடுபடவும் ஆரம்பநிறுவனமான குடும்பத்திலிந்து நாம் கற்கிறோம். உறுப்பினர்களிடம் கடமை உணர்வை வளர்ப்பதிலும் நிலை நிறுத்துவதிலும் குடும்பம் பெரும் பங்கு வகிக்கிறது. குடும்பத்திலிருந்து கிடைக்கும் ஊக்கமும் உற்சாகமும் பலநேரங்களில் சிறப்பான குடிமகனுணர்வை வளர்த்துகிறது. ஒவ்வொரு நபரும் குடும்பத்திற்காகவும் குடும்ப சமூகத்திற்காகவும் என்ற உணர்வைக் குடும்பச் சூழ்நிலையில் வளர்த்தி எடுக்க இயல வேண்டும்.



**குடிமகனுணர்வை வளர்ப்பதில் குடும்பத்தின் பங்கைப் பற்றிக் கலந்துரையாடவும்.**

## கல்வி

*உங்களது பள்ளியில் நடைபெறும் பல்வேறு செயல்பாடுகளை உட்படுத்தி ப்ளோக் தயாரிக்கவும்*



பல்வேறு பாடங்களின் வாயிலாகக் கிடைக்கின்ற அறிவுகளைச் சமூகத்திற்கு நன்மை பயக்கும் விதமாக பயன்னபடுத்தவதற்கு தனிமனிதனைத் தகுதி பெறச் செய்வதே கல்வியின் நோக்கமாகும். மதிப்புணர்வு, சகிப்புத் தன்மை, தலைமை தாங்கும் குணம், சுற்றுச்சூழல் அறிவு போன்றவற்றை வளர்ப்பதற்கு கல்விதுணை புரிகிறது. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் சமூக்திற்கு பயன்பெறும் வகையில் பயன்படுத்த கல்வியானால் இயலவேண்டும். சமாதானக்கல்வி (Peace Education)

என்ற கருத்திற்கு எல்லா நிலைகளிலும் முக்கியத்துவம் வழங்க வேண்டும். இது போன்ற ஒரு கற்றல் அணுகுமுறையின் வாயிலாகக் குடிமகனுணர்வை மக்க ளுக்கு ஏற்படுத்த இயலும். அரசாங்கங்கள் கற்றல் கொள்கைகளுக்கு உருவம் வழங்குவது இந்த இலக்கோடு தான்.

**குடிமகனுணர்வின் உருவாக்கத்திற்கு உதவுகின்ற எந்தெந்த செயல்பாடு களை பள்ளிக்கூடத்தில் செய்ய இயலும். வருடாந்திரக் காலண்டர் தயா ரித்து நடைமுறைப்படுத்தவும்**



## அமைப்புகள்


அரசியல் சமூக பொருளாதார, கலாச்சார அமைப்புகள் நமதுநாட்டில் ஏராளமா கக் காணப்படுகிறது என்று உங்களுக்குத் தெரியுமல்லவா. ஒரு தனிமனிதனை சேவை மனப்பான்மையுடன் செயல்பட வைப்பது பல நேரங்களிலும் இந்த அமைப்பின் வாயிலாக ஆகும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மனித உரிமைகள் பாதுகாப்பு போன்ற துறைகளில் பல் வேறு தன்னார்வு அமைப்புகள் செயல்படுவதுண்டு. சுற்றுச்சூழல் பற்றி விழிப்பு ணர்வையும் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வையும் தனிமனிதனுக்கு உரு வாக்கி கொடுக்க இது போன்ற அமைப்புகளுக்கு இயலுகிறது.

## ஊடகங்கள்

குடிமகனுணர்வு உருவாக்கத்தில் ஊடகங்கள் பெரும்பங்கு வகிக்கிறது. அச்சக ஊடகங்களும், எலக்ட்டராணிக் ஊடகங்களும் சமூகத்தில் பெரும் தாக்கம் செலுத் துகிறது. செய்திகளையும் தகவல்களையும் மக்களுக்கு தெரியப்படுத்துவது ஊட கங்களாகும். சரியானதும் உண்மையானதுமான தகவல்கள் ஆக்கபூர்வமான கருத்து உருவாக்கத்திற்கு வழிகாட்டும். ஊடகங்களிலிருந்து கிடைக்கப் பெறும் அறிவு களை விமர்சனத்துக்கு உட்படுத்தி மதிப்பிடலாம் .

**குடிமகனுணர்வைத் தூண்டக்கூடிய செய்திகளும் படங்களும் உட்படுத்தி படத்தொகுப்பு தயாரிக்கவும்.**



## மக்களாட்சி முறை

குடிமகனுணர்வுக்கு மக்களாட்சி முறை இன்றியமையாத ஒரு காரணியாகும். குடி மகனுணர்வை வளர்ப்பதற்குத் துணைபுரியும் அனைத்துக் காரணிகளினுடைய வும் அடிப்படை மக்களாட்சியாகும். மக்களாட்சி பிறரைப் பற்றி சிந்திப்பதற்கும் அவர்களது சுதந்திரம், சமத்துவம், உரிமைகள் போன்றவற்றைப் பாதுகாப்பதற்

காகச் செயல்படவும் தனிமனிதனிதனைத் தூண்டுகிறது. மக்களாட்சி சட்டமுறையில் நம்பிக்கைக் கொண்டுளளது அனைவரும் சட்டத்துக்கு உட்பட்டவர்கள் என்பதே இதன் அடிப்படையாகும்.

## உன்னத மாதிரிகளை அறிமுகப்படுத்துதல்



ஏ. பி. ஜெ. அப்துல்கலாம் | அன்னை தெரசா | மயிலம்மா | தசரத் மாஞ்சி

படங்களைக் கவனிக்கவும். இவர்கள் அனைவரும் சமூகத்திற்கு பெரிய நன்கொடைகளை வழங்கிய உயர்ந்த குடிமகனுணர்வு கொண்டவர்களாவர். இவர்களது செயல்பாட்டுத் துறைகளையும் நன்கொடைகளையும் கண்டுபிடிக்கவும்

பல்வேறு துறைகளில் செயல்படும் போது மனிதநேயமும் மானுடம் போற்றலும் கடமை உணர்வும் இவர்கள் வெளிப்படுத்தி இருந்தனர். அவரவர் செயல்மண்டலங்களில் நடுநிலையோடும் தியாக மனப்பான்மையோடும் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனையும் இதுபோல் சிந்திக்கவும் செயல்படவும் வைக்கும் போது தான் சமூக முன்னேற்றம் சாத்தியமாகிறது. உயிரியல் வேளாண்மை, போக்குவரத்து விழிப்புணர்வு, போதை எதிர்புச் செயல்பாடுகள், உயிர்காக்கும் செயல்பாடுகள் போன்றவற்றில் நீங்களும் பங்கு கொள்வதுண்டா? உங்களது குடிமகனுணர்வுக்கு இது சான்றாகும்.



**குடிமகனுணர்வை உருவாக்குவதற்கு பள்ளிக்கூடங்களில் நடைமுறைப்படுத்தும் செயல்பாடுகள் எவையெனப் பட்டியல்படுத்தவும்**

## குடிமகனுணர்வும் தார்மீகமும்

மனித வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் உருவாக வேண்டிய தார்மீகத்தைப் பற்றிய காந்திஜியின் கண்ணோட்டம் தான் மேலே கொடுக்கப்பட்டுள்ளது. எல்லா செயல்பாடுகளுக்கும் அடிப்படை தார்மீகம் ஆகும். தார்மீகம் என்றால் என்ன? நன்மைகளையும் தீமைகளையும் சரியாகப் புரிந்து கொண்டு நன்மையை ஏற்றுக் கொண்டு கடமையை பொறுப்போடு செய்வதுதான் தார்மீகமாகும். நாட்டிற்கும்

சமூகத்திற்கும் தமது கடமையை நிறைவேற்றுவது ஒவ்வொரு தனிமனிதனுடையவும் தர்மம் ஆகும்.

### காந்தியடிகளின் பார்வையில் தார்மீகம்



- கொள்கையற்ற அரசியல்
- உழைப்பு இல்லாத செல்வம்
- மனிதத் தன்மையற்ற விஞ்ஞானம்
- தார்மீகமற்ற வாணிபம்
- குணநலமற்ற கல்வி
- தியாகமற்ற வழிபாடு
- மனசாட்சியற்ற ஆனந்தம்

இவை மிகவும் அபாயகரமானதாகும்

நமது சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் மதிப்பிட்டுப் பாருங்கள். அதில் ஏற்றுக்கொள்ளக் கூடியதும் ஏற்றுக்கொள்ளக் கூடாததுமான செயல்பாடுகளைக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்.



தார்மீகம் குடிமகனுணர்வுக்குத் துணைபுரிகிறது. ஆனால் தார்மீகமற்ற தன்மை குடிமகனுணர்வை அழிக்கிறது. வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் தார்மீகத்தை உருவாக்குவதே குடிமகனுணர்வை வளர்ப்பதற்கான மிகச்சிறந்த வழியாகும் குடிமகனுணர்வு படைப்புத் திறன்மிக்க ஒரு மனநிலையாகும்.

C51DUY

குடிமகனுணர்வு உள்ளதும் இல்லாததுமான சில செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் குடிமகனுணர்வுக்கு நேராக (☑) அடையாளமும் குடிமகனுணர்வு இல்லாமையின் நேராக (☒) அடையாளமும் குறிப்பிடவும்.

| கூற்று | குடிமகன் உணர்வு | குடிமகன் உணர்வு இல்லாமை |
|---|---|---|
| • எவ்வளவு அவசரமாக இருந்தாலும் வாகனம் ஓட்டும்போது போக்குவரத்து விதிகளைக் கடைபிடித்தல். | | |
| • வீட்டின் கழிவுகளைப் பொதுவழியில் போடுவதில் தவறில்லை | | |
| • வரலாற்று நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல் என்பதுஎனதும் கடமையாகும். | | |
| • இயற்கையைப் பாதுகாப்பது எனது கடமையாகும் | | |
| • அநீதிக்கு எதிராக புகார் செய்யக் கூடாது.. | | |
| • தேவைப்படும் நேரங்களில் ஊழல் செய்யலாம். | | |
| • முதியோர்களை மதிக்கவும் பாதுகாக்கவும் வேண்டும் | | |

## குடிமகனுணர்வின் சவால்கள்

பொது விருப்பங்களை ஒதுக்கி வைத்து சுயவிருப்பங்களுக்காக எதையும் செய்யத் தயாராவது தான் குடிமகனுணர்வு எதிர்கொள்ளும் முக்கியமான சவாலாகும்.



**நமக்கும் செயல்பாடுகளை ஏற்றுக்கொள்ளலாம்**

குடிமகனுணர்வு கொண்ட மாணவன் சமூகத்திற்கு முன் மாதிரியான பல்வேறு செயல்பாடுகளை ஏற்றுக்கொள்ளலாம். அவற்றுள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதிகச் செயல்பாடுகளைக் கண்டுபிடிக்கலாம்

- உடல் உறுப்புத்தானம் செய்ய சம்மதம் தெரிவித்தல்
- இரத்தத் தானம் செய்யத் தயாராதல்
- S.P.C, N.C.C, Scout&guides, பிற மன்றங்கள் போன்றவற்றின் செயல்பாடுகளில் பங்கு பெறுதல்
- பொது இடங்களைச் சுத்தமாகப் பாதுகாத்தல்
- விபத்து ஏற்பட்டவர்களுக்கு முதலுதவி வழங்குதல்
- மாற்றுத் திறனாளிகளுக்கும் முதியோர்களுக்கும் உதவிபுரிதல்.
- 
- 

இச்சவால்களை எவ்வாறு எதிர்கொள்ளலாம்?

- ஒவ்வொருவரும் தங்களது செயல்பாடுகளை விமர்சனக் கண்ணோட்டத்தோடு மதிப்பிடவும்.
- பொது விருப்பங்களை அழிக்காமல் சுயவிருப்பங்களை நிறைவேற்ற முயற்சிக்கவும்.
- பிறரிடம் எதிர்பார்க்கும் மாற்றங்களை நாமாகவே தொடங்கவும்.
- மக்களாட்சியிலும் சகிப்புத்தன்மையிலும் கட்டுப்பட்டுச் செயல்படவும்.
- உரிமைகளுக்கும் பொறுப்புகளுக்கும் சமவாய்ப்பு வழங்க வேண்டும்.

இதுபோன்ற அதிக செயல்பாடுகளை ஏற்றுக்கொள்வது குடிமகனுணர்வின் சவால்களை எதிர்கொள்வதற்கு துணைபுரியும்


## சமூக அறிவியல் கற்றலும் குடிமகனுணர்வும்

சமூக அறிவியல் கற்றலுக்கு குடிமகனுணர்வு உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்க இயலும். மனிதனும் சமூகவுமாகச் சேர்ந்து நிற்கின்ற கற்றல் துறை என்ற நிலையில் சமூக அறிவியல் கற்றல் ஒவ்வொரு தனிமனிதனிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துகிறது. குடிமகனுணர்வு உருவாக்கத்திற்கு சமூக அறிவியல் கற்றலை எவ்வாறு பயன்படுத்தலாம் என ஆய்வு செய்யலாம்

- அரசியல்– சமூக –பொருளாதார– சுற்றுச்சூழல் பிரச்சினைகளின் பல்வேறு பின்னணிகளைப் புரிந்து கொள்ள உதவுகிறது.
- பல்வேறு பிரச்சினைகளுக்குத் தகுந்தவாறு தீர்வு வழங்குவதற்கு தனிமனிதர்களைத் தயார்படுத்தவும்.
- பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தனிமனிதனுக்கு எவையெல்லாம் செய்ய இயலும் எனப்புரிந்து கொள்ள உதவுகிறது.

- குடிமகனுணர்வின் சிறந்த மாதிரிகளையும் செயல்பாடுகளையும் அறிமுகம் செய்து தனிமனிதனைக் குடிமகன் என்ற உணர்வு உள்ளவராகவும் கடமைகளைச் சரிவர செய்பவர்களாகவும் மாற்றுகிறது.

ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கும் பரவலுக்கும் நிலையான நிலைபேற்றிற்கும் குடிமகனுணர்வு மிகவும் தேவையானது என்று நீங்கள் புரிந்து கொண்டீர்களல்லவா? ஆனால் எல்லா மனிதர்களுக்கும் குடிமகனுணர்வை உருவாக்குதல் என்பது கடினமான ஒரு கடமையாகும். ஆனால் மகத்தான இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கான எளியவழி நாம் ஒவ்வொருவரும் குடிமகனுணர்வு உள்ளவர்களாக மாற வேண்டும்.




## மதிப்பிடலாம்

- குடிமகனுணர்வு என்றால் என்ன? அதை உருவாக்கும் முக்கியமான காரணிகள் யாவை?
- குடிமகனுணர்வு உடைய தனிமனிதர்களில் காணப்படும் சிறப்பம்சங்களைப் பட்டியல்படுத்தவும்.
- குடிமகனுணர்வை வளர்ப்பதில் தார்மீகத்தின் பங்கை விளக்கவும்.
- பொது சமூகம் எதிர்கொள்கின்ற பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு குடிமகனுணர்வு எவ்வாறு துணைபுரிகிறது? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
- சிறப்பான குடிமகனுணர்வு வெளியிட்ட சிறந்த மாதிரிகளைச் சில எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
- குடிமகனுணர்வை வளர்ப்பதில் குடும்பம், கல்வி ஊடகங்கள் போன்றவற்றின் பங்கை விளக்கவும்.
- குடிமகனுணர்வு எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளைக் குறிப்பிடவும்.
- 'சமூக அறிவியல் கற்றலும் குடிமகனுணர்வும்' என்ற தலைப்பில் ஒரு குறிப்பு தயாரிக்கவும்.

## தொடர் செயல்பாடுகள்

- சிறப்பான குடிமகனுணர்வை வெளியிட்டு உன்னத மாதிரிகளாக மாறிய சான்றோர்களைப் பற்றி தகவல் சேகரித்து படத்தொகுப்பு தயாரிக்கவும்.
- குடிமகனுணர்வை வெளியிடுவதற்கு பல்வேறு துறைகளில் மாணவர்களுக்குச் செய்ய இயலுகின்றவற்றைக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்.
- குடிமகனுணர்வு இல்லாத சமூகம் எதிர்கொள்கின்ற சவால்களைக் கண்டுபிடித்து அறிக்கை தயாரிக்கவும்.

அலகு

11



# சமூகவியல்: என்ன? எதற்கு?

என்றைக்கும் விட காலதாமதமாகவே அப்புண்ணி பள்ளிக்கூடத்திற்கு புறப்பட்டான். காலையில் கஞ்சி கிடைக்கத் தாமதமானது. சில நாட்களாகவே வேளாவேளைக்கு உணவு கிடையாது. மொத்த விதைகளும் செலவிடப்பட்டது. சேமித்து வைத்திருந்த நெல்லை பெரிய மாமா வண்டிக்காரர்களுக்கு விற்றுவிட்டார். நெல் கேட்டுப் போகும் போது மாமி தகாத வார்த்தைகளால் திட்டுவார்கள் என்றாவது ஒரு நாள் தான் பெரியமாமா வீட்டில் இருப்பார். அவர் பூந்தோட்டத்திற்கு சென்றால் எட்டு அல்லது பத்து நாட்கள் கழித்து தான் திரும்பி வருவார். பாக்கு பறித்தலும் தேங்காய் பறித்தலும் முடிந்தால் கிளம்பி விடுவார். வீட்டின் செலவுகளைக் கவனிப்பது எனது பொறுப்பு அல்ல என்ற நினைப்பு. வீட்டின் உணவுகாரியங்களில் குட்ட மாமாவுக்கும் அக்கறையில்லை அவர் வரும் போது உணவு கிடைக்காவிட்டால் மீனாட்சி அண்ணியைக் கெட்ட வார்த்தைகளால் திட்டுவார்.

பக்கத்து வீடுகளிலிருந்து நெல்லும் அரிசியும் கடன் வாங்கச் செல்வது அவராவர். அடிக்கடி அவர்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். “ எல்லாம் என் தலைவிதி”

*நாலுகெட்டு -*

*எம். டி. வாசுதேவன் நாயர்*

பிரபல இலக்கியவாதியான எம். டி. வாசுதேவன் நாயரின் நாலுகெட்டு என்ற நாவலின் ஒரு பகுதியே இது. கேரளாவின் சில சமுதாயங்களில் நிலைபெற்றிருந்த கூட்டுக்குடும்ப முறையின் மாற்றங்கள் ஒரு குழந்தையின் கண்ணோட்டத்தின் வழியாக நாலுகெட்டில் கூறப்பட்டுள்ளது.

NT-645-9-SOC.SCI.-I-10-T-VOL.2

இதைப் பற்றி சமூகவியல் அறிஞரான ரோபின் ஜெப்ரியின் கண்டுபிடித்ததை ஆய்வு செய்யலாம்.

*பொருளாதார நெரருக்கடியை நேரிடுவதற்கு குடும்பங்கள் மிகமிக வலுவிழந்து வந்தது. மிகப்பெரிய கூட்டுக்குடும்பங்கள் அவர்களுடைய மீதம் வந்த நெல்லின் விலையேற்றம் காரணமாக லாபம் அடைந்திருக்கலாம். அதுவே குடும்பங்களில் கலகங்களுக்கும் கருத்து வேறுபாடுகளுக்கும் காரணமாக அமைந்தது. சிறிய குடும்பங்களைப் பொறுத்த வரையில் அடிமை முறை ஒழித்ததும் தொழிலாளர்களின் கூலியை அதிகப்படுத்தியதும், நெல் விலை அதிகமானதும். பொருளாதாரத்தை நலிவடையச் செய்தது. மேலும் குடும்ப உறுப்பினர்கள் கூட்டு குடும்ப விருப்பங்களுக்கு மாறாக சுயவிருப்பங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.*

ரோபின் ஜெப்ரி
(நாயர் மேதாவித்துவத்தின் பதனம்

எம். டி.,யும், ஜெப்ரியும் ஒரே விஷயத்தைப் பற்றித்தான் கூறினாலும் அவர்களது கண்ணோட்டங்கள் வேறுபட்டதாகும். எம். டி யின் அனுபவம் தனிப்பட்ட அனுபவமும் கற்பனையும் நாலு கெட்டின் கருத்திற்கு அடிப்படையாகும். ஆனால் விஞ்ஞான முறைகளின் வாயிலாகத் திரட்டிய தகவல்களைப் பகுப்பாய்வு செய்து ஜெப்ரி தனது கருத்துகளைப் பெற்றுக்கொண்டார். இருவரும் பின்பற்றிய முறைகளின் வேறுபாட்டை ஆய்வு செய்யலாம்.

| நாலுகெட்டு | நாயர் மேதாவித்துவத்தின் பதனம் |
|---|---|
| • நாவல் என்ற இலக்கிய வடிவம் | • ஆய்வு நிலையிலான கற்றல் |
| • கற்பனையாற்றல் | • உண்மையின் அடிப்படையில் |
| • உணர்ச்சி பூர்வமான பிரதிபலிப்பு | • பகுத்தறிவு சார்ந்த உட்கிரகித்தல் |

சமூகவியல் அறிஞரும் இலக்கியவாதியும் ஒரே கருத்தை இரண்டு விதமாக வெளியிடுவதைப் பார்த்தோமல்லவா? இதன் விளைவாக இந்தப் படைப்புகளில் ஏற்படுகின்ற வேறுபாடுகள் எவையெனக் கண்டுபிடிக்கலாம்.

| படைப்பாற்றல் | சமூகவியல் கற்றல் |
|---|---|
| • கற்பனையாற்றல் (Imagination), படைப்பாற்றல் (Creativity) ஆகியவற்றைப் பயன்படுத்தி படைப்பு உருவாக்கல் | • சமூக நிகழ்வுகள் / விஷயங்களைஅறிவியல் முறையில் பகுப்பாய்வு செய்தல் |
| • சமூக நிகழ்வுகளை அழகான பொருத்தமானம் இடங்களில் படைத்து அளித்தல் | • சமூக நிலைகளைக் காரணகாரியத் (Cause - effect) தொடர்பின் அடிப்படையில் உட்கிரகித்தல் |
| • படைப்பாற்றல் நுகர்வை இலட்சியம் இடுகிறது | • சமூகத்தை உண்மை அடிப்படையில் உட்கிரகித்தல் |

படைப்பாற்றலுக்கும் சமூகவியல் கற்றலுக்கும் இடையே உள்ள வேறு பாடுகளைக் கலந்துரையாடல்



## சமூக அறிவியலின் உலகம்

வரலாறு, புவியியல், பொருளாதார அறிவியல், அரசியல், மானிடவியல், உளவியல் முதலிய பல சமூக அறிவியல் பிரிவுகளாகும். கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலைப் பகுப்பாய்வு செய்து தொடர்புள்ள சமூக அறிவியல் பிரிவினுடைய பெயரைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யவும்

C5A9HL

| | |
|---|---|
| பொருளாதார பிரச்சினைகளைக் குறித்து கற்றல் | ............................................ |
| கடந்த காலங்களைக் குறித்தும் பண்பாட்டைக் குறித்தும் தேடல் | ............................................ |
| நாட்டைக்குறித்தும் உரிமைகளைக் குறித்தும் கற்றல் | ............................................ |
| மனித உற்பத்தியைக் குறித்தும் வம்ச பரிணாமத்தைக் குறித்தும் கற்றல் | ............................................ |
| மனித மனதைப் பற்றியும் மனநிலையைப் பற்றியுமுள்ள ஆய்வு | ............................................ |

நீங்கள் புரிந்துகொண்ட ஒவ்வொரு அறிவியல் பிரிவும் சமூகத்தின் ஏதாவது தனிப்பட்ட பிரிவையே சாரும் என்பதைக் கற்றல் அனுபவம் தெளிவுபடுத்துகிறது. ஆனால் இவற்றிலிருந்து வேறுபட்டு மனிதனுக்கும் சமூகச் சுற்றுச்சூழலுக்கும் இடையே உள்ள உறவை ஒருங்கிணைத்து கற்றலுக்கு உட்படுத்தும் பகுதியே சமூகவியல்.

பலவிதமான சமூக அறிவியல் பிரிவுகளுடைய கற்றல் பகுதிகளைக் குழுக் கலந்துரையாடல் வழி வெளியிட முயற்சிக்கவும்.




## ஆரம்பக்காலச் சமூகவியல் சிந்தனையாளர்கள்

நாம் பிரெஞ்சுப் புரட்சியைக் குறித்து முன் அத்தியாயங்களில் கலந்துரையாடினோம் அல்லவா? புரட்சிக்குப் பின் பிரான்சில் தோன்றிய சமூகப் பிரச்சினைகளே சமூகவியல் தோற்றத்திற்கு வழிவகுத்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டு சரித்திரத்தில் புரட்சியுகம் என்ற பெயரில் அறியப்படுகிறது



அகஸ்த் கோம்தே



ஹெர்பர்ட் ஸ்பென்சர்

- ஞானோதயம் அல்லது அறிவியல் புரட்சி
- பிரெஞ்சுப் புரட்சி
- தொழிற் புரட்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இந்த புரட்சிகளுடைய பின்னணியில் மேற்கு ஐரோப்பாவில் தான் சமூகவியல் தோன்றியது பிரெஞ்சுக்காரரான அகஸ்த் கோம்தெயை (August Comte) சமூகவியலின் (Sociology) தந்தை என அழைக்கின்றனர்.

சார்லஸ் டார்வினுடைய பரிணாமக் கொள்கைகளைச் சமூகக் கற்றலுக்குப் பயன் படுத்திய சிந்தனையாளராக இருந்தவர் ஹெர்பர்ட் ஸ்பென்னர். உயிரியல்பரமான பரிணாமம் போன்றே மனிதசமூகவும் வித்தியாசமான நிலைகளில் பரிணாமப்பட்டு இன்றைய நிலையில் வந்து சேர்ந்தது என அவர் விளக்கினார். கார்ல்மார்கஸ், எமைல் துர்கிம், மாக்ஸ் வெம்பர் முதலான அனேக சிந்தனையாளர்கள் சமூகவியலுடைய வளர்ச்சிக்கு முக்கிய நன்கொடைகளை வழங்கியவர்களாவர்.

## சமூகவியல் இந்தியாவில்

ஆரம்பக் காலச் சமூகவியலாளர்களுடைய முயற்சிகளிலிருந்து தான் சமூகவியல் பல நாடுகளிலும் பரவியது. இந்தியாவில் இருபதாம் நூற்றாண்டினுடைய தொடக்கத்திலேயே சமூகவியல் கற்றல் ஆரம்பமானது. பம்பாய் பல்கலைக் கழகத்தில்தான் முதலாவதாக சமூகவியல் கற்றல் பிரிவு ஆரம்பமானது. ஜி. எஸ். குரே, எம். என். ஸ்ரீனிவாஸ், டி. பி. முகர்ஜி போன்றவர்கள் இந்தியாவின் சமூகவியல் கற்றலுக்கு முக்கிய நன்கொடைகள் அளித்தவர்களாவர்.



ஜி.எஸ்.குரே



எம்.என்.ஸ்ரீனிவாஸ்



டி.பி.முகர்ஜி

## சமூகவியல் என்றால் என்ன

**மனிதவாழ்க்கையின் சமூகத் தன்மைகளைக் குறித்து நடத்துகின்ற அறிவியல் முறைக் கற்றலே சமூகவியல்.**

மேலே கொடுக்கப்பட்டுள்ள சமூகவியலினுடைய வரையறையில் இருந்து என்னென்ன விஷயங்கள் தெளிவுபடுத்தப்படுகிறது?


- சமூகவியல் மனிதவாழ்க்கையைக் குறித்துக் கற்பிக்கிறது
- 
- 

மனிதனுக்கும் அவனுடைய சுற்றுச்சூழலுக்கும் இடையே உள்ள பரஸ்பரத் தொடர்புகளைக் குறித்த அறிவியல் நிலையிலான கற்றலே சமூகவியல். அதனால் சமூகத்தைப் பற்றிய ஒருங்கிணைந்த கற்றலாகச் சமூகவியல் கணக்கிடுகின்றனர்.

## சமூகவியல் கற்றல் -எதற்காக?

- சமூகத்தைப் பற்றிய சரியான கருத்துக்களை உருவாக்கப் பயன்படுகிறது.
- சொந்த சமூகத்தையும் பிற சமூகத்தையும் பற்றி உண்மையாகப் புரிந்து கொள்ள உதவுகிறது.
- தனிமனிதனுக்கும் சமூக நிறுவனங்களுக்குமிடையே உள்ள உறவைப் புரிந்து கொள்ள உதவுகிறது.
- சமூகப் பிரச்சினைகளைக் குறித்து நுணுக்கமாகக் கற்றல்.
- சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவுகிறது.
- சமூகத்திட்டமிடலுக்கும் வளர்ச்சிக்கும் பயன்படுகிறது.
- பின்தங்கிய பிரிவினர்,சுரண்டப்படுபவர், பிரிவினைக்கும், கொடுமைப்படுத்தலுக்கும் உட்பட்டவர்கள், போன்றவர்களைக் குறித்த கற்றல் சமூகநலப் பணிகளுக்கு வழிகாட்டுவதாக அமைகிறது.

**சமூகவியல் கற்றலின் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடல் செய்யவும்.**



## சமூகவியலின் கற்றல் பகுதிகள்

சமூகவியலின் பரவல் மிகப் பரந்து பட்டதாகும். தனிமனிதனுக்கும் நிகழ்வுகளுக்கும் இடையே உள்ள தொடர்பின் பகுப்பாய்விற்கு மட்டுமல்ல தேசிய பிரச்சினைகளான வேலையில்லாத் திண்டாட்டம், சாதிச் சண்டை, கிராம மக்களின் பிரச்சினைகள், வறுமை, போன்றவற்றை மையமாகக் கொண்ட கற்றலும், சமூகவியலின் பகுதிகளாகும். இவ்வாறு சமூகவியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுகின்ற முக்கிய பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவையாகும்

- சமூக நிறுவனங்கள்
- சமூகச் சங்கங்கள்
- சமூக உறவுகள்
- சமூகமயமாக்கல்
- சமூகக் கட்டுப்பாடு
- சமுதாயங்கள்
- சமூக மாற்றம்
- சமூகப் பிரச்சினைகள்
- 
- 

இத்தகைய கருத்துப் பகுதிகளைக் குறித்துள்ள அறிவியல் தேடல்களே சமூகவியலினுடைய கற்றல் பகுதியில் வருகின்றன

## சமூகவியலின் கற்றல் முறைகள்

கல்வி அளவிலும் நடைமுறையிலும் உள்ள தேவைகளை முன்வைத்து இன்று உலகமெங்கும் சமூகவியல் கற்றல்கள் நடந்து வருகின்றன. இத்தகைய கற்றலுக்காக சமூகவியல் வேறுபட்ட கற்றல் முறைகளைப் பயன்படுத்துவதுண்டு அவற்றுள் சிலவற்றை ஆய்வு செய்யலாம்.

## சமூகக்களஆய்வு

நீங்கள் மக்கள் தொகைக் கணக்கெடுப்பைப் பற்றி கேள்விப்பட்டிரிப்பீர்களல்லவா?.

இந்தியாவில் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது? மக்கள் தொகை கணக்கெடுப்பின் தனித்தன்மைகள் என்னென்ன

நாட்டின் மொத்த மக்களைக் குறித்துள்ள விபரங்கள் திரட்டப்படும் ஒரு வகைக் களஆய்வே சென்ஸஸ் அல்லது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு. சமூக நிகழ்வுகள் குறித்து படிப்பதற்கு மிகவும் பொருத்தமான ஒரு கற்றல் முறையே களஆய்வு. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழு மக்களிடமிருந்து சேகரித்த விவரங்களின் அடிப்படையில் கற்றல் விஷயம் குறித்து ஒருங்கிணைந்த கண்ணோட்டம் உருவாவதற்கு களஆய்வு துணைபுரிகிறது பெரும்பகுதி மக்களிலிருந்து தகவல் சேகரிக்க இயலுகின்ற கற்றலில் தான் கள ஆய்வுமுறை பயன்படுத்தப்படுகிறது.

சமூகவியல் கற்றல்களில் பலவேளைகளிலும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடைமுறையானது அல்ல. காரணம் கற்றலுக்கு உட்படுத்துகின்ற மொத்த நபர்களிலிருந்தும் தகவல்கள் சேகரிப்பது இல்லை. அவர்களிடமிருந்து தான் தகவல் சேகரிப்பு நடத்தப்படுகிறது. இதுபோன்ற கற்றல்களை **மாதிரி ஆய்வு** என அழைக்கின்றனர்.

ஆய்வில் தகவல்களைச் சேகரிக்க பல வழிமுறைகளைப் பயன்படுத்துவது உண்டு சமூக ஊடகங்கள் வாயிலாகவும், தொலைபேசி வாயிலாகவும் பலவிதமான ஆய்வுகளை நடத்துவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா. ஆனால் சமூகக் கள ஆய்வில் தகவல்களைச் சேகரிக்க சாதாரணமாக முன்னதாகவே தயாரித்த வினாநிரல்கள் பயன்படுத்துவதுண்டு.

தகவல் சேகரிப்பிற்காக ஆய்வாளர்கள் பயன்படுத்தும் கேள்விகளின் பட்டியலே **வினாநிரல்** ஆகும். இவ்வினா நிரலை வழங்கிக் கொண்டுதான் தகவல் சேகரிப்பு நடத்தப்படுகிறது. கற்றலுக்கு உட்படுத்தப்படுபவர்களுக்குத் தான் இவ்வினா நிரல் கொடுக்கப்படுகிறது. அவர்கள் நிரப்பி அளித்த தகவல்களின் அடிப்படையில் தான் கற்றல் நடத்தப்படுகிறது.

*உங்கள் பள்ளிக்கூட மாணவர்கள் வாசிக்கும் பழக்கத்தைப் பற்றி ஒரு கள ஆய்வு நடத்த வேண்டும் என நினைக்கவும். அதற்கான வினாநிரலில் எவையெல்லாம் உட்படுத்தலாம். எந்தத் தகவல்களைச் சேகரிக்கலாம் என முன்னதாகாவே தீர்மானிக்கலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களைச் சேகரிக்கலாம்.*

- *பொதுவாக வாசிக்கும் பழக்கமுள்ளவர்கள் எத்தனை சதவீதம்?*
- *பொதுவாக வாசிக்கப்படும் நூல்களும் இதழ்களும்.*
- *செய்தித்தாள்களை வாசிப்பதற்கு செலவிடப்படும் சாரசரி நேரம் எவ்வளவு?*
- *புத்தகம் வாசிப்பதற்கு ஒரு வாரத்தில் எவ்வளவு நேரம் செலவிடப்படுகிறது.*
- *வயதுப் பிரிவு கணக்கிட்ட வாசிப்பு.*

*மேலே கூறப்பட்ட தகவல்கள் கிடைப்பதற்கு துணைபுரியும் விதமாக ஒரு வினாநிரல் தயாரிக்கவம்.*



## நேர்காணல்




செய்தி ஊடகங்களில் நடத்தப்படுகின்ற நேர்காணல்களைக் கவனிப்பீர்களல்லவா? சமூகவியலில் தகவல் சேகரிப்பிற்குப் பயன்படுத்தக் கூடிய முக்கியமான ஒரு முறையே இது. ஆய்வாளருக்கும் ஆய்வுக்கு உட்படுபவருக்கும் இடையேயான உரையாடலே நேர்காணல். தனிமனிதர்களின் மனநிலை கண்ணோட்டம், நம்பிக்கை, வாழ்க்கைமுறை போன்றவைகளை நுணுக்கமாக அறிவதற்கும் பகுப்பாய்வு நடத்துவதற்கும் பயன்படுத்தும் கற்றல் முறையே நேர்காணல். நேர்காணலில் சில விஷயங்களைக் கவனிக்க வேண்டும்

- தேவையான நபர்களைக் கண்டுபிடித்தல்.
- சேகரிக்க வேண்டிய தகவல்களப் பற்றி கருத்து அடைதல்.
- பொருத்தமான கேள்விகளைத் தயாரித்தல்.
- பயன்தரும் கேள்விகளைத் தயாரித்தல்
- நேரம் ஒழுங்கு படுத்துதல்
- கிடைத்த விவரங்களை வரிசைப்படுத்தலும் அறிக்கை தயாரித்தலும்.

நேர்காணலுக்கும் வினாநிரலுக்கும் இடையே சில வேறுபாடுகள் காணப்படுகிறது. அவற்றை ஆய்வு செய்யலாம்.

| நேர்காணல் | வினாநிரல் |
|---|---|
| • தகவல்கள் வாய்மொழியாகச் சேகரிக்கப்படுகிறது<br>• ஆய்வாளர் தகவல்களைக் குறிப்பிடுகிறார்.<br>•<br>• | • தகவல்கள் குறிப்பிடப்பட்டு வழங்கப்படுகிறது.<br>• ஆய்வுக்கு உட்படுபவர் கள் தகவல்களை குறிப்பி கின்றனர்<br>•<br>• |

**உங்கள் பகுதியில் சுற்றுப்புறம் மாசடைவதைப் பற்றி மக்கள் பிரதிநிதியுடன் நேர்காணல் நடத்தவும்.**



## உற்றுநோக்கல்

எல்லா அறிவியல் ஆய்வுமுறைகளைப் போலவே சமூகவியல் கற்றலில் அடிப் படையான முறையே உற்றுநோக்கல் ஆகும். நேர்காணல் போன்ற முறைகள் நடைமுறைக்கு வராத வேளைகளில் உற்றுநோக்கலுக்கு முக்கிய இடம் உண்டு. காணவும் கேட்கவும் அனுபவிக்கவும் செய்கின்ற விஷயங்கள் மெய்யாகவே குறிப்பிடப்படும் முறையே உற்றுநோக்கல் ஆகும். நேரடியாகச் சேகரிக்கின்ற இது போன்ற தகவல்கள் சரியான மதிப்பிடலுக்குத் துணைபுரிகிறது. உற்றுநோக்கல் இரண்டு வகைகளாகக் காணப்படுகிறது.

1. பங்களிப்பு உற்றுநோக்கல்
2. பங்களிப்பற்ற உற்றுநோக்கல்

ஆய்வாளர் கற்றல் பிரிவிலிருந்து நேரடியாக தகவல் சேகரிக்கும் முறையே பங் களிப்பு உற்றுநோக்கல். சமூகயலில் மிகவும் பிரபலமான ஒரு முறையேஇது. சமூகவியலாளர் கற்றலுக்கு உட்படுத்துகின்ற குழுவில் தங்கி அவர்களின் வாழ்க் கையைப் பற்றி நேரடியாக புரிந்து கொள்ளும் முறையே பங்களிப்பு உற்றுநோக் கல். இதற்காக ஆய்வாளர் அவர்களது மொழி, கலாச்சாரம் போன்றவற்றைக் கற்று அவர்களின் தினசரி வாழ்க்கையில் பங்காளியாகவும் வேண்டும். இதன் வாயி லாக வெளிப்படாத பழக்கவழக்க முறைகளைக் கூட கற்றலுக்கு உட்படுத்த இய லுகிறது. குழுத்தேடலை **Filed work** எனவும் குறிப்பிடுவர். ஆரம்பக்கால சமூ கத்தைப் பற்றிய கற்றலுக்காக மானிடவியல் (Anthropology) என்னும் முறை அதி கமாகப் பின்பற்றப்பட்டிருந்தது.

தனித்த உற்றுநோக்கலில் சமூகவியாலாளர் கற்றல் குழுவினருடன் தங்கி கற்றல் நடத்துவதில்லை. பதிலாக வெளியிலிருந்து உற்றுநோக்கல் நடத்துகிறார்.

உங்கள் பகுதியிலுள்ள ஒரு பொருளாதார நிறுவனத்தைப் ( எ.கா. வங்கி, தொழிற்சாலை, சந்தை) பார்வையிட்டு உற்றுநோக்கலின் வாயிலாக அவற்றின் செயல்பாட்டைக் குறிப்பிடலாம்.



## தனிநபர் ஆய்வு

*சமூக அறிவியலின் பல் வேறு கற்றல் முறைகளின் எடுத்துக்காட்டுகளை சேக ரித்து பவர் பாயிண்ட் பிர சென்டேசன் தயாரிக்கவும்*




அபூர்வமும் வேறுபட்டதுமான சமூக நிறுவனங்களைப் பற்றியும் பிரச்சினைகளைப் பற்றியும் ஆழமாகப் படிப்பதற்கு தனிநபர் ஆய்வு துணை செய்கிறது. இது போன்ற கற்றல்கள் நுண்ணியதும் ஒருங்கிணைந்ததுமாகக் காணப்படும். இந்தக் கற்றல் முறையைப் பயன்படுத்தி கற்றலுக்கு உட்படுத்துகின்ற விஷயத்தை கேஸ் எனவும் கூறுவர். கேஸைப் பற்றிய விரிவான கற்றலே தனிநபர் ஆய்வு ஆகும். சமூக அறிவியல் தகவல் சேகரிப்பிற்கு தனிநபர் ஆய்வையும் பயன்படுத்தலாம்.

நாளுக்கு நாள் சிக்கல்கள் நிறைந்து கொண்டிருக்கும் இன்றைய சமூகத்தின் பல் வேறு தன்மைகளைப் பற்றி ஆழமாகவும் விரிவாகவும் கற்பதற்கும் சமூகவியல் மேற்கூறிய பல்வேறு ஆய்வுமுறைகளைப் பயன் படுத்துகிறது.

சமூகத்தின் அன்றாடச் செயல்முறைகளில் பயன்படுத்த இயலுகின்ற அறிவியல் பிரிவாக சமூகவியல் வளர்ந்திருக்கிறது. ஆய்வுக் கற்றல்களில் பயிற்சி பெற்ற சமூக அறிவியலாளர்களை ஆட்சி- திட்டமிடல் துறைகளில் தேவையாகிறது. வாணிபம், நகரத்திட்டமிடல், சமூக நன்மை, விளம்பரம், தகவல் தொடர்பு, கல்விச் செயல்பாடுகள் போன்ற பல்வேறு துறைகளில் சமூகவியல் அறிவியலுக்கு பயன்பாட்டு வாய்ப்புகளுண்டு.

வாணிபம், நகரத்திட்டமிடல், செய்தித் தொடர்பு கல்விச் செயல்பாடு, சமூக நலன், விளம்பரம் போன்ற துறைகளில் ஆட்சித் திட்டமிடல் துறையில் பயிற்சி பெற்ற சமூக அறிவியலாளர்களின் வாய்ப்புகள் எந்த அளவுக்குக் காணப்படுகிறது என கண்டு பிடிக்கவும்.

சமூகவியலில் சமூக வாழ்க்கையைப் பற்றி அடிப்படையான ஒரு கருத்து உருவாக்கவும் அது வழியாக நமது கண்ணோட்டத்தை விரிவாக்கவும் துணை செய்கிறது.




NT-645-10-SOC.SCI.-I-10-T-VOL.2

## மதிப்பிடலாம்

- படைப்பாற்றலும் சமூக அறிவியல் கற்றலும் எந்தெந்த முறைகளில் வேறுபட்டுக் காணப்படுகிறது.
- சமூகவியல் என்றால் என்ன? எதற்காக? ஆரம்பகால சமூக அறிவியல் சிந்தனையாளர்கள் யார்? யார்?
- சமூகவியலின் முக்கியமான துறைகள் யாவை?
- சமூகவியல் கற்றலின் பயன்கள் யாவை?
- சமூகவியல் கற்றல் முறைகளான சமூக ஆய்வு சமூகத்தைப் புரிந்து கொள்ள எவ்வாறு துணைபுரிகிறது.
- உற்றுநோக்கலுக்கும் நேர்காணலுக்குமிடையேயான வேறுபாடுகள் யாவை?
- உங்களது பள்ளிக்கூடத்தில் உங்களது நண்பர்கள் எதிர்கொள்ளும் பய ணப்பிரச்சினைகளைப் பற்றி தகவல் சேகரிக்கப் பத்து கேள்விகளாவது அடங்கிய வினா நிரல் தயாரிக்கவும்.
- சமூகவியலின் பயன்பாட்டு வாய்ப்புகள் யாவை?

## தொடர் செயல்பாடுகள்

- வயோதிகர்களின் பிரச்சினையைப் புரிந்து கொள்ள அவர்களோடு நேர் காணல் நடத்தி அறிக்கை தயாரிக்கவும்.
- சமூகவியலின் சிந்தனையாளர்களின் படங்களைச் சேகரித்து படத்தொ குப்பு தயாரிக்கவும்.

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

## இந்திய ரூபாய் நோட்டுகளின் முக்கியச் சிறப்புகளைப் பற்றி அறிந்துகொள்ளுங்கள்...

நாம் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்தும் ரூபாய் நோட்டுகளைப் பற்றி நன்கு அறிந்துகொள்ளுதல் அவசியமாகும். சரியான ரூபாய் நோட்டுகளுக்கு மட்டுமே உரிய சிறப்புத்தன்மைகள் பல உள்ளன. அவற்றைப் பற்றி நாம் அறிந்து கொள்ளுதல் ரூபாய் நோட்டுகளைப் பயன்படுத்தும்போது ஏற்படக்கூடிய ஏமாற்றுதல்களில் சிக்காதவாறு நமக்கு விழிப்புணர்வைத் தருகிறது.

- **காகிதம்**

  நோட்டுகள் அச்சடிக்கப்படுவது தரம் மிக்க 'ராக்' எனப்படும் காகிதத்தில் ஆகும். புதிய நோட்டுகளை நாம் தட்டிப் பார்த்தால் ஒரு தனித்த ஒலியைக் கேட்கலாம்.

- **நீர் அடையாளம்**

  நோட்டின் இடப்பக்கத்தில் அச்சடிப்பு இல்லாத பகுதியில் அசோகத் தூண் அல்லது மகாத்மா காந்தியடிகளின் அருகில் ஒரு நீர் அடையாளம் காணப்படும். இதன் அருகில் நோட்டின் இடப்பக்கத்தில் சிறு மலர்களின் படங்கள் உள்ளன. ஒளியில் வைத்துப் பார்த்தால் அவை அனைத்தும் ஒரே ஒரு மலர் போல் காட்சியளிக்கும்.

- **பாதுகாப்பு நூல்**

  ஐந்து ரூபாய் மற்றும் அதற்குக் கூடுதலான மதிப்புள்ள நோட்டுகளில் பாதுகாப்பு நூல் ஒன்று காணப்படும். 2000 அக்டோபர் மாதத்தில் வெளியிடப்பட்ட 1000 ரூபாய் நோட்டில் RBI ஆயிரம் என அடையாளப்படுத்திய பாதுகாப்பு நூல் முன் பக்கத்தில் ஒன்றிடைவிட்டு கோடுகள் போலவும் மறுபக்கத்தில் முழுமையாக உள்ளடங்கியும் காணப்படும். ஆனால், 100 ரூபாய் மற்றும் 500 ரூபாய் நோட்டுகளின் பாதுகாப்பு நூலில் RBI என்பது மட்டுமே காணப்படும்.

- **மறைந்து நிற்கும் பிம்பம்**

  மகாத்மா காந்தியடிகள் படம் பதித்த 20 ரூபாய் முதல் 1000 ரூபாய் நோட்டுகளின் முன் பக்கத்தில் மகாத்மா காந்தியடிகள் படத்தின் வலப் பக்கத்தில் உள்ள செங்குத்தானப் பட்டையில் நோட்டின் மதிப்பு எண் வடிவத்தில் மறைந்திருக்குமாறு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

- **நுண் எழுத்துகள் (Micro lettering)**

  5 ரூபாய் மற்றும் 10 ரூபாய் நோட்டுகளின் மகாத்மா காந்தியடிகளின் படத்திற்கும் செங்குத்தான பட்டைக்கும் இடைப்பகுதியில் உருப்பெருக்கிக் கண்ணாடியால் மட்டுமே காணக்கூடிய விதத்தில் மிகச் சிறு எழுத்துகளில் RBI என்று எழுதப்பட்டிருக்கும்.

- **இன்டாகிளியோ அச்சடிப்பு**

  மகாத்மா காந்தியடிகள் பரம்பரைச் சார்ந்த 20 ரூபாய் முதல் மதிப்புள்ள நோட்டுகளில் இன்டாகிளியோ ( தடித்துக் காணப்படும் விதம்) சிறப்புத்தன்மையுடன் அச்சடிக்கப்பட்டுள்ளன.

- **ஒளிர்தல்**

  நோட்டுகளின் வரிசைஎண் ஒளிரும் மையினால் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

- **பார்வையில் மாற்றம் வருத்தும் மை**

  நவம்பர் 2000 த்திலும், அதற்குப் பிறகும் வெளியிடப்பட்ட 500, 1000 ரூபாய் நோட்டுகளில் முன் பக்கத்திலுள்ள 500,1000 என்ற எண்கள் நேராகப் பார்த்தால் பச்சை நிறத்திலும், சிறிது சாய்வாகப் பார்த்தால் நீல நிறத்திலும் காணப்படுகின்றன.

*Printing and circulation of forged notes are offences under Sections 489A to 489E of the Indian Penal Code and are punishable in the courts of law by fine or imprisonment or both.*